# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-18 Issue-8 ஆகஸ்ட்-2025 முஹர்ரம்-ஸபர் 1447




## ஈரான் - இஸ்ரேல் போர்...
## இஸ்ரேல் மறைத்த தோல்விகள்

2006 மும்பை தொடர் குண்டுவெடிப்பு

## வழக்கு தீர்ப்பு...

அன்றே சொன்னார்..!

எஸ்.எம்.முஷ்ரிஃப் IPS



காமராஜர்-123. நினைவுக் கட்டுரை 1

بسم الله الرحمن الرحيم

# வைகறை வெளிச்சம்

ஆகஸ்ட்-2025 | முஹர்ரம்-ஸபர் 1447

வரலாற்றுத் தடத்தில் ...
இஸ்லாமியப் பார்வையில்...
நிகழ்வுகளின் உண்மையான மறுபக்கம்...
படியுங்கள்... பரப்புங்கள்...
பாதுகாத்து வையுங்கள்...


- தனிஇதழ் - ரூ. 40
- ஆண்டுச் சந்தா - உள்நாடு - ரூ. 480
- வெளிநாடு - ரூ. 5000

**வைகறை வெளிச்சம்**
சந்தா செலுத்துங்கள்

VAIGARAI VELICHAM
62889509

Collect payments from any of these apps


மனிதர்களே!
நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.

அல்குர்ஆன்-49:13.

## உள்ளே...!





மும்பை தொடர் குண்டுவெடிப்பு வழக்கு 2006 19 ஆண்டுகள் கழித்து 12 முஸ்லிம்கள் விடுதலை..! - 20

டெல்லி கலவரம் (தொடர்) - 41

இந்தியாவில் முஸ்லிம்கள் - 46

சிலுவைப் போர் 2.0 - 50

மகளிர் மன்றம் - 54

ஈத் மிலன் (பெருநாள் சந்திப்பு) - 56

மருத்துவம் - 60

தலையங்கம் - 62


All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts only




# ஈரான் - இஸ்ரேல் போர்... இஸ்ரேல் மறைத்த தோல்விகள்

## ஈரான் அறிமுகம்

ஈரான் அன்றைய பாரசீகத்தின் முக்கியப்பகுதி. அன்றைய உலகில் இரண்டு வல்லரசுகள் இருந்தன. ஒன்று பாரசீக வல்லரசு. பிரிதொன்று ரோமப் பேரரசு.

- இந்த வல்லரசுகள் இரண்டுமே இஸ்லாத்தை முன் வைத்துப் போராடிய முஸ்லிம்களால் வெற்றிகொளள்ளப்பட்டன. பாரசீகத்திற்கு இஸ்லாத்தைக் கொண்டும் செல்லும் பெரும்பணி பெருமானார் (ஸல்) அவர்களில் காலத்தில் தொடங்கப்பட்டது.

இரண்டு வல்லரசுகளையும், வெற்றி கொண்டது கலீபா உமர் பின் அல்ஹத்தாப் (ரழி) அவர்களின் காலத்தில்தான்.



பாரசீகப் பேரரசின் மையப்பகுதியே ஈரான். அது வெற்றிகொள்ளப்பட்ட பின் இஸ்லாத்தின் கொள்கைகள், நீதி நெறிமுறைகள் ஒழுக்க மாண்புகள், இவற்றால் கவரப்பட்ட மக்கள் இஸ்லாத்தில் அணி, அணியாக இணைந்தார்கள். பாரசீகம் இஸ்லாத்தின் மையப் பகுதிகளில் ஒன்றாகின.

இஸ்லாத்தின் வரலாற்றில் நபித்துவததின் ஆட்சிக்குப் பின் கிலாபத்-இன் ஆட்சி, அதன்பின் மன்னராட்சி என்றொரு நிலை வந்தது. இதில் ஈரானிலும் மன்னராட்சி அமைந்தது.

உலக அரங்கில் அமெரிக்கா தலை தூக்கியபோது, ஈரான்-மன்னர்கள், அமெரிக்காவின் விசுவாசிகளாக மாறிப்போனார்கள்.

ஈரானில் கொட்டிக்கிடந்த எண்ணெய் வளம், அமெரிக்கா முதலான ஆதிக்க சக்திகளுக்கு வாரி வழங்கப்பட்டன. இதனால், உலகெங்கும் மக்களாட்சியை தூக்கிப் பிடிக்கின்றோம் என அரற்றிக்கொள்ளும் அமெரிக்கா ஈரானில் முதலாய எண்ணெய் வளம் கொட்டிக்கிடக்கும் நாடுகளில், மன்னராட்சியையே தூக்கிப்பிடிக்கும். அந்த நாட்டு மக்கள், தான், கொள்ளையடிக்கும். எண்ணெய் முதலாய வளங்களை கண்டுகொள்ளாமல் பார்த்துக்கொள்ளும்.

ஈரானில் 1953, ஓர் மக்கள் எழுச்சி மன்னராட்சியை தூக்கி வீசிவிட்டு மக்களாட்சியைக் கொண்டு வந்தது. மக்கள் இந்தத் தேர்தலில் முக்கிய முழக்கமாக இருந்தது. ஈரானின் எண்ணெய் வளங்களை அரசுடையாக்கிட வேண்டும் என்பதே.



vaigarai velicham official

அமெரிக்கா பல சதிகள் மூலம், அந்த மக்களாட்சியை வீழ்த்தியது. மன்னர் ஷாப்ஃஹலவியின் மன்னராட்சியை மீண்டும் கொண்டு வந்தது. ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் ஈரானின் எண்ணணய் வளங்கள் அரசுடைமையாவது தடுக்கப்பட்டது. அந்த வளங்களை அமெரிக்கா தனதாக்கிக் கொண்டது.

இதுவும் அதிக நாட்கள் நீடித்திடவில்லை. 1970 முதலே இமாம் கொமைய்னி அவர்கள் மன்னராட்சி, அது அடிக்கும் கொள்ளை, அதை மிரட்டி அமெரிக்கா அடிக்கும் கொள்ளை, இவை அனைத்தையும் மக்கள் மன்றத்தில் எடுத்து வைத்தார்கள்.

உலகில் இரண்டாவதாக அதிக எண்ணெய் வளத்தைக் கொண்ட ஈரான் அமெரிக்காவிடம் கடன்பட்டுக் கிடக்கின்றது எப்படி? என்ற வினாவை மக்கள் முன் வைத்து விடையும் கண்டார். மன்னர்களின் ஆடம்பரம்தான் காரணம் என்பதை பொட்டில் அறைந்தார்போல் எடுத்துக் காட்டினார்கள். அத்தோடு அமெரிக்கா அடித்துக் கொண்டிருக்கும், கொள்ளைகளையும் பட்டியல் போட்டார். ஈரானில் இஸ்லாமிய ஆட்சியை நிலை நாட்டிட வேண்டும். ஈரானின் எண்ணெய் வளங்களை அரசுடைமை ஆக்கிட வேண்டும் என மக்களை ஒன்று திரட்டினார்.

இஸ்லாத்திற்கும் நம்மீது வீற்றிருக்கும் மன்னராட்சிக்கும், எள்ளின் முளை அளவுகூட சம்மந்தமில்லை என்பதை எடுத்துக் காட்டினார்கள். இந்த மன்னராட்சியை வேரோடு வீழ்த்திட வேண்டும். அந்த இடத்தில் இஸ்லாத்தின் ஆட்சியை நிலைநாட்டிட வேண்டும் என்றார்.

இமாம் ஆயத்துல்லாஹ் ரூஹுல்லாஹ் அவர்கள் எப்படி மன்னராட்சியையும் அதன் கொள்கைகளையும் கொடூரங்களையும் எதிர்த்தார்களோ அதே வேகத்தில் அமெரிக்காவையும் அதன் கொள்ளைகளையும், எதிர்த்தார்கள். ஓர் எழுச்சியை - இஸ்லாத்தை அடிப்படையாக்கிக் கொண்ட எழுச்சியை முன் வைத்தார்கள்.

மக்களின் ஏகபோக ஆதரவோடு இஸ்லாமிய ஆட்சி 1979 அமைந்தது.

ஷாபஃஹ்லவி வம்சாவழி ஆட்சி (Phalavi Dynasty) என்பது மாற்றப்பட்டு (1979இல்) ஈரான் இஸ்லாமியக் குடியரசு என்றானது. அன்றுமுதல் அமெரிக்கா ஈரானில் வீற்றிருக்கும், இஸ்லாமிய அரசை வீழ்த்தியே ஆக வேண்டும். அங்கே மீண்டும் மன்னராட்சியைக் கொண்டுவந்திட வேண்டும் என்று பல சதித் திட்டங்களை தீட்டி நிறைவேற்றி வருகின்றார்கள்.

அவர்களின் எடுபிடி இஸ்ரேல் வழியாகத்தான் இதை நிறைவேற்றி வருகின்றார்கள்.

இதேபோல் எல்லா அரபுநாடுகளையும் மிரட்டி தங்கள் கைப்பிடிக்குள் வைத்துக் கொள்ளத்தான் இஸ்ரேலை ஆதரிக்கின்றார்கள்.

இந்த நிலை ஈரானின் எதிர்காலத்திற்கு பல திட்டங்களை வகுத்துத் தந்தார்கள் இமாம் கொமைய்னி அவர்கள். அதில் ஒரு பகுதியாகத்தான், பாலஸ்தீனை முழுமையாக விடுதலை அடையச் செய்ய வேண்டும். அதற்காக இலக்கு வைத்து வேலை செய்ய வேண்டும். நீங்கள் பாலஸ்தீன் மீட்பைப் பற்றிப் பேசிடும்போது அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் உங்களை அழிக்க வரும். அமெரிக்காவையும் அதற்குப் பக்கத்துணையாக வரும் ஐரோயப்பிய நாடுகளையும் அறிவால் வென்றிட வேண்டும்.

இதன்பொருள் அறிவைக் கொண்டு ஆயுதங்களை தயார் செய்ய வேண்டும். நீங்கள் உங்கள் எதிரிகளுக்கு எதிராக இயன்ற அளவு பலத்தை சேகரித்து வைத்துக் கொள்ளுங்கள். இதனால் உங்களுடைய எதிரிகளையும் அல்லாஹ்வின் எதிரிகளையும் நீங்கள் அறியாத இன்னும்சில எதிரிகளையும் அச்சமடையச் செய்யலாம் என்பது அல்லாஹ்வின் கட்டளை (8:60) என்பதை அழுத்தமாகப் பதிய வைத்தார்கள்.

அத்தோடு, தான் ஏற்படுத்திய இஸ்லாமிய எழுச்சிப் பட்டுப்போகாமல், இருக்க அதனைப் பாதுகாக்கின்ற படையொன்றையும் ஏற்படுத்தி விட்டுச் சென்றார்கள்.

அதுதான் இஸ்லாமிய எழுச்சியின் பாதுகாப்புப் படை (IRSC)

ஏனெனில் அமெரிக்காவும் அதற்குப் பக்கத் துணையாக வரும், ஐரோப்பிய நாடுகளும் வெறும் ஆயுதங்களோடு மட்டும் வரமாட்டார்கள். அவர் இஸ்லாத்தின் வழிகாட்டுதல்களைப் புறக்கணித்துவிட்டு, நவீனம் என்ற பெயரில் வேற்றுக் கொள்கை களையும், மாற்று வழிகளையும் மக்களுக்குக் கவர்ச்சியாகக் காட்டிட சதி செய்வார்கள்.

இஸ்லாமிய நெறிமுறைகளை நாம் மக்களிடம் தொடர்ந்து கொண்டு சென்றிடவில்லை என்றால், மக்கள் இந்தப் புரட்சிக்கு எதிராக இன்னொரு புரட்சியைச் செய்வார்கள். நவீனம் "Modernism-Moderate" என்ற பெயர்களில் என எச்சரித்தார்கள் இமாம் கொமைய்னி அவர்கள்.

இதனால் ஷாபஃஹல்வி மன்னராட்சியில் இருந்த கல்விக் கொள்கைகளை தூக்கி வீசினார். பாடத் திட்டங்கள் பாட நூல்கள் இவற்றையும் தூக்கி வீசினார்கள். ஒரு வருடம் கல்வி கூடங்களை மூடினார். இஸ்லாமியப் பாடத் திட்டங்களையும், பாட நூல்களையும் உருவாக்கினார். பின்னர் கல்விக் கூடங்களைத் திறந்தார். இன்றைய நாட்களில் ஆப்கானிஸ்தானில் வீற்றிருக்கும் இஸ்லாமிய ஆட்சியும் இதைத்தான் செய்து கொண்டிருக்கின்றது.

இத்தனை ஏற்பாடுகள் எச்சரிக்கை இருந்தாலும் மேலை நாடுகள் பணத்தை அள்ளிக்கொட்டி திறமையான மாணவர்களுக்கு ஊக்கத்தொகை என்ற பெயரிலும், உயர் கல்வி பெயரிலும் மாணவர்களை தங்கள் நாட்டுக்கு அழைத்து - நவீனம் என்ற பெயரில் ஆபாசக் கலாச்சாரத்தை புகுத்தி விட்டார்கள். அங்கே ஹிஜாப்-வுக்கு எதிராகப் பேராடும் பெண்களைத் தயார் செய்து விட்டார்கள்.

இமாம் கொமைய்னி அவர்களின் முக்கிய தோழர்களில் ஒருவரான செய்யீத் அலீ காமினி அவர்கள், இதைக் கட்டுப்படுத்த இயன்றதையெல்லாம் செய்தார்கள்.

ஆனால், மொசாத் போன்ற உளவு அமைப்புகள், இந்த "நவீன" பேசியவர்களிலிருந்து தங்களுகு வேண்டிய ஆட்களை தயார் செய்துவிட்டார்கள்.

இந்தப் போர் - இஸ்ரேலின் - ஈரான் மீதான தாக்குதல்கள், எல்லாப் பிரச்சனைகளையும் ஒன்றுபோல் தீர்த்துவிட்டது.

மொசாத் வளையம் இப்போது முற்றாக சிக்கிக்கொண்டது. ஈரான் வாழ் மக்கள் தங்கள், எதிரி யார், நண்பர்கள் யார் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் புரிந்துகொண்டார்கள்.

ஒரே அணியில் திரண்டு இமாம் - அலீ காமினி அவர்கள் பக்கம் நின்றார்கள். அத்தோடு இஸ்லாத்தை முன் வைத்து இந்த எதிரிகளையும், நயவஞ்சகர்களையும் வெல்ல முடியும் என்பதையும் கண்டு கொண்டார்கள்.

இது ஈரான் பெற்ற இதர வெற்றிகளைவிட உண்மையான வெற்றி!

### அணுசக்தி / அணு ஆயுதம் பற்றி
### இமாம் கொமைய்னி, டாக்டர் யூசுஃப் கர்ளாவி ஆகியோரின் கருத்து...

"அணு ஆயுதம், மனித இனத்தையும் மனித இனத்திற்குப் பயன்படும், புற்பூண்டுகளையும் அழிக்கும் நாசகர ஆயுதம்."

நாம் அணு சக்தியின் அனைத்து ஆற்றல்களையும், அறிந்திட வேண்டும். அணு சக்தியை ஆக்கப்பூர்வமான - அமைதி வழிக்குப் பயன்படுத்திட வேண்டும். அதே நேரத்தில் இஸ்லாத்தின் எதிரிகள், அணு ஆயுதத்தை பெரிதாக பெற்றிருப்பதால் அதையும் நாம் முழுமையாகத் தெரிந்திருக்க வேண்டும். தேவைப்பட்டால் அப்போது இஸ்லாமியக் குடியரசின் இமாம்கள் அணுகுண்டை தயார் செய்திட முடிவு செய்யலாம். அணு பல வெற்றிகளையும் ஈட்டியுள்ளது.

இந்த வெற்றிகளைத் தடுத்திட பல அணு விஞ்ஞானிகளை அவ்வப்போது கொலை செய்து வருகின்றது அமெரிக்காவும் இஸ்ரேலும். அமெரிக்கா தொடர்ந்து பொருளாதாரத் தடைகளை விதித்து ஈராக்கின் சங்கை நெறித்து வருகின்றது.

அத்தனை தடைகளையும் தாண்டி ஈரான் அணுசக்தி, அணுகுண்டு ஆகியவற்றை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது வேகமாக.

**ஈரான் அணு உலைகளுக்குப் பாதிப்பு?**
**அமெரிக்காவின் தாக்குதலால் பாதிப்பு எதுவுமில்லை.**

அமெரிக்கா ஜூன் 22இல் தன்னுடைய சக்தி மிகுந்த B2 - Bunker Buster குண்டுகளை வீசி, ஈரானின் அணு ஆயுத, அணு சக்தி இஸ்ஃபஹ்ஹான் நான்ஸ் ஃபர்டவ் ஆகிய இடங்களிலுள்ள கூடங்களைத் தாக்கியது.

ஆனால், இந்த சேதத்தைத் தவிர எதையும், அதனால் சாதிக்க இயலவில்லை. இதற்கு முன்னால் 2003ஆம் ஆண்டு இதேபோன்றதொரு தாக்குதலை அமெரிக்கா நடத்தியது. அப்போதும் பெரும் சோதாரம் எதுவும் நடந்திடவில்லை.

காரணம், ஈரான் ஒருவகை சிமெண்டை கண்டு பிடித்திருக்கின்றது. இந்த சிமெண்ட்-ஐ கொண்ட தளம், இது போன்ற குண்டுகளை நிலத்திற்கு கீழே விடாமல் தடுத்து விடுகின்றது.

அதுவேதான் இப்போதும் நடந்தது. ஈரானின், மிகவும் முக்கியமான அணு ஆயுத உலை, ‘Fordow” ஃபர்டவ் என்ற இடத்தில்தான் இருக்கின்றது. அதை எட்டும் அளவிலுள்ள குண்டுகளை நாங்கள் இன்னும் கண்டுபிடிக்கவில்லை என்கின்றது அமெரிக்காவின் அதிகாரப்பூர்வமான அறிக்கை. இந்த அறிக்கை அமெரிக்காவின் வெளிவிவகாரத் துறையின், அதிகாரப்பூர்வமான இதழான Foreign Affairs இல் 26.07.2025இல் இடம்பெற்றுள்ளது.

அந்த அறிக்கை மேலும் இப்படிக் கூறுகின்றது.

யூரோனியம், செறிவூட்டலை, அழிக்கும் ஆற்றல் நமக்கிருந்திருந்தால் (அமெரிக்கா வுக்கு) அதனை அழித்திருப்போம். நமக்கும் (அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் தெரியும், யூரோனியம் செறிவூட்டலை நம்மால் அழித்திட இயலவில்லை என்பது.

அதேபோல் அணுகுண்டை தயாரிக்க அறிவுப்பூர்வமாக எந்தத் தடயும் ஈரானுக் கில்லை. No technical barrier to build a bomb if it wills. அது நினைத்தால் ஒரு அணு குண்டை அது செய்துகொள்ளும். யுரோனியம் செறிவூட்டலில், ஈரான் 60 சதவீதத்தி லிருந்து 90% (From 60% to 90%) வீதத்திற்கு வந்துவிட்டது. இதற்கு அது குறைந்த எண்ணிக்கையில் அணு உலைகளைப் (200) பயன்படுத்தினால்போதும். ஆகவே ஈரான் அணு ஆயுதங்களைப் பெறுவதை இராணுவ நடவடிக்கைகளால் தடுத்திட இயலாது. மாறாக, பேச்சு வார்த்தைகளே அதற்குத் தீர்வு.

Foreing Policy - webanag Mehr news agency - 26.7.2025

ஆக, ஈரான் ஆயிரம் தியாகங்களைச் செய்து, தன்னுடைய இலக்கை அடைந்து கொண்டிருக்கின்றது.

**- MGM**

*2025 ஜூலை 13ஆம் நாள் இஸ்ரேல் ஈரானைத் தாக்கியது. இந்தத் தாக்குதல் கடல் வழியாகவும், வான்வழியாகவும் நடந்தது. இந்தத் தாக்குதலுக்காக தன்னுடைய தனிப்படை ஒன்றை ஈராக்-இன் அமெரிக்க தளத்திற்கு மாற்றிக் கொண்டது.*

*வான்வழி தாக்குதலைப் பயன்படுத்தி, ஈரானுக்கு உள்ளே இருந்த இஸ்ரேலின் உளவுத்துறையாகிய மொசாத் முகவர்கள் ஏக காலத்தில், தாக்குதலை நடத்தினார்கள்.*

*இஸ்ரேலின் 200 போர் விமானங்கள், 100 இலக்குகளை ஈரானில் தாக்கின.*



இந்த மொசாத் ஏஜெண்டுகளால் மிகவும் எளிதாக ஈரானின் பல முக்கிய இராணுவ தளபதிகளைக் கொலை செய்திட முடிந்தது.

அதேபோல் ஈரானின் பல அணு விஞ்ஞானி களை குறிப்பாக தேர்ச்சிபெற்ற பல விஞ்ஞானி களைக் கொலை செய்தது.

ஈரானில் பல மோசத் ஏஜெண்டுகள் அதன் இராணுவத்திற்குள் ஊடுருவி இருக்கின்றார்கள் என்பதை ஹிஸ்புல்லாவின் பொதுச் செயலாளர் ஹசன் நசுருல்லாஹ் அவர்கள் கொலை செய்யப் பட்டபோது அல்லது ஷஹீத் ஆக்கப்பட்டபோது ஈரானின் முன்னாள் குடியரசு தலைவர் முஹம்மத், அஹ்மத் நாஜதி அவர்கள் பகிரங்க மாக அவித்தார்கள்.

ஈரானில் 1979இல் இஸ்லாமியப் புரட்சி ஏற்பட்டது. 200 ஆண்டுகளாக நிலை கொண்டி ருந்த மன்னராட்சி முடிவுக்கு வந்தது. புரட்சியை தலைமையேற்று நடத்தியவர் இமாம் கொமைய்னி (ரஹ்) அவர்கள், புரட்சியின் விழுமியங்கள் பட்டுப்போகாமல் பாதுகாத்திட ஒரு புதுப்படையை நிறுவினார். இந்தப் படையின் பெயர் (IRGC-Islamic Revolutionary Guard Corps) இஸ்லாமியப் புரட்சியின் பாதுகாப்புப் படையினர். இந்த சிறப்புப் படையின் முதல் தளபதியாக இருந்தவர் முஹம்மத் அஹ்மத் நஜ்தி. இவர் மொசாத் பற்றி சொல்லி வந்தவை உண்மையாகின.

2025, ஜூலை தாக்குதலுக்குப்பின் மொசாத் என்ற யூத உளவு அமைப்பு ஏற்படுத்திடும் அழிவுகளைப் பற்றி நன்றாக அறிந்துகொண்டது. 12 நாள் போரின்போது 1,000க்கும் மேற்பட்ட மொசாத் ஏஜெண்டுகள் கைது செய்யப்பட் டார்கள். 10,000 முதல் 20,000 வரை ஆளில்லா விமானங்கள் கைப்பற்றப்பட்டன. இவை மொசாத் முகவர்களால் ஈரானுக்குள் கடத்தி வரப்பட்டவை.

இதனால் இஸ்ரேல் டுரோன்களுக்காகப் பிச்சை எடுக்க வேண்டியதாயிற்று.

இதனைத் தொடர்ந்து இன்றளவும் இஸ்ரேல் 200 பில்லியன் டாலர் அளவுக்குப் பின்னே போயிருக்கின்றது. இன்றளவும் 2000 மொசாத் ஏஜெண்டுகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

**Weizmann Insititute of research and development (university)**
**Herzl St,-234, Rohevot - Isreal**

ஈரானின் 12 நாள் தாக்குதலில் இஸ்ரேலுக்கு ஏற்பட்ட பல இழப்புகளுள் ஒன்று தொன்மை காலத்து வேல்ஸ்மேன் நிறுவனம் என்ற ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ஏற்பட்ட இழப்பாகும்.

இது 1934 முதலே இயங்கிவரும் அணு ஆராய்ச்சி மற்றும் இராசயன ஆய்வு நிறுவன மாகும். இதில் பல அரிய உயிரணுக்கள் உட்பட அணுசக்தி அணு ஆயுதம் ஆகியவை பற்றிய அரிய Collections என்ற வேஸ்மேன நிறுவனம் அதனை சேகரிப்புகள் (சேர்த்து வைத்தவை) இருந்தன. அவையும் முற்றாக அழிந்தன.


vaigarai velicham official

உண்மை வெளிவந்த போது, இந்த ஆய்வு மையம் - இஸ்ரேலிய அணு ஆராய்ச்சியில் மிக முக்கியமான பங்கு வகித்த ஒன்று என்பது தெரியவந்தது.

Alok Chen (ஆலன் சென்) என்ற அதன் இயக்குநர், தலைவர் இந்த மையத்தில்தான் Reaserach and Development என்ற ஆயுத ஆராய்ச்சிகளும், புதிய ஆயுத கண்டுபிப்புகளும் நடக்கும் என்பதை ஊர்ஜிதம் செய்தார். இப்போது அத்தனையும் அழிக்கப்பட்டுவிட்டன என ஆதங்கப்பட்டார்.

ஈரானுடைய தாக்குதல் Percision தாக்குதல் என்றார். அதாவது துல்லிய தாக்குதல் என்றார்.

இதன் இன்னொரு பொருள் மனித உயிர்களைப் பறிப்பதல்ல.

இந்த இழப்புகளை எப்போதும், ஈடு செய்திட இயலாது என்றார். அலோக் சென். ஏனெனில், அவற்றை மீண்டும் உருவாக்கிட இயலாது. அப்படியொரு முயற்சியை மேற்கொண்டால் அது இன்னும் 100 ஆண்டுகளின் முயற்சியும் (பல பில்லியன் - பலகோடி டாலர்களும் தேவைப்படும்) இந்த உண்மைகளையெல்லாம் நெதன்யாஹூ மறைத்துவிட்டார். நாங்கள் இந்தப் பேரழிவைப் பார்த்துக் கண்ணீர் வடித் தோம். இதில் ஏற்பட்ட இழப்பின் ஆழத்தை நாம் புரிந்திட இந்தப் பல்கலைக்கழகத்தின் தொன்மையை புரிந்திட வேண்டும்.

இது 1934இல் யூதத் தீவிரவாத அமைப்பாகிய இக்னாக் என்பதற்கான ஆராய்ச்சி நிறுவனம் எனத் துவங்கப்பெற்றது.



இதிலிருந்து பெறப்படும் இயல்பான முடிவு என்னவென்றால் யூதத் தீவிரவாதம் எத்தனை விரிவான திட்டத்தோடும் - தூரநோக்குப் பார்வையோடும் வளர்க்கப்பட்டிருக்கின்றது என்பதைத்தான்.

அன்றே 1934-இலேயே இஸ்ரேலிலுள்ள பல திவிரவாத அமைப்புகள் பாலஸ்தீன பூர்வ குடிகளை வெளியேற்றிடவும், அந்த இடத்தில் குடியமரவும் அவர்கள் மீது ஆயுத தாக்குதலுக்கு ஆராய்ச்சி நிறுவனத்தை நிறுவி இருக்கின்றன.

அதாவது, பாலஸ்தீனை இரண்டாகப் பிரித்து இஸ்ரேல் என்றொரு நாட்டை உருவாக்குவதற்கு 14 ஆண்டுகளுக்கு முன் அந்தத் தீவிரவாத அமைப்பு உருவாக்கிய ஆராய்ச்சி மையம். இப்போது இஸ்ரேலிய இராணுவத்தின் ஒரு முக்கிய பகுதி.

இதை நாம் ஓர் நிறுவனம் என்ற குறுகிய சொற்றொடரில் அடக்கிட இயலாது. அது ஓர் பல்கலைக்கழகம், அளவிற்குப் பெரியது.

அதில் நிருவாக உதவிகளுக்காக மட்டும் 400 பேர் வேலை செய்கின்றார்கள். அதில் ஆராய்ச்சிப் பாடங்களில் - பயிற்சி எடுப்பவர்கள் 952 பேர். பாடம் பயிலும் மாணவர்கள் 1082 பேர். அங்கே முதுகலைப் பட்டப்படிப்பை படித்துக் கொண்டிருப்பவர்கள் 356. முனைவர் பட்டம் படித்துக் கொண்டிருப்பவர்கள் 700 பேர், இப்படி மொத்தம் 3090 பேர் - மாணவர் - ஆராய்ச்சியாளர்கள் என அந்த வளாகத்தில் வாழுகின்றார்கள் இவர்கள் உயர்ந்து நின்ற அடுக்குமாடியில் அடைக்கலம் கொண்டி ருந்தனர்.

இவர்களில் யாரும் இறந்ததாகத் தகவல் இல்லை.

முதல் சங்கொலியிலேயே அவர்கள் பதுங்குக் குழிகளை நோக்கிப் பாய்ந்திருக்க வேண்டும் அல்லது அத்தனை பேரும் அல்லது பெரும்பகுதியினர் இறந்திருக்க வேண்டும். ஆனால், அதுபற்றி இஸ்ரேல் எந்தத் தகவலையும் தந்திட வில்லை. இன்றளவும் தனது மக்களுக்கும், ஊடகங்களுக்கும் வாய்ப்பூட்டுப் போட்டுள்ளது.

அதேபோல் பின்னர் மனம் நொந்து பேட்டி தந்த, அந்த நிறுவனத்தின் இயக்குநர், தலைவர் அலோக் சென் அவர்களும் எதுவும் சொல்லவில்லை.

அவர் - அலோக் சென் தந்த இரண்டு தகவல்கள்

1. அது ஒரு துல்லியத் தாககுதல்

2. நாங்கள் பல்லாண்டுகளாகச் சேகரித்து வைத்திருந்த பொருள்கள் அனைத்தும் சேதமடைந்தன.

ஆராய்ச்சியாளர்களோ, மாணவர்களோ, பணியாட்களோ இறந்ததாகவோ, காயம் பட்டதாகவோ சொல்லவில்லை.

## கடைப்பிடிக்கப்பட்ட இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள்

இது இன்னொரு உண்மையை - இன்னுஞ் சொன்னால் - போரின்போது இஸ்லாமியப் படைகள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க மாண்புகளை - ஒழுக்க நெறிமுறைகளை ஈரான் அப்படியே கடைப்பிடித்திருக்கின்றது என்பதை பறைசாற்றும். அல்லாமல், இஸ்ரேலைப்போல் அப்பாவி மக்களைக் கொன்று குவிப்பது என்ற இலக்கில் இந்த போர் நடத்தப்படவில்லை. அப்படி நடத்தி இருந்தால் பிணமலைகளை டெல்அவீவில், மேற்கு ஜெரூசலத்தில், வைஸ்மென் நிறுவனத்தில் குவித்து உலகுக்குக் காட்சிப்படுத்தி இருக்கலாம். ஆனால் இஸ்லாம் அதை அனுமதிக்கவில்லை.

இதுவே ஈரானின் வெற்றியின் இரகசியம். அல்லாஹ் ஆசியை அங்கீகாரத்தைப் பெற்று விட்ட ஈரானை யாரும் வெல்ல முடியவில்லை என்பதுதான் இதில் புதைந்து கிடக்கும் உண்மை.

இதனால் உலக மக்கள் அனைவரும் ஈரானை பாராட்டுகின்றார்கள். தலைக்குமேல் வைத்து புகழுகின்றார்கள். இந்த ஈரான் - இஸ்ரேல் போரை துணிந்து நின்று நடத்திய இமாம் - ஈரானின் உயர் தலைவர், ஆயாத்துல் லாஹ், நூருல்லாஹ் கொமைய்னி உலகமாக குருவாக, வீரனாய் பார்க்கின்றார்கள், பாராட்டு கின்றார்கள். (அல்ஹம்துலில்லாஹ்)

யாரும் அவர் மீது நீ கொலைகாரன், அநீதியை செய்தவன், அப்பாவிகளையும், பெண் களையும் மழலைகளையும் கொலை செய்தவன்

> **“ வைஸ்மென் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சார்ந்த 3090 பேரையும் ஈரான் கொலை செய்திருந்தால், ஈரான் சுற்றி வளைத்து இப்படியொரு காரணத்தை - விளக்கத்தை உலகுக்குச் சொல்லி இருக்கலாம்.**
>
> **அந்த விளக்கம் - போரை நாங்கள் ஆரம்பிக்கவில்லை. அத்தோடு வைஸ்மென் ஆராய்ச்சி நிறுவனம் அப்பாவி மக்களைக் கூட்டுப்படுகொலை செய்யும் இஸ்ரேலுக்கு ஆயுதங்களை புதிது, புதிதாக கண்டுபிடித்துத் தரும் நிறுவனம், இஸ்ரேலிய தீவிரவாதிகளால் பல லட்சம் அப்பாவி மக்களை கொலை செய்யவும், அவர்களை பூர்வீக வீடுகளிலிருந்து விரட்டவும் இயங்கும் நிறுவனம். போர்க் குற்றங்களின் பிறப்பிடம், மனித இனத்திற்கு எதிராக சதா சர்வகாலமும் இயங்கும் நிறுவனம். ஆகவே ஆள்கொல்லி ஆராய்ச்சிகளில் ஈடுபடுபவர்களைக் கொலை செய்வதுகூடும். ”**

எனக் குற்றம் சாட்டிட - சுண்டு விரலை உயர்த்திட இயலவில்லை.

இந்த யாரும் என்ற சொல்லில் அமெரிக்கா - இஸ்ரேல் - ஈரானை குறைசொல்லி வாழும் ஐரோப்பா - இஸ்லாமோஃபோபியாவை உலகெங்கும் வளர்த்துக் கொண்டிருக்கும் எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், இராணுவ நோக்கர்கள், ஆராய்ச்சியாளர்கள், ஆகியோர் அடங்குவர்.

## நியாயமான காரணங்கள்

வைஸ்மென் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சார்ந்த 3090 பேரையும் ஈரான் கொலை செய்திருந்தால், ஈரான் சுற்றி வளைத்து இப்படியொரு காரணத்தை - விளக்கத்தை உலகுக்குச் சொல்லி இருக்கலாம்.

அந்த விளக்கம் - போரை நாங்கள் ஆரம்பிக்கவில்லை. அத்தோடு வைஸ்மென் ஆராய்ச்சி நிறுவனம் அப்பாவி மக்களைக் கூட்டுப்படுகொலை செய்யும் இஸ்ரேலுக்கு ஆயுதங்களை புதிது, புதிதாக கண்டுபிடித்துத் தரும் நிறுவனம், இஸ்ரேலிய தீவிரவாதிகளால் பல லட்சம் அப்பாவி மக்களை கொலை செய்யவும், அவர்களை பூர்வீக வீடுகளி லிருந்து விரட்டவும் இயங்கும் நிறுவனம்.



போர்க் குற்றங்களின் பிறப்பிடம், மனித இனத்திற்கு எதிராக சதா சர்வகாலமும் இயங்கும் நிறுவனம். ஆகவே ஆள்கொல்லி ஆராய்ச்சிகளில் ஈடுபடுபவர்களைக் கொலை செய்வதுகூடும்.

எல்லாக் காரணக் காரியங்களோடும் இதை உலக மக்கள் ஏற்றுக்கொண்டிருப்பார்கள்.

ஆனால், ஈரான் அதை இலக்காகக் கொள்ளவில்லை. வைஸ்மென் நிறுவனத்தைப் பொறுத்தவரை - அந்த நிறுவனத்தை 100 ஆண்டுகள் பின்னுக்குத் தள்ளவிட்டது. இனி அதை மீண்டும் உருவாக்கும் எண்ணங்களையும், சிந்தனைகளையும் சேர்த்தே அழித்திருக்கின்றது.

அஃது நிரந்தரமாகப் பூமியிலிருந்து அப்புறப் பட்டுவிட்டது.

ஆக அஃதோர் மகத்தான வெற்றி. இஸ்ரேலின் ஆயுத பலத்தை வென்று நின்ற வரலாற்றுக் குன்று.

ஈரான்-இஸ்ரேலுக்குத் தன் பதிலடியைத் தொடங்கியபோது, இஸ்ரேல் காஸாவில் 57,000 அப்பாவி பாலஸ்தீனர்களைக் கொன்று குவித்திருந்தது. இதில் பெரும்பாலோர் பெண்களும், குழந்தைகளும். அத்தோடு ஈரானில் 20 முக்கிய இராணுவ அதிகாரிகளைக் கொன்றிருந்தது. ஈரானின் அப்பாவி மக்கள் 240 பேரைக் கொலை செய்திருந்தது. இதற்குப் பழிக்குப் பழியாகக் கூட 3090 வைஸ்மென் ஆராய்ச்சிப் பல்கலைக்கழகத் தோடு சம்மந்தப்பட்டவர்களைக் கொன்றிருக் கலாம். ஆனால் ஈரான் துல்லிய தாக்குதலைத் தான் நடத்தி இருந்தது. அதன்வழி அது, உயிர்ச்சேதங்களைத் தவிர்த்திருந்தது.

அத்தோடு வைஸ்மென் ஆராய்ச்சி நிறுவ னத்தின் இயக்குநர் இன்னொரு தகவலையும் தந்தார்.

அது, அந்த ஆராய்ச்சி நிறுவனம், பிரிதொரு புதிய ஆராய்ச்சி கிளையைத் தொடங்கிட இருந்த காலத்தில்தான், இஸ்ரேலின் தாக்குதலுக்கு எதிராக, ஈரான் தன் தாக்குதலைத் தொடங்கியது. முற்றாக இதுவும் அழிக்கப்பட்டுவிட்டது.

திறப்பு விழாவையே காணாமல் இறந்து போன இந்த நிறுவனத்தின் பெயர் Chemistry and Materials Science Lab

இவற்றாலெல்லாம், எங்கள் இராணுவ ஆராய்ச்சி 100 ஆண்டுகளுக்குப் பின்னால் போய்விட்டது என்றார் அலோக் சென்.

## ராடர் தகவல்கள்
## 20 பில்லியன் இழப்பு, இஸ்ரேலுக்கு!

12 நாள் இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையே நடந்த போரின் விளைவுகள் பல பிற்றை நாட்களில்தான் தெரிந்திட வந்தன.

ஏனெனில் எடுத்த எடுப்பிலேயே இஸ்ரேல், ஊடகங்களுக்கு வாய்ப்பூட்டு ஒன்றைப் போட்டுவிட்டது. இழப்புகளைப் பட்டியல் போட்டால் நமது இராணுவம் அதாவது இஸ்ரேலின் இராணுவம் சோர்வடையும்,

ஹமாஸ் - ஈரான், ஹூத்திஸ் போன்றவர்கள் உற்சாகமடைவார்கள் எனப் பகிரங்கமாகவே அறிவித்தார்கள்.

ஆனால், விண்கோள்கள் வழி பெறப்பட்ட தெளிவுகளுக்கும், ராடர் போன்ற கருவிகளிலிருந்து எடுக்கப்பட்ட விபரங்களும் உண்மையை உலகுக்கு அறிவித்தன.

அதில் ஈரானின் முதல் பதிலடியிலேயே 5 இஸ்ரேலிய இராணுவத் தளங்கள் அழிக்கப்பட்டன. அதில் எடுத்த எடுப்பிலேயே 20 பில்லியன் டாலர்கள் இழப்பு இஸ்ரேலுகு ஏற்பட்டது. இந்த ஐந்து இராணுவத் தளங்களும் தரை மட்டமாயின. இனி அந்த இடத்தில் எழ முடியாது.

12 நாட்களுக்குபின் இஸ்ரேலின் இராணுவம் தலைதூக்கி நின்றிட உடனடியாக 40 பில்லியன் டாலர் தேவைப்பட்டது. Isreali Military Immedi ately Required 40 Billion to cometo Life, (Palestinian Chronicle, 28-6-2025)

ஆனால் இந்தப் பணத்தை அமெரிக்கா உடனேயே தந்துவிட்டது. காரணம் அரபு நாடுகளின் பெட்ரோல் பணம், அமெரிக்காவின் கருவூலங்களிலும் - வங்கிகளிலும் நிரம்பி வழிகின்றன. இந்தப் பணம் இஸ்ரேலுக்குத் தாரைவார்த்துத் தந்திடத்தான் என்றால் அது மிகையல்ல.

இந்தப் பணம் உடனேயே தரப்பட்டதால் தான் இஸ்ரேல் தன் போரை பலமுனைகளில் தொடர்ந்து கொண்டிருந்தது. அந்த முனைகளை லெபனான், சிரியா, யெமன், காஸா, மேற்குகரை ஆகியன.

## 1,80,000 - Displaced

## இஸ்ரேலில் வீடிழந்து ரோட்டுக்கு வந்தவர்கள் 1,80,000 (முழுக் கணக்கும் இன்னும் வெளிவரவில்லை)

இஸ்ரேலின் வரலாற்றில் - முதன்முதலாக வீடுகளை இழந்து வீதிகளில் குடியிருக்க வந்தவர்கள். அல்லது அங்கும் இங்கும் அல்லாடுபவர்கள் என்ற நிலை முதன்முதலில் வந்தது.

ஜூலை 13, ஈரான் தந்த பதிலடிக்கு முன் இந்த இடம் பெயர்ந்தவர்கள், வீடின்றி வீதிக்கு வந்தவர்கள், என்ற சொல்லாடல் எல்லாம் - காஸாவுக்கும் மேற்குகரைக்கும், ஜெரூசலத்திற்கும், சுருக்கமாகச் சொன்னால், இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களில் வாழ்ந்தவர்களுக்கே பொருந்தின.

அந்த மக்கள் அதாவது, காஸா வாழ் பாலஸ்தீன முஸ்லிம்கள் (தங்கள் கைகளில்) அகப்பட்டதையெல்லாம் அப்பிக்கொண்டு நாளும் ஒரு தற்காலிக இடத்தை நோக்கி அல்லாடிக் கொண்டிருந்தார்கள். இன்றும் அதேநிலைதான். இப்போதைய காஸா போருக்குப் முன் 1914 முதல் பாலஸ்தீன முஸ்லிம்கள் இப்படியேதான் அல்லாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

1914 முதலே, யூதத் தீவிரவாதிகள் குண்டு வெடிப்புகள், திடீர் தாக்குதல், பூர்வீக குடிகளை பாலஸ்தீன முஸ்லிம்களை பீதிவயப்படுத்துதல் போன்ற தீவிரவாத செயல்கள் வழிதான், அங்கிருந்து வெளியேற்றினார்கள்.

(இந்த வரலாற்றை விரிவாக பாலஸ்தின முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு என்ற நூலில்


vaigarai velicham official



விரிவாகப் படிக்கலாம். வெளியீடு வேர்கள் பதிப்பகம், வாசகர்கள் அதனை வாங்கிப் படிக்கவும்)

1948இல் இஸ்ரேல் உருவாக்கப்பட்டபோது, 8,50,000 பாலஸ்தீன பூர்வகுடிகள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் தங்கள் உடைமைகளைக்கூட எடுத்துச் சென்றிட இயலவில்லை. வெறுங்கையோடு உலகெங்கும் சுற்றித்திரிந்து, இப்போது உலகின் பல்வேறு, பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள். மீண்டும் பாலஸ்தீனத்திற்கு - தங்கள் பூர்வ இடங்களுக்குத் திரும்பிட இயலவில்லை.

இன்று உலகெங்கும் பாலஸ்தீன மக்களுக்காக போராடுபவர்கள் வாதாடுபவர்கள், வழக்காடு பவர்கள், இருக்கிறார்கள் என்றால், அன்று விரட்டப்பட்ட பாலஸ்தீன பூர்வகுடிகளின் வாரிசுகளின், வற்றாத உழைப்பால்தான்.

அதே அல்லாடல், இடம்பெயர்தல், கைகளில் அகப்பட்டனவற்றை சுருட்டிக்கொண்டு, ஓடுதல் என்பவையெல்லாம் இஸ்ரேல் முழுவதும் நடந்தன ஈரான் தந்த அடியில் இந்த நிலை இன்னும் தொடருகின்றது.

## வெளியேற்றம் Displaced

வரலாற்றில் Displaced தங்கள் இல்லங்களிலிருந்து வெளியேறினார்கள் என்ற சொல்லாட்சியை இஸ்ரேலில் கேட்க முடிந்தது, பார்க்க முடிந்தது.

உலகெங்கும்காஸாவிலும்மேற்குகரையிலும், பாலஸ்தீன பூர்வகுடிகள் நித்தமும் அல்லாடு வதைக் கண்டு, அல்லப்பட்டவர்கள், அழுது புலம்பியவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுக்கு இந்த நிலை - அதாவது ஈரானின் தாக்குதலில் இஸ்ரேலுக்கு ஏற்பட்ட அல்லாடும் நிலை, ஆறுதலைத் தந்தது.

இஸ்ரேலின் அட்டூழியங்களை, அநியாயங் களை, தட்டிக்கேட்பதற்கு நாதி இல்லையா? என ஏங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு 1,80,000 இஸ்ரேலிய ஜியோனிஸ்ட்டுகளுக்கும் அதே நிலை ஏற்பட்டபோது ஏக்கம் நீங்கியது.

அடுத்தவர்கள் அல்லல்படும்போது அதில் குளிர்காய்வது சரிஅல்ல. ஆனால் உலக மக்களின் நிலை அதுவாகத்தான் இருந்தது என்ற உண்மையை வருத்தத்தோடு பதிவு செய்தே ஆக வேண்டும்.

இப்படி இஸ்ரேலில் வீடின்றி வெளியே போனவர்களில் பலர் இஸ்ரேலை விட்டே வெளியேறிவிட்டார்கள்.

இது ஈரான் ஒரு குறுகிய காலத்தில் பெற்ற நிண்டகால - நிரந்தரமான வெற்றி!

## இஸ்ரேலில் உணவு வழங்கிடும் மையம்

ஈரானின் 12 நாள் எதிர் தாக்குதலால் இஸ்ரேல் அங்கு வாழும் - ஜியோனிஸ்ட்டுகள் - காஸா வாழ் மக்களின் இன்னொரு அவலத்தையும் சந்தித்தார்கள்.

அது, வீடுகளையும் - சொகுசான வாழ்க்கை யையும் பூர்வகுடிகளிடமிருந்து ஆக்கிரமிக்கப் பட்ட பூமிகளில் நடத்திக் கொண்டிருந்தவர்கள் - உணவுக்காக AID Centre - என்ற உணவு வழங்கிடும் மையங்களை நோக்கி ஓடும் நிலை.

கண்ணீருடன் இஸ்ரேலில் உணவு மையங்கள் என்பன காஸாவையே நினைவு கூர வைத்தன.

உதவி மையங்களை நோக்கி ஓடிடும் இஸ்ரேலிய மக்கள் காஸா மக்களின் நிலையை உணர்ந்தனர்.

அதேபோல் சர்வதேச கிரிமினல் குற்றவாளி, மனித இனத்திற்கு எதிரான போர்க்குற்றவாளி நெதன்யாஹு - இன்றைய நாள்களில் உணவு பொருள் மைய்யம் என்ற நிலையில் கொலை களைச் செய்து கொண்டிருக்கும் நெதன்யாஹு உணவு மைய்யங்களைத் தன்னுடைய மக்களுக்கு திறந்திட வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டார்.

❝ நெதன்யாஹூ உட்பட யாரும் ஈரானின் தாக்குதல் இத்துணை ஆக்ரோஷமாக இருக்கும் என எதிர்பார்க்கவில்லை. அதேபோல் இத்துணை துல்லியமாக இருக்கும் என்பதை இஸ்ரேலின் இராணுவம் எதிர்பார்க்கவில்லை. இவ்வளவு பெரிய அழிவை, இழிவை, இழப்பை ஈரானால் ஏற்படுத்திட இயலும் என்பது அவர்கள் எந்தக் கணக்கிலும் வரவில்லை. அதேநேரத்தில் நெதன்யாஹூவை கண்டிக்கவோ, எதிர்க்கவோ இயலவில்லை. காரணம் ஈரான் மீது தாக்குதல், தாங்களே ஆதரித்த ஒன்று. ❞

## வேறுபாடு = இஸ்ரேல் Vs காஸா மக்கள்

காஸாவில் அல்லாடும் மக்களுக்கும் - உணவுக்காக உயிரைத் தரும் மக்களுக்கும், உணவுக்காக உணவு மையங்களை நோக்கி ஓடும் இஸ்ரேலியர்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடு என்னவெனில், காஸா வாழ் மக்கள் இஸ்ரேல் மக்களைப்போல், அழவில்லை, ஓலமிடவில்லை, ஒப்பாரி இடவில்லை. நாட்டைவிட்டு ஓடவில்லை.

இஸ்ரேலில் வாழும் ஜியோனிஸ்ட்டுகளோ அழுதார்கள், கண்ணீரும் கம்பலையுமாக ஈரானிடம் மன்னிப்புக் கேட்டார்கள். 12 நாள் தாக்குதலுக்கே, இத்தனை ஒப்பாறி, ஓலம். ஆனால், ஆண்டாண்டு காலமாக இதே அவலங்களை சந்தித்துக் கொண்டிருக்கும் மக்கள், இப்போது 22 மாதங்களாக இதையே சந்தித்துக் கொண்டிருக்கும் மக்கள், அத்தனையையும் தாங்கிக்கொண்டு, இஸ்ரேலுக்கு எதிராக எழுந்து நிற்கின்றார்கள். பொறுமை, நிலைகுலையாமை, இவற்றின் ஒப்பற்ற எடுத்துக்காட்டுகளாக தங்களுக்காகப் போராடுபவர்களோடு நின்று வருகின்றார்கள்.

அந்த மக்கள் காஸாவில் நித்தம், நித்தம் இனப்படுகொலைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் மக்கள் அந்த நிலத்தை விட்டு அதாவது தங்கள் பூர்வீக இடத்தைவிட்டு வெளியேறிட நினைக்கவில்லை. தங்கள் நிலம் அல்லது மரணம் என்றே வாழுகின்றனார்கள். வாழுகின் றார்கள் என்பதைவிட தினமும் மடிந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஏனெனில் அது அவர்கள் பூர்வீகப் பூமி. இஸ்ரவேலர்களுக்கு அது அவர்கள நிலம் அல்ல. ஆக்கிரமிக்கப்பட்ட பூமி, அபகரிக்கப்பட்ட பூமி. இஸ்ரேலில் வாழுபவர்கள் வந்தேறிகள். பாலஸ்தீனின் நீண்ட நிலபரப்பில் வாழ்பவர்கள் - முஸ்லிம்கள் - பூர்வகுடிகள் - அதனால் இஸ்ரேலிய மக்கள் வந்தேறிகள், வெளியேறுகின் றார்கள். பாலஸ்தீன முஸ்லிம்கள் புதைந்தாலும், அந்த மண்ணில்தான் புதைவோம் என நிலைகுலையாமல் நிற்கின்றார்கள்.

## ஈரான் - இஸ்ரேலின் அணு உலைகள்

சந்தடி இல்லாமல் ஒரு நீண்ட திட்டத் தோடுதான் இஸ்ரேல் 13-6-2025இல் ஈரானைத் தாக்கியது. அதுவும் ஈரானும் அமெரிக்காவும் ஈரானின் அணு ஆயுதம் பற்றியப் பேசிட, (15-6-2025) நாள் குறித்திருந்தபோது, இரண்டு நாளில் அமெரிக்காவுடன் பேசவிருக்கின்றோம். அதனால் இஸ்ரேல் ஒரு தாக்குதலை நடத்தாது என்ற உறுதியில் இருந்தது. அப்போதுதான் சற்றும் எதிர்பாராத நிலையில் இஸ்ரேல் பலமுனைத் தாக்குதலை நடத்தியது.

தாக்குதலின் நோக்கம் ஈரானின் அணு உலைகளைத் தகர்த்திட வேண்டும் என்பதே, இதுவே வெளி உலகுக்குச் சொல்லப்பட்ட காரணம். ஈரானில் ஆட்சி மாற்றம், என்பது இன்னொரு இலக்கு.

இஸ்ரேல் பலமுறை இதற்குமுன் ஈரானின் அணு உலைகளையும், அணு ஆராய்ச்சி நிலையங்களையும் தாக்கியது. அனைத்தையும் அழித்துவிட்டோம் என மார்தட்டியது.

நீண்ட நாள்களாக பல தாக்குதல்களை நடத்தியபின்தான் அதற்கு ஓர் உண்மை புலப்பட்டது. அது ஈரானின் அணு உலைகள் அனைத்தும் பூமிக்குக் கீழேதான் இருக்கின்றன. எவையும் பூமிக்கு மேலே இல்லை என்று. இப்படி ஏமாந்ததொரு சோன கிரிதான் இஸ்ரேல். இதில் அதன் அதீத உளவுத்துறையும் ஏமாந்தது.

இதனை இஸ்ரேலின் நாடாளும் மன்றத்தில்


vaigarai velicham official

பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். எங்கேனும் ஓர் மலைக்குன்றைத் தாக்கி புழுதியைக் கிளப்பிவிட்டு, அது ஈரானின் அணு உலைதான் என எங்களை நம்பிடச் சொல்கின்றீர். இது பச்சையான பொய், என ஆதாரத்தோடு சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

இன்றைய நாள்களில் நமது நாட்டில் தேர்தல்கள் காலங்களில் கஷ்மீரில் ஒரு தாக்கு தலை ஏற்பாடு செய்து நடத்திவிட்டு சவ்டால் விடுகின்றார்கள். இதனை நியாயப்படுத்திட முதலில் தங்கள் ஆள்களைவிட்டு ஒரு தாக்குதலை நடத்துவார்கள். பின்னர் தேர்தலில் வாக்குகளை வாரி சுருட்டிக்கொள்வார்கள் - ஆட்சியைப் பிடித்துக்கொள்வாரக்ள்.

அதேபோல், இஸ்ரேலில் மக்களின் வாக்குகளைக் கொள்ள அடிக்க, அடிக்கடி இஸ்ரேல் - ஈரான் மீது தாக்குதலை நடத்தும், புழுதியைக் கிளப்பும் பெரியளவில் பிரச்சாரம் செய்யும். அந்தத் தாக்குதல்களால் விளைந்த பயன் எதுவுமில்லை என்றாலும் தேர்தலில் வெற்றி கிடைக்கும்.

ஆனால் ஒன்று மட்டும் உண்மை, இன்றளவும் 130 - ஈரானின் விஞ்ஞானிகளை வெவ்வேறு காலக்கட்டங்களிலும் இஸ்ரேல் கொலை செய்திருக்கின்றது. இது ஈரானின் அணு சக்தி பயன்பாட்டை வேறறுக்க இஸ்ரேல் எடுத்துவரும் தொடர் முயற்சிகளுள் ஒன்று.

ஜூலை 13,2025 தாக்குதலிலும் - இஸ்ரேல் பல விஞ்ஞானிகளைக் கொலை செய்தது. காலாகாலமாக இஸ்ரேல் செய்து வரும் இந்த கொலைகளால் கண்டபலன் எதுவுமில்லை. அல்லாமல் ஈரானின் அணு உலைகள் இருக்கும் இஸ்பல்ஹான் - நான்தால்-ஃபர் டவர் ஆகிய இடங்களைத் தொட்டுத்தான் பார்க்க முடிந்தது.

ஆனால் ஈரானின் துல்லியத் தாக்குதல்கள் இஸ்ரேலின் அணு உலைகளைத் தாக்கித் தரைமட்டமாக்கின. அதாவது முற்றாக அழித்தன. இஸ்ரேலில் டைமானோ - நாகவ் - வசிமென் நிறுவனத்தில் அணு உலைகள் அனைத்தும் முற்றாக அழிக்கப்பட்டன.

இந்த இழப்பை, இந்தத் தோல்வியை இஸ்ரேல் நேரடியாக ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக, இஸ்ரேல் அமெரிக்காவிடம் வைத்த ஒரு கோரிக்கை மூலம், உலகம் தெரிந்து கொள்கின்றது.

இஸ்ரேல், அமெரிக்காவிடம் வைத்த கோரிக்கை, "எங்களுடைய அணு உலைகள் பவற்றை உடனேயே பராமரித்தாக வேண்டும். இல்லையேல் அவை பாழ்பட்டுப்போகும். உடனடியாக 60 பில்லியன் டாலர்கள் வேண்டும். உங்களிடம் வழியில்லை என்றால், உலக அரங்கில் கடன் வாங்கிட உங்கள் உத்திரவாதத்தை (Gurantee) வழங்குங்கள் எனக் கேட்டார். அதற்கு அமெரிக்கா என்ன பதில் சொன்னது என்பது தெரியவில்லை. ஆனால் நிச்சயமாகப் பணத்தைத் கொடுத்திருக்கும் - இதுவும் அரபு நாடுகளின் பணம்தான்.

பெரும்பாலும் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாஹு, தன் அண்மைகால அமெரிக்க விஜயத்தின் போது, இந்த ஒப்பாரிகளை வைத்திருப்பார். ஆனால் அவருடைய விஜயத்தின் போது நடந்தது என்ன? என்பது இன்றளவும் தெரிந்திடவில்லை. ஏனெனில் இதுபோன்ற இராஜாங்க சந்திப்புகளின் இறுதியில் ஓர் கூட்டறிக்கை வெளியிடுவது வழக்கம். அப்படி யொரு அறிக்கை வெளிவந்திடவில்லை.



## ஈரானின் தாக்குதலால் இஸ்ரேல் அமெரிக்காவிடம் கேட்ட மடிப்பிச்சை

முதல் 3 நாள் தாக்குதலால் ஏற்பட்ட இழப்புகளை சீர்செய்ய 20 பில்லியன் டாலர்,

40 பில்லியன் டாலர் - இராணுவத் தள வாடங்களையும், இராணுவத்தையும் உடனடி யாக தூக்கி நிறுத்திட.

60 பில்லியன் டாலர் - வீடிழந்தவர்கள் மற்றும் தொழிலிழந்தவர்களின் வாழ்க்கையை தொடங்கிட 60 பில்லியன் அணு உலைகளை சீரமைக்க.

## "To initiate Life"

இவையெல்லாம் உடனடி தேவைகள். இந்தப் பணத்தை எடுத்த எடுப்பில், அமெரிக் காவிடம்தான் கேட்டார் போர்க்குற்றவாளி நெதன்யாஹு. டிரம்ப் முதல் பதிலாக அமெரிக்கர்களே பல பொருளாதாரச் சிரமங்களைச் சந்தித்து வருகின்றார்கள்.

உன்னுடைய சண்டைகளுக்கெல்லாம் நான் பணம் தர முடியாது என்றார். பின்னர் சந்தடி இல்லாமல் தந்துவிட்டார். அதனால் இஸ்ரேல் இயங்குகின்றது. உலக அரங்கில் இஸ்ரேலின் போர்களுக்காக நிரந்தரமாக நிதி திரட்டுகின்ற அமைப்புகள் நிரம்பவே செயல்படுகின்றன. அவையும் பெரிய அளவில் நிதியைத் தருகின்றன.

இவற்றிற்கெல்லாம் மேலாக அண்மையில் டிரம்ப் மேற்கொண்ட அரபு நாட்டு பயணங் களின்போது, அரபு நாடுகள் சவூதி அரேபியா - கத்தார், ஐக்கிய அமிரகம் ஆகியன 5 டிரில்லியன் டாலர்களைத் தந்தார்கள். (நூறாயிரம் கோடி - ஒரு ஆயிரம் பில்லியன்)ஐ அள்ளிக் கொடுத்தன. இந்தப் பணமும் பெருமளவில் இஸ்ரேலுக்கே தாரை வார்த்துத் தரப்படுகின்றது.

இராணுவ நோக்கர்களின் கணக்கின்படி அமெரிக்காவின் வழி இந்த அரபு நாட்டுப் பணம் கொட்டப்படவில்லை என்றால், இஸ்ரேல் அன்றே அழிந்திருக்கும்.

## இஸ்ரேலின் நித்திய வாழ்க்கை - வீதியே விதி

ஈரானின் 12 நாள் தாக்குதலில் இஸ்ரேலின் நித்திய வாழ்க்கை பெரிய அளவில் ஸ்தம் பித்தது. இஸ்ரேல் மக்கள் தங்கள் வீடுகளில் வாழ்ந்திட இயலவில்லை. அதேபோல் அந்த வீடுகளின் கீழுள்ள பதுங்கு குழிகளிலும் வாழ்ந்திட இயலவில்லை. வீதியே விதி என வந்துவிட்டார்கள். அவர்களுக்கு உணவு மைய் யங்களை தொடங்கிட வேண்டும். வாழ்க்கை யைத் தொடங்கும் தொகையையும் தந்திட வேண்டும். இதை மேலே குறிப்பிட்டோம்.

இந்த பாதிப்பின் தவிர்க்க இயலாத இன்னொரு விளைவு ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் வாழும் இஸ்ரேலிய மக்கள் செய்து கொணடிருந்த எந்தத் தொழிலையும் செய்திட இயலவில்லை. இதனால் அவர்கள் அன்றாடம் வாழ்க்கைக்கே அல்லாடும் நிலை. அதனால் பொருளாதார சுழற்சி அடியோடு நின்று போய்விட்டது. இதனால் எதற்கெடுத்தாலும் அரசின் உதவிகளை எதிர்பார்த்திட வேண்டிய நிலை.

இந்த எதிர்பார்ப்புகளை இஸ்ரேலால் உடனடியாக நிறைவேற்றிட இயலவில்லை. ஆனால் இஸ்ரேல் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு எது வந்தாலும் அரசு முழு இழப்பீட்டைத் தரும் என வாக்களித்திருந்தது. - இந்த வாக்குறுதியின் அடிப்படையில்தான் அவர்கள் அடுத்தவர்களின் பூமியில் குடியேற்றப்பட்டார்கள்.

ஈரான் பதிலடியைத் தொடங்கிய 13/06/2025 முதல் இதுநாள்வரை இந்த மக்களில் யாரும் சொந்தமாகச் செய்துகொண்டிருந்த தொழில்கள் எதையும் தொடர்ந்திட இயலவில்லை. ஆகவே அரசே சாப்பாடு போடுகின்றது செலவுக்கும் பணம் தருகின்றது.

## ஹைஃபா - துறைமுகம் : இஸ்ரேலிய வணிக தலைமையிடம்

இஸ்ரேலின் மிக முக்கியமான துறைமுகம் இது. இது வெறும் துறைமுகம் மட்டுமல்ல, ஒரு கணக்கின்படி 84,000 சிறிய-பெரிய தொழில் நிறுவனங்களும் இருக்கும் தொழில் நகரம்.

இஸ்ரேலின் முக்கிய இராணுவ மைய்யமும் கூட. இங்கே இராணுவத்திற்கு தேவையான எல்லா உபரி பொருள்களையும் தயாரிக்கும் முக்கிய ஆலைகளும் இருக்கின்றன.

கப்பல்கள் வழியாக வரும் இராணுவ


vaigarai velicham official

தளவாடகள் இங்கே பதுக்கி வைக்கப்படுகின்றன.

இஸ்லரேலுக்கு கடல் வாணிபமே முக்கியம். அந்தக் கடல் வாணிபத்தின் 95% சதவிகிதம் - இந்த ஹைஃபா துறைமுகம் வழியாகத்தான் நடக்கின்றது.

சிறு தொழில் நிறுவனங்களும் ஏராளம், டெல்ஆவிவ், ஆக்கிரமிக்கப்பட்ட ஜெரூசலம், ஆகியவை நிருவாக இயந்திரங்கள் சுழலும் தலைநகரந்தான். ஆனால், அதன் பொருளாதார தலைநகர் ஹைஃபாதான். ஆகவே இங்கே வாழும் மக்கள் தொகை எண்ணிக்கையிலும், அடர்த்தியிலும் அதிகம்.

இவற்றிற்கெல்லாம் மேலாக, இஸ்ரேலின் மின் சக்தி எரிபொருள்கள், எண்ணெய், பெட்ரோல் சுத்திகரிப்பு ஆலைகள் ஹைஃபாவில்தான் மையங் கொண்டிருக்கின்றன.

ஹைஃபாவில் - தொடக்கக் காலத்தில் அதாவது இப்போது நடந்துகொண்டிருக்கும் போரில் அக்டோபர்-8, 2023 முதல் பல தாக்குதல்களை நடத்தியது ஹிஸ்புல்லாஹ்

பின்னர் ஈரான்-சிரியா ஆகியவற்றிலுள்ள இஸ்லாமிய போராளிகள் குழுக்களும், ஹூத்திஸ்களும் அவ்வப்போது தாக்கி வந்தன.

ஆனால், ஈரான் 12 நாள்களில் ஹைஃபாவை தரைமட்டமாக்கியது. அதன் மின் உற்பத்தி, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் இவையெல்லாம் முற்றாகத் தகர்க்கப்பட்டன.

அதனால் ஹைஃபாவின் மின் உற்பத்தி முற்றாகத் தடைபட்டது. அத்தோடு தொடர்புடைய இஷ்தூத் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையும் முற்றாக அழிக்கப்பட்டது. இருட்டுக்குள் இஸ்ரேல் இன்றும் திணறிக்கொண்டே இருக்கின்றது. 200 மில்லியன் டாலர் அளவுக்கு ஒரே நாளில் இழப்பு.

அத்தோடு நடந்த தொடர் தாக்குதல்களால் மிச்சம் மீதி இருந்த ஹைஃபாவும் அழிக்கப்பட்டுவிட்டது.

## ஈரானின் இன்னொரு வெற்றி

ஈரானின் இன்னொரு வெற்றி இஸ்ரேலின் வான்வெளி தடைகள் அனைத்தையும் தகர்த்ததுதான். இஸ்ரேலின் எல்லா வான்வெளி தடைகளும் அழிக்கப்பட்டுவிட்டன.

ஈரானின் எந்த ஏவுகணையையும் இஸ்ரேலால் தடுத்திட இயலவில்லை.

அதேபோல் இஸ்ரேலின் சைரைன் என்ற சங்கொலி முறைமைகளும் எந்தப் பயனையும் தந்திடவில்லை. ஒரு இரவில் 25 முறை பதுங்குக் குழியை நோக்கி ஓடிட வேண்டிய அவலம்.

இஸ்ரேலில் ஏற்பட்ட மக்கள் மரணங்களுக்கு இந்த சங்கொலிகள் சரியான நேரத்தில் ஒலிக்காததே காரணம். ஹைஃபாவில் 150 பேர் இறந்ததாக இஸ்ரேலே ஒத்துக்கொண்டது.

இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள், ஈரான் தொடர்ந்து அதிவேகமுள்ள ஏவுகணைகளை ஏவிக்கொண்டிருந்தால், சங்கொலிகள் - சைரைன்கள் எந்தப் பயனையும் தரவில்லை என்றார்கள்.

ஹைஃபாவின் மொத்த மக்களையும் பதுங்குக் குழிகள் - பாதுகாப்புக் குழிகள் - இவற்றிற்குப் பக்கத்திலேயே இருந்திட வேண்டும் என வேண்டிக்கொண்டது. அந்த மக்களால் எந்த தொழிலிலும் உருப்படியாக ஈடுபட்டிட இயலவில்லை. அரசு தரும் உதவிகள், பதுங்குக் குழிகள் என்று வாழ்ந்தார்கள். வாழ்ந்து வருகின்றார்கள்.

ஹூத்திஸ், தாக்குலும் தொடர்ந்து கொண்டிருந்ததால், அவர்களால் இந்தப் பதுங்குக்குழி பதற்றத்திலிருந்து வெளியே வந்திட இயலவில்லை. ஹைஃபாவில் தினமும் 1,97,000 வியாபார நடவடிக்கைகள் நடந்தன. அனைத்தும் நின்று போயின.

அவர்களின் அவலங்களுக்கும் பிரிதோர் காரணம் உண்டு. அது

## இஸ்ரேலின் தொடர் பிரச்சாரம்

ஈரானில், 1979இல் இஸ்லாமியப் புரட்சி ஏற்பட்ட நாள் முதலே, இஸ்ரேல் ஈரானைப் பற்றிய பீதி ஒன்றை, இஸ்ரேலிய மக்களிடையே பிரச்சாரம் செய்துவந்தது.

ஈரானும் பல துறைகளிலும் அதிக வேகத்தில் முன்னேறிக் கொண்டிருந்தது. ஈரான் மக்கள் தங்கள் முழு அறிவையும் ஆயுதங்களாக மாற்றிக் கொண்டிருந்தார்கள்.

குறிப்பாக ஏவுகணைகள் அறிவியலில் பல

சிகரங்களை எட்டிப்பிடித்துக்கொண்டே இருந்தார்கள் ஈரானின் விஞ்ஞானிகள்.

ஈரானின் விண்கோள்கள் (சேட்டலைட்) பல வான்வெளியில் பறக்கவிடப்பட்டன. அவை பாரசீகமொழியை அடிப்படையாகக் கொண்டவை.

இவை போர்க்காலங்களில் ஈரானுக்கு மட்டுமே புரியும் வகையில் உளவுகளையும், தகவல்களையும் அனுப்பும். இப்போதும் 23.7.2025 இத்தகையதொரு விண்கோள்களை அனுப்பி உள்ளது.

ஈரானில் இந்த வளர்ச்சிகளையெல்லாம், இஸ்ரேல் தன் மக்களிடம் பரப்பி - கூடவே இல்லாத பொல்லாததையும், இட்டுக்கட்டி, அவர்களைப் பீதிவயப்படுத்தி வந்தது.

அத்தோடு ஈரான் அணு ஆயுதத்தையும் வைத்திருக்கின்றது என்றும், சிலபல நேரங்களில் ஈரான், அணு ஆயுதத்தை முழு அளவில் தயாரிக்க சில தினங்களே இருக்கின்றன. ஈரான அழிக்கவில்லை என்றால், இஸரேல் அழிந்து போகும் என்றும் பிரச்சாரம் செய்து வந்தது. இஸ்ரேல் மொத்தத்தில் ஈரான் இருந்தால், இஸ்ரேல் இருக்காது என இஸ்ரேலில் வாழ்ந்த மக்கள் நம்ப வைக்கப்பட்டார்கள்.

இன்றும் இஸ்ரேலைச் சுற்றி இருக்கும், அரபு நாடுகளில், முஸ்லிம் நாடுகளில், ஈரானில் இஸ்லாமியச் சிந்தனையை சுமந்த இஸ்லாமிய இயக்கங்கள் இருக்கின்றன. அவை இஸ்ரேலை அழிக்கத் தயாராகிக் கொண்டிருக்கின்றன. அவற்றிற்கு பணமும் பொருளும், ஆயுத பயிற்சியும், ஆயுதங்களும் பெருமளவில் ஈரானால் தரப்படுகின்றன என பிரச்சாரம் செய்தது.

இதனால் ஈரானை தாக்கியே ஆகவேண்டும் என இஸ்ரேலில் வாழ்ந்த மக்கள் எண்ணினார்கள். ஈரானை தாக்குவதற்கு அமோக வரவேற்பைத் தந்தார்கள்.

இதனால், ஈரான் மீது ஓர் தாக்குதலை நடத்தியது இஸ்ரேல். குறிப்பாக அதன் பிரதம அமைச்சர் நெதன்யாஹு - தன் மக்களிடம் இழந்து நிற்கும் ஆதரவைத் திரும்பப் பெறலாம் என எண்ணினார்.

அந்நிலையில் அதாவது ஈரான் மீது இஸ்ரேல்



தன் தாக்குதலைத் தொடங்கியபோது, இஸ்ரேல் மக்கள் நெதன்யாஹு மீது ஆக்ரோஷமான வெறுப்பைக் கொட்டிக் கொண்டிருந்தார்கள்.

பலநூறு முறை, பல லட்சம் பேர் வீதிக்கு வந்து ஒப்பாரி வைத்தார்கள். ஓலமிட்டார்கள். நெதன்யாஹு இராஜினாமா செய்திட வேண்டும் என்றும் கோரிக்கைகளை வைத்தார்கள். பல முன்னாள், இன்னாள் இராணுவ அமைச்சர்கள், பிரதமர்கள் இடைவிடாமல் பேசிக் கொண்டிருந்தார்கள். பத்திரிகைகளுக்கும், தொலைக் காட்சி ஊடகங்களுக்கும் பேட்டிகளைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். பத்திரிகைகளில் கட்டுரைகளை எழுதிக் கொண்டிருந்தார்கள். அத்தனை எதிரிகளையும் ஒன்றாய் வென்றிட ஈரானை தாக்கிடுவது என முடிவு செய்தார், தாக்கினார்.

## எதிர் பாராதது

ஆனால் நெதன்யாஹு உட்பட யாரும் ஈரானின் தாக்குதல் இத்துணை ஆக்ரோஷமாக இருக்கும் என எதிர்பார்க்கவில்லை. அதேபோல் இத்துணை துல்லியமாக இருக்கும் என்பதை இஸ்ரேலின் இராணுவம் எதிர்பார்க்கவில்லை. இவ்வளவு பெரிய அழிவை, இழிவை, இழப்பை ஈரானால் ஏற்படுத்திட இயலும் என்பது அவர்கள் எந்தக் கணக்கிலும் வரவில்லை. அதேநேரத்தில் நெதன்யாஹுவை கண்டிக்கவோ, எதிர்க்கவோ இயலவில்லை. காரணம் ஈரான் மீது தாக்குதல், தாங்களே ஆதரித்த ஒன்று.

## மன்னிப்பு

ஒரேவழி ஈரானிடம் மன்னிப்புக் கேட்பது. இறுதியில் இஸ்ரேல் மக்கள் வீதிக்கு வந்து கண்ணீரும் கம்பலையுமாக “ஈரான், ஈரான் எங்களை மன்னித்து விடுங்கள் - எங்கள் மீது தாக்குதல் நடத்தாதீர்கள், என கூப்பாடு போட்டன.


vaigarai velicham official

இழப்புகள் தாழாமல், இஸ்ரேல் அமெரிக்காவில் காலில் வீழ்ந்தது. ஈரான் மீது பி-2 குண்டுகளைப் போட வேண்டும் என்றது. அமெரிக்கா பிபி-2 குண்டுகளை வீசியது. பணியவில்லை ஈரான். அமெரிக்காவின் வளைகுடா நாட்டுத் தளங்களைத் தாக்கியது. குறிப்பாக கத்தார் நாட்டுத் தளத்தை தாக்கியது அமெரிக்கா இஸ்ரேலுடன் ஈரானில் காலைப் பிடித்துப் போரை நிறுத்தியது. தன் தாக்குதலை இஸ்ரேல் நிறுத்தியது. அமெரிக்காவும் தனது அரபு தளங்கள் தாக்கப்பட்டதால், ஈரானிடம் மண்டியிட்டது. - இறுதியில் ஈரானும் தாக்கியது.

## இஸ்ரேல் மக்கள் - இஸ்ரேலை விட்டு வெளியேற்றம்

தினமும் 25,000 பேர் இஸ்ரேலை விட்டு வெளியேறிட திட்டமிடுகின்றார்கள். அவர்கள் வெளிநாடுகளில் குடியேற அனுமதி கேட்டு மனுக்களை சமர்ப்பிக்கின்றனர். இப்படி சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் தினமும் 25,000

பலர் கள்ளத்தோணி வழி சைப்பிரஸ் தீவுக்கும், கிரீசுக்கும் போய்க் கொண்டிருக்கின்றார்கள்.

கிரீஸ் மற்றும் சைப்பிரஸ் நாட்டில் இயங்கிடும், எதிர் கட்சிகள், அந்த நாட்டு அரசுகளை எச்சரித்து வருகின்றன. இனிவரும் நாள்களில் யூதர்கள் இந்த நாட்டில் - இது எங்கள் நாடு என்பவர்கள், வந்தேறும் - யூதர்களுக்கு அனுமதி வழங்கிடும்போது அவர்களுக்கு நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கிட வேண்டும் என கேட்டிருக்கின்றன எதிர்கட்சிகள்.

வேற்று நாடுகளுக்கு குடியேறுபவர்களுக்கு சில நாடுகள், இவ்வளவு தொகை முதலீடு செய்தால், குடியுரிமை வழங்கப்படும் நிபந்தனையை விதித்திருக்கின்றன. இது தங்கள் நாட்டை தொழில்மயப்படுத்திட மேற்கொள்ளப்படும் ஒரு பொருளாதார உத்தி. இதனை ஏராளமான யூத முதலீட்டாளர்கள் பயன்படுத்தி இஸ்ரேலை விட்டு வெளியேறி இருக்கின்றார்கள்.

இப்படி முதலீடு செய்பவர்கள் பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றிருக்கின்றார்கள். அவர்கள் அந்த நாட்டில் கால் வைக்கும்போதே அங்குள்ள மக்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றார்கள். இஸ்ரேவேலர்கள் போய் இறங்கும் விமான நிலையங்களிலும், துறைமுகங்களிலும் எதிர்ப்பு.

இப்படி உலகெங்கும் மானங்கெட்டுப் போய் குடியேறிய யூதர்கள்.

இன்னும் இன்றும் இஸ்ரேலைவிட்டு வெளியேறிக்கொண்டே இருக்கின்றார்கள்.

## வேலை வாய்ப்பு இழப்பு

ஈரானின் தாக்குதலால் ஹைஃபா துறைமுகம் முதல்கொண்டு, எல்லா சிறிய பெரிய தொழில் நிறுவனங்களும் அழிக்கப்பட்டுவிட்டன என்பதைக் குறிப்பிட்டோம்.

இதனால் இன்றளவும் 2,92,000 பேர் வேலை வாய்ப்புகளை இழந்துள்ளார்கள். உண்மையிலேயே வேலை இழந்தவர்கள் இதைவிட பன்மடங்கு அதிகம். இது ஈரானின் 12 நாள் தாக்குதலில் ஏற்பட்ட பாதிப்பு. இந்தப் பாதிப்பு இன்றும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றது.

இதனை இஸ்ரேலில் அதிகாரப்பூர்வமான புள்ளி விபர கணக்காணயம் வெளியிட்டுள்ளது. 23.7.2025 அன்று. (-PC)

## ஏற்றுமதி வருவாய் இழப்பு

இஸ்ரேல் இன்று காஸாவில் தொடர்ந்து வரும் படுகொலைகளால் மக்கள் - இஸ்ரேலின் பொருள்களை உலகெங்கும் புறக்கணித்து வருகின்றார்கள். இதனால் இப்போது இஸ்ரேலின் பொருள்களின் ஏற்றுமதி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் பன்னாட்டு வர்த்தக வருவாய் பெருமளவில் நின்றுபோய்விட்டது.

**73% அரசு ஊழியர்கள் ஓட்டம்**

ஈரானின் தாக்குதல்களால் 73% அரசு ஊழியர்கள் ஆக்கிமிக்கப்பட்ட பாலஸ்தீனிலிருந்து வெளியேறிவிட்டார்கள். இவர்களும் வெளிநாட்டுக்குச் சென்று விடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(Survey by All Jobs Reported by NET. 10.7.2025)

இஸ்ரேல் தனக்கு ஏற்பட்ட இழப்புகளை மறைத்து வருகின்றது. உண்மைகள் கொஞ்சம், கொஞ்சமாகத்தான் வெளியே வருகின்றன. அவற்றை தொடர்ந்து வைகறை இதழில் இடம்பெறச் செய்வோம்.

- MGM



## மும்பை தொடர் குண்டுவெடிப்பு வழக்கு 2006

# 19 ஆண்டுகள் கழித்து 12 முஸ்லிம்கள் விடுதலை..!

11 ஜூலை, 2006 அன்று மாலை 6:23 மணி முதல் 6.28க்குள்ளாக வரிசையாக வெடித்த குண்டுகள் மும்பை புறநகர் பகுதியின் மேற்கு பிரிவினை உலுக்கிவிட்டது. மாதுங்கா, மாஹிம், பாந்த்ரா, கார், ஜோகேஷ்வரி, போலிவாரி, மிர்சா சாலை இரயில் நிலையங்களில் இந்த குண்டுகள் வெடித்தன. இந்த குண்டுவெடிப்பில் 187 நபர்கள் உயிரிழந்தார்கள். 829 பேர் படுகாயமடைந்தார்கள். இந்த வழக்கை விசாரணை செய்த மஹாராஷ்டிராவின் தீவிரவாதத் தடுப்புப்படை 13 முஸ்லிம் இளைஞர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது. இன்னும் 15 பேர் தலை மறைவாகிவிட்டதாகவும் அதில் 10 பேர் பாக்கிஸ்தானியர்கள் என்றும் குற்றப் பத்திரி கையில் காட்டப்பட்டிருந்தது. தீவிரவாதத் தடுப்புபடையினர் இந்த குண்டுவெடிப்புகள் சிமி என்கிற இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தின் (Students Islamic Movement of India) கைவேலை என்றும் லஷ்கரே தொய்பா இயக் கத்தின் ஆதரவுடன் இதனை செய்தனர் என்றும் கூறினர்.

தீவிரவாத தடுப்புப்படையின் குற்றப் பத்திரிகையில் பின்வரும் பெயர்கள் உள்ளன :

1. காமல் அஹமத் (A1)
2. தன்வீர் அன்சாரி (A2)
3. முஹம்மது ஃபைசல் ஷேக் (A3)
4. இஹ்திஷாம் சித்திகி (A4)
5. முஹம்மது மஜீத் (A5)
6. ஷேக் முஹம்மது அலீ அன்சாரி (A6)
7. அப்துல் வாஹித் ஷேக் (A7)
8. முஸம்மில் ஷேக் (A8)
9. சுஹைல் ஷேக் (A9)
10. ஸமீர் அஹ்மத் ஷேக் (A10)
11. நவீத் ஹூஸைன் கான் (A11)
12. ஆசிஃப் கான் பஷீர் கான் (A12)

குண்டுவெடிப்பு நடைபெற்ற முதல் நாளிலேயே IB என்ற மத்திய உளவுத்துறையின் புலனாய்வு விசாரணை முற்றிலும் தவறான ஒரு கோணத்திலிருந்தே தொடங்கப்பெற்றது. அதில் முஸ்லிம்களுக்கெதிரான மாச்சர்யங்களே முன்னணியில் நின்றன. அதுவும் நாட்டின் முக்கிய உளவுத்துறையாகிய ஐபி என்ற மத்திய உளவுத்துறையின் மனதை மருளச் செய்த மாச்சர்யங்கள். முதல் நாளிலேயே (SIMI) சிமி என்ற இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கமே மும்பை குண்டுவெடிப்புகளுக்குக் காரணம் என்றது.

ஆதாரம் : Afternoon Mumbai 12 July, 2006

மும்பை காவல்துறையினர் லஷ்கரே தய்பா என்ற அமைப்பிற்கும் இந்திய மாணவர் இஸ்லாமிய அமைப்பிற்கும் (SIMIக்கும்) தொடர் பிருப்பதாக அறிவித்தார்கள்.

ஆதாரம் : Midday Mumbai 12 July 2006

குண்டுவெடிப்பு குற்ற பின்னணியாக புலனாய்வில் பல முக்கிய விஷயங்களைக்


vaigarai velicham official

கருத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. அதில், குண்டுவெடிப்புகள் நிச்சயமாக குஜராத்தில் நடந்த இனப்படுகொலைகளுக்குப் பதிலாக அமைந்திட இயலாது. காரணம் குஜராத் இனப் படுகொலைகள் நடந்து 4 ஆண்டுகள் கடந்து விட்டன. ஒரு வாதத்திற்கு இதை ஏற்றுக் கொண்டால்கூட குண்டுவெடிப்புகள் இந்துக் களும் குஜராத்திக்களும் அதிகமாக வாழுமிடத் தில்தான் நடந்திருக்க வேண்டும். அதாவது மும்பை சர்ச்கேட் என்ற ரெயில் நிலையத்தி லிருந்து தாதர் வரைக்கும் அல்லது பேயண்டர் முதல் விகார் வரைக்குள் ரெயில் நிலையங்களுள் ஒன்றில் நடந்திருக்க வேண்டும்.

இதில் நாம் கவணிக்கப்பட வேண்டிய முக்கிய விசயங்களில் இந்தியாவில் நடைபெற்ற பெரும்பாலான குண்டுவெடிப்புகள் முஸ்லிம்கள் அதிகமாக வாழுமிடங்களில் அல்லது அவற்றிற் குப் பக்கத்தில் நடந்திருக்கின்றன. இந்த குண்டுவெடிப்பு மும்பை மாஹிம் ரெயில் நிலையத்திலிருந்து மீரா ரோடு வரையுள்ள ரெயில் நிலையங்கள் வரை நடந்துள்ளன.

### கைது நடவடிக்கைகள்

சந்தேகத்தின் பேரில் ஜூலை 20, 2006-இல் பீஹாரில் இருந்து கமால் அஹ்மத் என்ப வரையும், ஜூலை 29, 2006 அன்று மும்பை, மீரா சாலையிலிருந்து (Ehtesham) எத்திஷாம் என்பவரையும் ATS (IB என்று வாசிக்கவும்) கைது செய்தது. அவர்களை மயக்க நிலை (Narco - analysis Test) சோதனை செய்தபோது இந்த கொடூர செயலின் சூத்திரதாரிகளின் பெயர்களை பற்றிய தகவல்களை அவர்கள் வெளிப்படுத்தி னார்கள். அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் மேலும் முஹம்மது சாஜித், முஹம்மது ஷபி, கல்கத்தாவை சேர்ந்த முஹம்மது மஜீத் ஷேக் ஆகிய 4 நபர்களை IB கைதுசெய்த கையோடு வழக்கு பற்றிய புலன்விசாரணை முடிந்துவிட்டது என ATS (IB) அறிவித்தது. மேற்சொன்ன 4 நபர்களும் ரயிலில் குண்டுவைக்க பாகிஸ்தானி யர்களுக்கு அடிப்படை உதவிகளை செய்தனர். அவர்களில் ஒருவரான மஜீத் ஷேக் லஸ்கரே தொய்பா (LET) வின் Sleeper குழுவை சேர்ந்தவர் என்று சந்தேகிக்கப்படுகின்றனர்.

Source : The Time of India Pune 30, September 2006

இந்த குண்டுவெடிப்பு வழக்கில் ATS மாரட்டிய தீவிரவாத தடுப்பு படை மூலம் 13 நபர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்தது அதில்,

1. குற்றம் சாட்டப்பட்டவரின் ஒப்புதல் வாக்கு மூலங்கள்.

2. செல்போன்கள் மூலம் நடந்த உரையாடல் களை இடைமறித்து கேட்டறிந்த தகவல்கள்.

3. நார்கோ அனலிசிஸ் டெஸ்ட் என்ற மயக்க நிலை சோதனை.

4. போலிஸாருடன் நடந்த துப்பாக்கி சண்டையில் என்கவுண்டரில் கொல்லப்பட்ட பாகிஸ்தானியனின் DNA மரபணு சோதனை.

5. குற்றவாளிகளின் வீட்டிலிருந்து கைப்பற்றப் பட்ட RDX ஆர்.டி.எக்ஸ் வெடிப்பொருட்கள்.

6. கோவாண்டியில் இருந்து பாந்த்ராவிற்கு வெடிகுண்டுகளை கொண்டு செல்ல பயன் படுத்தப்பட்ட மாருதி கார் இப்படி இன்னும் சிலவற்றை ATS அதிகாரிகள் குற்றப் பத்திரிக்கையில் தாக்கல் செய்தது.

இந்த வழக்கின் புலன் விசாரணையில் பலவிதமான முரண்பட்ட செய்திகளே நிறைந்து காணப்படுகின்றன. ATS மாராட்டிய தீவிரவாத எதிர்ப்பு படை IBயால் சாட்சியங்கள் கையாளப் பட்டிருக்கும் விதத்தை எந்த சராசரி அறிவுள்ளவர் களாக ஏற்றுக்கொள்ள முடியாது. எந்தளவுக்கு என்றால் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் M.K. நாராயணன் அவர்களே இந்த சாட்சியங்களால் திருப்தி கொள்ளவில்லை. அவர் கூறுகிறார் சில சிக்கலான புதிர்கள் தீர்க்கப்படவில்லை. ஆகவே சாட்சியங்கள் சரியாக உள்ளன என்று கூற முடியாது.

இவ்வாறு சிக்கலான பல பதில்களுக்கான விடை கிடைக்காத நிலையிலும் மற்றும் பாகிஸ்தானிய உளவுத்துறையின் தொடர்பு இந்த குண்டுவெடிப்பில் உள்ளதை ஆதாரப்பூர்வமாக நிரூபிக்க எந்த சாட்சியமும் இல்லாத சூழ்நிலையில் மும்பை நகர போலீஸ் ஆணையர் A.N.ராய் இந்த வழக்கின் விசாரணையை வெற்றி கரமாக முடித்துவிட்டோம் என்று முழக்க மிட்டிருக்ககூடாது.

உண்மை என்னவென்றால் குண்டுவெடிப் பானது மும்பை போலீஸ் கமிஷனரின் நீதிவரம்பு

அதிகார எல்லைக்குள் நடைபெறவில்லை. ஆதலால் இந்த வழக்கில் ஈடுபட எந்த அதிகாரமும் இல்லை என்பதோடு மும்பை நகர காவல்துறை இந்த வழக்கினை புலன் விசாரணை செய்யவும் இல்லை என்பதே உண்மை. மும்பை இரயில்வே காவல்துறை கமிஷனரின் வரம்பு அதிகார எல்லைக்குள் இந்த குண்டுவெடிப்பு நடந்துள்ளது. இரண்டாவதாக இந்த வழக்கின் புலன் விசாரணை மஹாராஷ்டிரா காவல்துறை இணை ஆணையரின் கட்டுப்பாட்டில் இருக்கும் ATS தீவிரவாத தடுப்புப்படை செய்துள்ளது.

ஆகவே வழக்கு பற்றி பத்திரிகையாளர் சந்திப்பினை கூட்டி அதை விளக்கிடும் உரிமையை மும்பை இரயில்வே கமிஷனருக்கோ அல்லது ATS தீவிரவாத தடுப்பு படை தலைவருக்கோ அல்லது காவல்துறை இணை ஆணையருக்கோ தான் இருக்கின்றது. ஆனால் IB என்ற மத்திய உளவுத்துறையின் உத்தரவிலோ அல்லது மாநில அரசாங்கத்தின் உத்தரவிலோ அல்லது வேறு சில காரணங்களுக்காகவோ மும்பை காவல்துறை கமிஷனர் A.N.ராய் அவர்கள் பத்திரிகைகளுக்கு தகவல்களை சொன்னார்கள். ஒரு நேர்மையாக அதிகாரியாக இருந்திருந்தால் இதை அவர் சொல்ல மறுத்திருக்க வேண்டும் ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. துர்திருஷ்டவசமாக இந்திய சுதந்திரம் பெற்றதிலிருந்து IB என்ற மத்திய உளவுத்துறை இதுப்போன்று சாட்சியங் களை திரித்து வருகின்றது. இதன் உண்மையான நோக்கத்தையும் நமது நாட்டு தலைவர்கள் புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்கள்.

## இந்திய முஸ்லிம்கள் மீது வெறுப்பை ஏற்படுத்தும் முயற்சிகள்

இந்தியாவில் நடக்கும் குண்டுவெடிப்புகளின் மூலம் உளவுத்துறை பாகிஸ்தானையும் அதன் ISI மீதும் முழுப்பழியையும் சுமத்தி இந்திய முஸ்லிம்களின் நன்மதிப்பை கெடுத்து அதன் மூலம் பொதுமக்களை முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்பு ஏற்பட செய்வதன் மூலம், பிராமண மற்றும் சங்பரிவார் தங்களது கொடூரமான செயல்களை எந்த தடங்களுமின்றி செய்து வருகின்றன. இதன் மூலம் ஏற்படும் பலன்களை சங்பரிவாரின் அரசியல் பிரிவு பாரதீய ஜனதா கட்சி அறுவடை செய்து வருகின்றது என்பதே நிதர்சனமான உண்மை. ATS மாரட்டிய தீவிரவாத எதிர்ப்பு படையின் இதுபோன்ற செயல்களால் உலகளவில் இந்தியாவிற்கு பலவகைகளில் நெருக்கடியும் தலைகுனிவும் ஏற்பட்டுள்ளன.

குறிப்பு:

RDX, TNT கலவை குண்டுகள் பொதுவாக இந்திய ராணுவத்திலேயே பயன்படுத்தப்படு கின்றது. (The Indian Express)

## அப்பாவி முஸ்லிம்களின் விடுதலைகள்

மும்பை தொடர் குண்டுவெடிப்பு 2006-இல் நடந்த சம்பவத்திற்கும் கைது செய்யப்பட்ட 12 நபர்களுக்கு எதிராக வைக்கப்பட்ட ஆதாரங்கள் நிரூபிக்கப்படாததால் 21-07-2025 மும்பை உயர் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது. இதுபோன்ற விடுதலைகள் மிக அதிகமான கால தாமதத்திற்கு பின்னர் தான் நடக்கின்றது என்ற போதிலும் பாதிக்கப்பட்ட அப்பாவிகளுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் இது ஒரு கொண்டாட்டத்திற்கான நிகழ்வு என்றாலும் இந்த விடுதலைகள் உண்மையான குற்றவாளிகளுக்கும் சதிகாரர்களுக்கும் அதாவது IB என்ற மத்திய உளவுத்துறை, ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள அதன் கைக்கூலிகள், பிராமணிஸ்ட் குழுக்களிடம் கவலைகளை ஏற்படுத்தின. அடுத்தடுத்து கொடுக்கப்படும் இதுபோன்ற விடுதலைகள் இதற்கு முன்னர் நடத்தப்பட்ட விசாரணை குறித்து மிகப்பெரிய சந்தேகங்களை எழுப்பிவிடும்.

## மறுவிசாரணை தேவை

இதற்கு முன் அஜ்மீர் ஷரீஃப், மக்கா மஸ்ஜித், சம்சவ்தா எக்ஸ்பிரஸ் மற்றும் மாலேகான் 2006 வழக்குகளில் நடந்தது போன்று மறுவிசாரணை ஒரு சுதந்திரமான நிறுவனத்தின் கீழ் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை உருவாக்கி விடும். அவ்வாறு மறுவிசாரணை நடத்தப் பட்டால் நாடெங்கும் நடந்த குண்டு வெடிப்புகள், அந்த பழிகளை முஸ்லிம்கள் மீது போடுதல் ஆகியவற்றிற்கு காரணமான இவர்களின் தேச அளவிலான தேசவிரோத சதித்திட்டங்களை வெளிப்படுத்திவிடும்.

உண்மை தீவிரவாதிகளை தப்ப விடவிட்டு ஒரு வழக்கு! இதில் இரண்டு புலன் விசாரணைகள்! இரு வேறு முடிவுகள்! - விசித்திரமாக உருவாக்




கப்பட்ட கதையாக இந்த மும்பை 2006 தொடர் குண்டுவெடிப்பு வழக்கு நமது தெளிவாக காட்டுகின்றது.

இந்த வழக்கை மேற்கொண்டு விசாரணை செய்யும்போது இந்த அதிகாரிகளின் மீது குற்றம் சாட்டப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுடன் எதிர்கொள்ள வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர்களின் வாக்குமூலங்கள், அவர்களின் கைபேசி அழைப்புகளின் தரவுகள் பெறப்பட்டு தீவிர ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு குற்றம் சாட்டப் பட்டவர்கள் சொல்வது உண்மைதானா என்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

ஒருவேளை இந்த அதிகாரிகள் குற்றவாளிகள் என்பதோ அல்லது குற்றம் சாட்டப்பட்டவர்கள் அவர்கள் அப்பாவிகள் என்று தெரிந்தும் வேண்டுமென்றே இந்த வழக்கில் சம்மந்தப் படுத்தி கைது செய்ததும் உறுதியானால் அதே குற்றச்சாட்டின் கீழோ அல்லது வேறு குற்றச் சாட்டுகளின் கீழோ இந்த அதிகாரிகளும் கைது செய்யப்பட வேண்டும். இந்த வழக்கின் மேல் விசாரணையில் வெளிப்படக்கூடிய ஆதாரங் களின் அடிப்படையில் இந்த அதிகாரிகள் மேல் இந்த வழக்குகள் பதியப்பட்டால் தான் இதுப்போன்ற நிகழ்வுகள் இனி நடக்காது என்ற ஆறுதல் நமக்கு கிடைக்கும். அப்போதுதான் அப்பாவி பொதுமக்கள் பாதிக்கப்பட மாட்டார்கள்.

## இந்திய முஸ்லிம்கள் தீவிரவாதிகளா?

இந்தியாவில் முஸ்லிம் தீவிரவாதம் இருக்கிறது என்பதற்கு எந்தவிதமான வரலாற்று ஆதாரமும் கிடையாது. ஆங்கிலேயர் காலத்தில் மற்ற இந்துக்களைப் போலவே முஸ்லிம் புரட்சியாளர்கள் மற்றும் தேச பற்றாளர்கள் 1857-ல் நடந்த முதல் சுதந்திர போராட்டத்தில் பங்கேற்றார்கள். பின்னர் மகாத்மா காந்தியின் தலைமையில் போராடியா போராளிகள் ஆங்கிலேயர்களால் தீவிரவாதிகள் என்று அழைக்கப்பட்டார்கள்.

சமீபகால வரலாற்றில் மூன்று பெரிய சம்பவங் களில் முஸ்லிம்கள் ஈடுபட்டது கண்டுபிடிக்கப் பட்டது.

1. 1993-ல் நடந்த மும்பை குண்டுவெடிப்பு
2. 1998-ல் கோயம்புத்தூர் குண்டுவெடிப்பு
3. 2001-ல் கந்தஹாருக்கு கடத்தப்பட்ட இந்திய ஏர்லைன்ஸ் விமானம்.

இந்த மூன்றில் கந்தஹார் சம்பவம் மட்டுமே தீவிரவாதத் தாக்குதல் எனக் கூறமுடியும். 1993-ல்

நடந்த மும்பை குண்டுவெடிப்புகள் பாபர் மஸ்ஜித் இடிப்பை தொடர்ந்து நடைபெற்ற கலவரத்தில் முஸ்லீம்கள் அழிக்கப்பட்டதற்கு பதிலடியாக சில முஸ்லீம் குற்றவாளிகளால் நடத்தப்பட்டது. அதேபோல், கோயம்புத்தூர் குண்டுவெடிப்புகளும் சங்பரிவாரத்தினால் நடத்தப்பட்ட கலவரத்தின் ஆதங்கத்தினால் தூண்டப்பட்டவை. இந்த 2 சம்பவங்களும் கண்டிப்பாக தீவிரவாதம் என்ற வரையறைக்குள் வராது. தீவிரவாதம் என்ற மாயை IBயால் ஏற்படுத்தப்படுவது. ஏனெனில், பிராமணீய சக்திகளின் தீவிரவாதம் பல வடிவங்களில் பல அளவுகளில் பல இடங்களில் நாட்டில் நடந்து கொண்டிருக்கின்றது.

### உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை

மும்பை 2006 ஜூலையில் நடைபெற்ற குண்டுவெடிப்பு வழக்கில் ஆதாரங்கள் நிரூபிக்கப்படாததால் மும்பை உயர்நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்ட 12 நபர்களை விடுதலை செய்து தீர்ப்பு வழங்கியது. மும்பை உயர்நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் 22-07-2025 அன்று மஹாராஷ்டிராவின் பயங்கரவாத எதிர்ப்புபிரிவு வழக்குரைஞர் ஜெனரல் துஷார் மேத்தா மேல்முறையீடு செய்தார். இந்த வழக்கை 24-07-2025 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொண்டது உச்சநீதிமன்றம். இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்த நீதிபதிகள் வி.வி.சுந்தரேஷ் மற்றும் N.கோடீஸ்வர் சிங் ஆகியோர் அமர்வில் விசாரணைக்கு ஆஜரான துஷார் மேத்தா, மும்பை உயர்நீதிமன்ற தீர்ப்பை முன்னுதாரனமாகப் பயன்படுத்துதல் முடியாத அளவிற்கு இடைக்காலத் தடை விதிக்க கோரினார். விடுவிக்கப்பட்டவர்களை மீண்டும் சிறையில் அடைக்கும் நோக்கத்தில் உயர்நீதிமன்றத் தீர்ப்பை நிறுத்தி வைக்க அரசு கோரவில்லை என்று மேத்தா தெளிவுப்படுத்தினார்.

அவர்களை மீண்டும் சிறைக்கு கொண்டு வருவதற்கு நான் தடை கோரவில்லை. அது நோக்கமல்ல. உயர்நீதிமன்றம் வழங்கிய சில சட்டங்கள் MCOCA விசாரணைகளையும் பாதிக்கின்றன என்று கூறினார். இருப்பினும் சட்டம் தொடர்பான கேள்விக்கு ஜெனரல் அளித்த சமர்ப்பிப்பை கவனத்தில் கொண்டு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை வேறு எந்த நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு முன்னுதாரணமாகக் கருதக்கூடாது என்று நாங்கள் கருதுகிறோம். எனவே மும்பை உயர்நீதிமன்றத் தீர்ப்பின் உச்சநீதிமன்றம் 24 ஜூலை 2025ல் தீர்ப்பை நிறுத்தி வைத்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆதாரம் : The Hindu 24-07-2025

மேலும் தகவல்களுக்கு :


1. கர்கரேயே கொலை செய்தது யார்?
விலை : ரூ.450

2. பிராமினிஸ்ட்டுகள்
குண்டுவைத்தார்கள் முஸ்லிம்கள்
தூக்கிலிடப்பட்டார்கள்
விலை : ரூ.400

நூல் தேவைக்கு :
வேர்கள் பதிப்பகம் - சென்னை.

செல் : 88709 60662, 74012 13394,
81481 29887, 97862 14186

- S.யாசர் அரஃபாத்




**பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்** எனும் தொடர் அடுத்த இதழில் இடம்பெறும்.


vaigarai velicham official



# அன்றே சொன்னார்


**எஸ்.எம்.முஷ்ரிஃப் IPS**

**முன்னாள் இன்ஸ்பெக்டர் ஜெனரல், மகாராஷ்டிரா காவல்துறை**


**"Who Killed Karkare"**
**The Real Face of Terrorism in India**

"கர்கரேயைக் கொலை செய்தது யார்? இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம்" என்ற நூல் 2009ஆம் ஆண்டு வெளி வந்தது.

அந்த நூலில் இப்போது ஜூலை 2025-இல் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள மும்பைத் தொடர் குண்டு வெடிப்புகள் பற்றி விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார் நூலாசிரியர் **S.M.** முஷ்ரிஃப்.

அன்று அவர் கூறியவை அனைத்தும் உண்மை என்பதை நிரூபிக்கின்றது. அதனை வாசகர்கள் முன் வைக்கின் றோம். வாசகர் இதனை பரவலாக்கிட வேண்டுகிறோம். **- MGM**

*உண்மை தீவிரவாதிகளை தப்ப விட விட்டு ஒரு வழக்கு! இரண்டு புலன் விசாரணைகள்! இரு வேறுமுடிவுகள்! - விசித்திர கதை!*

## இரண்டு குற்றப் பத்திரிக்கைகள்!

*(A) குண்டு வெடிப்புகள் மற்றும் குற்றவாளிகள் என சந்தேகிக்கப்பட்டவர்கள் பற்றிய ஆரம்ப கட்ட தகவல்கள்:*

## சம்பவம் நடந்த முதல் நாளிலிருந்தே முஸ்லிம் அமைப்புகள் மற்றும் முஸ்லிம் நபர்கள் மீதான குற்றச்சாட்டுகள்

(i) *சம்பவம் நடந்த அன்றே குண்டு வெடிப்புக்கு காரணமானவர்கள்* (SIMI) *சிமி இயக்கத்தை சார்ந்தவர்கள்தான் என்பதை* IB *என்ற மத்திய உளவுத்துறை உறுதி செய்தது* (*ஆதாரம்* : Afternoon, Mumbai, 12 July 2006)

(ii) *லஷ்கரே - தொய்பா மற்றும்* SIMI (*சிமி*) *என்ற இந்திய மாணவர் இயக்கம் மீது போலீஸ் சந்தேகப்பட்டது.* (Mid. Day, Mumbai, 12 July 2008)

(iii) *ரஹில்* (Rahil), *பயாஸ் காக்ஜி* (Faiyas Kagzi) *மற்றும் ஜெய்னுதீன் போன்ற தீவிர வாதிகள் இந்த குண்டு வெடிப்பினை நடத்தி னார்கள்.* (Mid-Day, 12 July 2008)

(iv) *நேபாள காவல்துறை இது சம்பந்தமாக நான்கு பாகிஸ்தானியர்களை காத்மண்டுவில் கைது செய்தது* (Rediff.com, July 12, 2006)

(v) *மூன்று "சிமி" உறுப்பினர்களை போலீஸ் ஹைதராபாத்திலிருந்து பிடித்துச் சென்றனர்.* (Asian Age Mumbai, July 12, 2006)

(vi) *ரயில் குண்டுவெடிப்பு நடந்து நான்கு நாட்களுக்கு பிறகு போலீசார் 250 பேர்களை நகரின் மாஹிம் பகுதியிலிருந்து பிடித்துச்*

சென்றனர். (The Times of India, Mumbai, 15 July 2006)

## புலன் விசாரணையை செயலளவில் IB எடுத்து கொள்ளுதல்

(i) புலன் விசாரணை பொறுப்பை IB எடுத்து கொண்டது. இது ATS (Anti Terrorism Squad)இன் தலைவரான KP ரகுவான்சி (Raghuvanshi)யை தவிர வேறு யாருக்கும் தெரியாது. (Daily Sakal, Pune, 22 July 2006)

## பிற தகவல்கள்

(i) நேரடி சாட்சியங்கள் மற்றும் காயம்பட்ட வர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் குற்றவாளிகள் என்று சந்தேகிக்கப்படும் நபர்களின் மாதிரி (Sketches) வரை படங்கள் தயாரிக்கப்பட்டன. (Rediff.com, 12 July 2006)

(ii) CPI(M) இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) ஆலோசனை குழு உறுப்பினரும் மேற்கு வங்காள மாநிலத்தை ஆளும் இடதுசாரி கட்சியின் சபா நாயகருமான பிமன்போஸ் இந்த ரயில் குண்டு வெடிப்புக்கு இந்து அமைப்புகளை தான் சந்தேகிப்பதாக கூறினார். (Rediff.com, 15 July 2006)

(iii) RDX ஆர்.டி.எஸ் வகை வெடிபொருள்கள் அமோனியம் நைட்ரேட் மற்றும் எரிபொருள் போன்றவை இந்த குண்டுகளில் பயன்படுத்தப் பட்டிருப்பதாக தடவியல் (ப.56) நிபுணர்கள் உறுதி செய்தனர். (ஆதாரம் : Asian Age, Mumbai, 17 July 2006)

## வழக்கு வெற்றிகரமாக துப்பு துலக்கப்பட்டதாக ATSன் அறிவிப்பு

முதலாவதாக சந்தேகத்தின் பேரில் ஜூலை 20-ல் பீஹாரில் இருந்து கமால் அஹ்மது என்பவரையும், ஜூலை 29 அன்று மும்பை, மீரா சாலையிலிருந்து (Ehtesham) எத்திஷாம் என்பவரையும் ATS (IB என்று வாசிக்கவும்) கைது செய்தது. அவர்களை மயக்கநிலை (Narco-analysis Test) சோதனை செய்தபோது இந்த கொடூர செயலின் சூத்திரதாரிகளின் பெயர்களை பற்றிய தகவல்களை அவர்கள் வெளிப்படுத்தி னார்கள். அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் மேலும் நான்கு பேர்களை ATS கைது செய்தது. அவர்கள் பெயர்களாவது முஹம்மது சாஜித், முஹம்மது ஷபி (இருவரும் மும்பராவை சேர்ந்தவர்கள்) மற்றும் கல்கத்தாவை சேர்ந்த முஹம்மது மஜீத் ஷேக் இவர்களை கைது செய்த கையோடு வழக்கு பற்றிய புலன் விசாரணை முடிந்துவிட்டது என ATS அறிவித்தது. மேற்சொன்ன நான்கு பேர்களும், ரயிலில் குண்டு வைத்த பாகிஸ்தானியர்களுக்கு அடிப்படை உதவிகளை செய்தனர். அவர்களில் ஒருவரான மஜித் ஷேக் லஸ்கரே தொய்பா (LET)வின் Sleeper குழுவை சேர்ந்தவர் என்று சந்தேகிக்கப்படுகின்றனர். (The Times of India Pune 30 September 2006)

(2) குண்டு வெடிப்பில் ஈடுபட்ட பாகிஸ் தானிய சதிகாரர்களுள் ஒருவன், நெரிசல் மிக்க ரயில் பெட்டியில் இருந்து வெளியேற முடியாமல் (Khar) ஹார் ரயில் நிலையத்தில் நடந்த குண்டு வெடிப்பில் மாண்டு போனார் என்று மும்பை போலீஸ் கமிஷனர் (AN Roy) ஏ.என். ராய் கூறினார். மிக மோசமாக சிதைந்து போன அவரது உடல் கேட்பாரற்று கிடந்தது. அவரது சிதைந்து போன முகத்தை மீண்டும் வடிவமைத்து அந்த பிரேதத்தில் DNA மரபணு சோதனையை போலீஸ் செய்தது. இவர் பாகிஸ் தானில் உள்ள லாகூரை சேர்ந்த சேர்ந்த சலீம் என்பதை கைது செய்யப்பட்டவர்கள் மீது நடத்திய சோதனை (Narco-analy- sis Test) மூலம் அறிந்து கொண்டனர்.

(3) புது தில்லியில் பணியிலிருக்கும் ஒரு மூத்த நிர்வாக அதிகாரி கூறுகையில், கைது செய்யப்பட்ட பீகாரை சார்ந்த கமால் அன்சாரியை தொடர்ந்து, குற்றம் சாட்டப்பட்ட வர்கள் பற்றிய தகவல்கள் அனைத்தையும் ATS என்ற மராட்டிய தீவிரவாதி தடுப்புப்படை சேகரித்து விட்டதாக கூறினார். ISI என்ற பாகிஸ்தான் உளவுத்துறைக்கு இந்த குண்டு வெடிப்பில் தொடர்பு இருக்கிறது என்பதற்கு மும்பை காவல்துறையினரிடம் போதுமான ஆதாரம் உள்ளது என்பதை மும்பை போலீஸ் கமிஷனர் ஏ.என்.ராய் ஏற்கனவே அறிவித் துள்ளார்.

இந்த குண்டுவெடிப்பில் ஐஎஸ்ஐக்கு (பாகிஸ்தான் உளவுத்துறைக்கு) தொடர்பு உள்ளது என்ற மஹாராஷ்டிர அரசின் குற்றச்சாட்டுக்கு மத்திய அரசும் ஒத்துக்கொண்டுள்ளது. கைது செய்யப்பட்ட குற்றம் சாட்டப்பட்டவர்களின்


vaigarai velicham official

நடவடிக்கைகள் செல்போன் உரையாடல்களை இடைமறித்து பெற்ற தகவல்கள் பாகிஸ்தானிய பயிற்சி முகாம்களில் பங்கேற்றுக் கொண்டதற் கான ஆதாரங்கள், ஹவாலா மூலம் பண பரிமாற்றம் செய்து கொண்டதற்கான ஆதாரங்கள் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட ஒருவனின் வீட்டிலிருந்து கண்டெடுக்கப்பட்ட ஆர்டிஎக்ஸ் வெடிமருந்துகள் போன்ற பல ஆதாரங்களின் அடிப்படையில் எங்களது சாட்சியங்கள் அமைந்துள்ளன.

மஹாராஷ்டிர போலீஸ் அதிகாரிகள் இந்த தொடர் குண்டு வெடிப்பில் ஐஎஸ்ஐ-ன் தொடர்பு பற்றிய அறிக்கையை வரும் புதன் கிழமை அதாவது அக்டோபர் 4, 2006 அன்று மத்திய உள்துறை செயலரிடம் சமர்ப்பிப்பார்கள்.

அ) பாகிஸ்தான் உளவுத்துறை குண்டு வெடிப்புக்கு சதித்திட்டம் தீட்டியது

ஆ) 11 பாகிஸ்தானியர்கள் இந்த குண்டு வெடிப்பில் நேரடியாக பங்கெடுத்துக் கொண்டனர்.

இ) அவர்களுக்கு பாகிஸ்தானிலுள்ள பஹவல்பூர் பயிற்சி முகாமில் பயிற்சி வழங்கப் பட்டது - போன்ற தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையை மும்பை போலீஸ் கமிஷனர் ஏ.என். ராய் மற்றும் ஏ.டிஎஸ் தலைவர் கே.பி. ரகுவான்ஷி மத்திய உள்துறை செயலாளரிடம் வழங்கினார்கள்.

பீஹாரில் மதுபானி என்னுமிடத்தை சேர்ந்த கமால் தொடர்பு கொண்டிருந்த 12க்கும் மேற்பட்ட நபர்களிடம் ஏடிஎஸ்.ம் மத்திய அதிகாரிகளும் உளவுத்துறை விசாரணை நடத்தி வருகின்றனர்

## ஏடிஎஸ் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தல்:

பிறகு ஏ.டி.எஸ் (மராட்டிய தீவிரவாத தடுப்பு படை) குண்டுவெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட 13 நபர்களுக்கு எதிராகவும் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்தது.

## ஏடிஎஸ் குற்றப்பத்திரிகையில் சமர்ப்பித்த சாட்சியங்களானது

1. குற்றம் சாட்டப்பட்டவரின் ஒப்புதல் வாக்கு மூலங்கள்

2. செல்போன்கள் மூலம் நடந்த உரையாடல் களை இடைமறித்து கேட்டறிந்த தகவல்கள்

3. நார்கோஅனலிசிஸ் டெஸ்ட் என்ற மயக்க நிலை சோதனை

4. போலிஸாருடன் நடந்த துப்பாக்கி சண்டையில் என்கவுன்டரில் கொல்லப்பட்ட பாகிஸ்தானியனின் டிஎன்ஏ மரபணு சோதனை

5. குற்றவாளிகளின் வீட்டிலிருந்து கைப்பற் றப்பட்ட ஆர்டிஎக்ஸ் வெடிப்பொருட்கள்

6. கோவாண்டியில் இருந்து பாந்த்ராவிற்கு வெடிகுண்டுகளை கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்ட மாருதி கார்,



ஏடிஎஸ் சுட்டி காட்டிய சாட்சிகளில் 2 முக்கிய சாட்சிகளில் ஒருவர் மேற்கு இரயில் வேயில் வழக்கமாக பயணிப்பவர் அவரின் கூற்றுப்படி சம்பவம் நடந்த நாளன்று குண்டு வெடிப்பில் சந்தேகிக்கப்படும் நபர்களில் ஒருவர் எடுத்து வந்த கனமான ஒரு பொருள் அவரை இடித்ததால் அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். பிறகு சந்தேகிக்கப்படும். நபர்களை பற்றிய அங்க அடையாளங்களை பத்திரிகையில் பார்த்த உடன் தான் வாக்குவாதத்தில் ஈடுபட்ட நபர் தான் இந்த சந்தேகிக்கப்படும் நபர் என்பதை அறிந்தார். உடன் தானாகவே முன் வந்து அவரை அடையாளம் காட்டினார்.

இரண்டாவது சாட்சி ஒரு வாடகை கார் ஓட்டுனர் சம்பவம் நடந்த நாளன்று சிலர் மூன்று நபர்களை கோவாண்டியில் ஏற்றிக்கொண்டு சர்ச்கேட்டில் கொண்டு வந்து இறக்கிவிட்டனர். அவர்கள் தங்களுடன் கொண்டுவந்த சில பெரிய பெட்டிகளை காரின் முன்பக்க இருக்கையில் வைத்திருந்தனர். பயணத்தின் போது கார் டிரைவர் திடீரென்று பிரேக் அடித்ததில் ஒரு பொருள் கீழே விழுந்தது. இதனால் கோபம் கொண்ட அவர்கள் இவரை கடிந்து கொண்டனர்.

சிலர் இதனால் சற்று ஆச்சர்யமடைந்தார்கள். பிறகு இந்த மர்ம நபர்களை பற்றிய மாதிரி புகைப்படங்களை பத்திரிகைகளில் பார்த்த உடன் இவர் அவர்களை அடையாளம் காட்ட முன் வந்தார்.

## சாட்சியங்கள் எந்த அளவு நம்பத்தகுந்தவை?

1. நெரிசல் மிகுந்த புறநகர் ரயிலில் பல வாரங்களுக்கு முன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட தன்னுடன் பயணித்த ஒருநபரை வெறும் அங்க அடையாளங்களை பத்திரிகையில் பார்த்தவுடன் நினைவு படுத்தி எப்படி அடையாளம் காட்ட முடியும்?

2. அதே சந்தேகக் கேள்விதான் டாக்ஸி ஓட்டுனர் விஷயத்திலும் தொங்கி நிற்கிறது. குண்டு வெடித்த நாளிலிருந்து தான் ஏற்றி சென்ற நூற்றுக்கணக்கான பயணிகளில் அந்த சில நபர்களை மட்டும் எப்படி ஞாபகத்தில் கொள்ள முடியும்?

3. எங்கு எப்படி செல்போன் உரையாடல்கள் பதிவு செய்யப்பட்டன? ஒருவேளை அவர்களது தொலைபேசி எண்கள் முன்பே கிடைத்து கண்காணிக்கப்பட்டும் பதிவு செய்யப்பட்டு வந்திருந்தும் ஏன் இந்த நபர்கள் முன்பாகவே கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் கைது செய்யப்படவில்லை? இல்லை குண்டு வெடிப்புக்கு பின்பு தான் அவர்களது செல்போன் உரையாடல் கண்காணிக்கப்பட்டது என்றால் எதன் அடிப்படையில் அது செய்யப்பட்டது? செல்போன் உரையாடல் விஞ்ஞான பூர்வமாக அடையாளம் காணப்பட்டதா?

4. எம்.சி.ஓ.சி.எ என்ற மராட்டிய மாநில பொடாவின் கீழ் பதிவு செய்யப்பட்ட சில பிரிவுகள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதன் அடிப்படையில் வழக்கு உச்ச நீதி மன்றத்தால் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கும் பொழுது போலீஸால் மராட்டிய பொடா சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் எந்தளவுக்கு நம்பகத்தன்மை கொண்டவை?

5. குற்றத்தை உறுதி செய்திட வேறு அதிகப் படியான ஆதாரங்கள் இல்லாமல் மயக்க நிலை சோதனை அடிப்படையில் மட்டும் ஒருவரை குற்றவாளி என்று நிரூபிக்க முடியுமா?

6. டிஎன்ஏ என்ற மரபணு சோதனை மூலம் ஒரு பாகிஸ்தானியரை எப்படி அடையாளம் காட்டிட முடியும்? இந்த சோதனை மூலம் இவரின் மதம் நாடு அல்லது இவர் சார்ந்த தீவிரவாத இயக்கத்தை அடையாளம் கண்டு பிடிக்க இயலுமா?

7. யாரோ ஒருவரின் வீட்டில் இருந்து மும்பை காவல் துறையால் கைப்பற்றப்பட்ட ஆர்டிஎக்ஸ் பற்றிய செய்தி எந்த அளவுக்கு நம்பத்தகுந்தவை?

இவ்வாறாக இந்த வழக்கின் புலன் விசார ணையில் பலவிதமான முரண்பட்ட செய்திகளே நிறைந்து காணப்படுகின்றன, ஏடிஎஸ் மராட்டிய தீவிரவாத எதிர்ப்புப்படை (ஐபி என்ற மத்திய உளவுத்துறை என வாசிக்கவும்)யால் சாட்சி யங்கள் கையாளப்பட்டிருக்கும் விதத்தை எந்த சராசரி அறிவுபடைத்தவரும் ஏற்றுக்கொள்ள முடியாது. எந்தளவுக்கு என்றால் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்கே நாராயணன் சாட்சியங்களில் திருப்தி கொள்ளவில்லை.


vaigarai velicham official

அவர் கூறுகிறார் அவர்களே இந்த சில சிக்கலான புதிர்கள் தீர்க்கப்படவில்லை. ஆகவே சாட்சியங்கள் சரியாக உள்ளன என்று கூற இயலாது.

இவ்வாறு சிக்கலான பல பதில்களுக்கான விடை கிடைக்காத நிலையிலும் மற்றும் பாகிஸ்தானிய உளவுத்துறையின் தொடர்பு இந்த குண்டு வெடிப்பில் உள்ளதை ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கும் எந்த சாட்சியமும் இல்லாத சூழ்நிலையில் மும்பை நகர போலீஸ் ஆணையர் ஏ.என்.ராய் இந்த வழக்கின் விசாரணையை வெற்றிகரமாக முடித்துவிட்டோம் என்று எக்காள முழக்கமிட்டிருக்கக்கூடாது.

உண்மை என்னவென்றால் குண்டுவெடிப் பானது மும்பை போலீஸ் கமிஷனரின் நீதிவரம்பு அதிகார எல்லைக்குள் நடைபெறவில்லை. ஆதலால் இந்த வழக்கில் ஈடுபட எந்த அதிகார மும் இல்லை என்பதோடு மும்பை நகர காவல்துறை இந்த வழக்கினை புலன் விசாரணை செய்யவும் இல்லை என்பதே உண்மை. மும்பை இரயில்வே காவல் துறைகமிஷனரின் வரம்பு அதிகாரஎல்லைக்குள்இந்தகுண்டுவெடிப்புநடந் துள்ளது. இரண்டாவதாக இந்த வழக்கின் புலன் விசாரணை மஹாராஷ்டிரா காவல்துறை இணை ஆணையரின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஏடிஎஸ் தீவிரவாத தடுப்புப்படை செய்துள்ளது.

ஆகவே இந்த வழக்கு பற்றி பத்திரிகையாளர் சந்திப்பினை கூட்டி அதை விளக்கிடும் உரிமையை மும்பை இரயில்வே கமிஷனருக்கோ அல்லது ஏடிஎஸ் தீவிரவாத தடுப்பு தலைவருக்கோ அல்லது காவல் துறை இணை ஆணையருக்கோ தான் இருக்கின்றது. ஆனால் ஐபி என்ற உளவுத்துறையின் உத்தரவிலோ அல்லது மாநில அரசாங்கத்தின் உத்தரவிலோ அல்லது வேறு சில காரணங்களுக்காகவோ மும்பை காவல் துறை கமிஷனர் ஏ.என்.ராய் அவர்கள் பத்திரிகைகளுக்கு தகவல்களை சொன்னார்கள். ஒரு நேர்மையான அதிகாரியாக இருந்திருந்தால் இதை அவர் மறுத்திருக்க வேண்டும். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. துரதிருஷ்டவசமாக இந்தியா சுதந்திரம் பெற்றதிலிருந்து ஐபி என்ற மத்திய உளவுத்துறை இதுபோன்று சாட்சியங்களை திரித்து வருகின்றது. இதன் உண்மையான நோக்கத்தையும் நமது நாட்டு தலைவர்கள் புரிந்து கொள்ளத் தவறிவிட்டனர்.

இந்தியாவில் நடக்கும் குண்டுவெடிப்புகளின் மூலம் உளவுத்துறை பாகிஸ்தானையும் அதன் ஐஎஸ்ஐ மீதும் முழுப்பழியையும் சுமத்தி இந்திய முஸ்லிம்களின் நன்மதிப்பை கெடுத்து அதன் மூலம் பொது மக்களை முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்பு ஏற்பட செய்வதன் மூலம், பிராமண மற்றும் சங்பரிவார் தங்களது கொடூரமான செயல்களை எந்த தடங்கலுமின்றி செய்து வருகின்றன. இதன்மூலம் ஏற்படும் பலன்களை சங்பரிவாரின் அரசியல் பிரிவு பாரதீய ஜனதா கட்சி அறுவடை செய்து வருகிறது என்பதே நிதர்சனமான உண்மை. ஏடிஎஸ் மராட்டிய தீவிரவாத எதிர்ப்பு படையின் இதுப்போன்ற செயல்களால் உலகளவில் இந்தியாவிற்கு பலவகைகளில் நெருக்கடியும் தலைகுனிவும் ஏற்பட்டுள்ளன.

## மத்திய உளவுத்துறையின் புதிய (ஐ.எம்) இந்திய முஜாஹிதீன் கோட்பாடு

இந்தியன் முஜாஹிதீன் (ஐ.எம்) என்ற அமைப்பு தான் 2006ல் மும்பை இரயிலில் நடந்த குண்டுவெடிப்புக்கு காரணம் என்பதை கண்டுபிடித்து அதை மும்பை குற்றப்பிரிவு வெளியிட்டதின் மூலம் ஏ.டி.எஸ்-இன் நம்பகத் தன்மையின் அடிவேரையே உலுக்கிவிட்டது. மும்பை குற்றப்பிரிவினரா கைது செய்யப்பட்ட தீவிரவாதிகளில் ஐந்தில் மூன்று நபர்கள் குண்டு வெடிப்பை நிகழ்த்திய 3 பேர் கொண்ட குழுவில் ஒரு பகுதியினர். இதை ஒப்புக்கொண்டு வாக்குமூலம்கொடுத்துள்ளனர். மேற்சொன்ன ஒப்புதல் வாக்குமூலங்களை கொடுத்தவர்கள் இந்திய முஜாஹீதீன்கள் என்ற அமைப்பை நிறுவியவர்களுள் ஒருவரான சாதிக் ஷேக். இவர் செப்டம்பர் 24ல் மும்பையில் கைது செய்யபட்டார். மற்றொருவர் டில்லி பாட்லா ஹவுஸில் 19 செப்டம்பர் 2010ல் போலீஸாருடன் நடந்த துப்பாக்கி சண்டைக்குப்பின் சேக் ஆரிஃப் என்பவருடன் சயீப் என்பவரும் கைது செய்யப்பட்டார். சாதிக் மற்றும் ஆரிப் தாங்கள் ஒப்புதல் வாக்குமூலங்களை மும்பை காவல் துறையிடம் தந்தார்கள்.

அதில் சயீஃப் (saif) டெல்லி போலீசாரிடம் பேசியதாக ஒத்துக்கொண்டார். சிலர் டெல்லி துப்பாக்கி சண்டையில் ஈடுபட்ட ஆதிஃப்

அமீன் மற்றும் முஹம்மது சாஜித் ஆகியோரின் பெயர்களையும், துப்பாக்கி சண்டைக்குப் பிறகு போலீசாரால் கைது செய்யப்பட்ட ஜிசான் மற்றும் தலைமறைவாக உள்ள சயீஃபின் (saif) சகோதரர் Dr. சாநவாஸ்கான் மற்றும் அபுரஷீத் ஆகியோரின் பெயர்களையும் சேர்த்து மொத்தம் 5 நபர்களை மும்பை குண்டு வெடிப்புக்கு காரணமானவர்கள் என்று அடையாளம் காட்டி உள்ளனர்.

முன்னதாக குறிப்பிட்ட 13 பேர்கள் இரகசிய மாகச் செயல்படும் குழுவாக (Sleeper cell) இருக்கலாம் அல்லது வற்புறுத்தலின் பேரில் காவல்துறை அவர்களை கைது செய்து இருக் கலாம். ATS - தீவிரவாதத் தடுப்புப்படையால் கைது செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்ட வர்களின் ஒப்புதல் வாக்குமூலங்களிலும் மும்பை குற்றப்பிரிவு காவல் துறையினரால் சமீபத்தில் கைதுசெய்யப்பட்ட 3 நபர்களின் ஒப்புதல் வாக்குமூலங்களிலும் பல முரண்பாடுகள் காணப்படுகிறன என்பதை கீழ்காணும் உண்மைகள் உறுதி படுத்துகிறன.

1. ATS மராட்டிய தீவிரவாத தடுப்புப் படையின் கூற்றுப்படி பைசல் ஷேக், ஆஷிப் கான் பஷீர், ஆகிய இந்த இருவர்தான் முக்கிய சதிகாரர்கள். ஆனால் மும்பை குற்றப்பிரிவு காவல் துறையினரோ (Indian mujahideen) இந்தியன் முஜாஹிதீன் அமைப்பை சேர்ந்தவர் களில் ஒருவரான சாதிக் ஷேக்தான் இந்த குண்டு வெடிப்பின் சதிகாரர் என கூறகின்றனர்.

2. வெடிகுண்டுகள் முஹம்மது அலியின் இல்லத்திலும் (Gowandi) கோவாண்டி செம்பூர் பகுதியிலும் ஒன்று சேர்க்கப்பட்டன என்ற ATSஇன் கூற்றுக்கு முரணாக அலி ரஹித் செவ்ரி (sewri) பகுதியில் வாடகைக்கு எடுத்த ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் ஒன்று சேர்க்கப் பட்டது (assemble) என்று குற்றப்பிரிவு கூறுகிறது.

3. ATS - மராட்டியத் தீவிரவாதத் தடுப்புப் படையைப் பொருத்தவரை வெடிகுண்டுகளை தயாரிக்க பஷிர்கான், ஆசிப்கான் ஆகியோர் அமோனியம் நைட்ரேட்டும் மற்றும் வெடிப் பான்களைக் (detonators) கொண்டு வந்தனர். அதே நேரத்தில் பாகிஸ்தானியரான (Ehsanullah) இஹ்ஸானுல்லாஹ் கொண்டு வந்த ஆர்.டி. எக்ஸ்ஸை கமால் அன்சாரி எடுத்து (transport) சென்றார். இந்த கூற்றுக்கு முரண்படும் விதத்தில் ரியாஜ் பட்கல் என்ற ரோஷன்கான் சவ்ரி அடுக்குமாடி குடியிருப்பில் வெடிகுண்டுகளை தயாரிக்க அமோனியம் நைட்ரேட் கொண்டு வந்தார் என மும்பை குற்றப்பிரிவு கூறுகின்றது. இந்த குண்டு வெடிப்பில் ஆர்டிஎக்ஸ் பயன்படுத்தப்படவில்லை என்றும் மும்பை குற்றப்பிரிவு கூறுகின்றது. இது ஒரு முக்கியமான முரண்பாடாகும்.

4. சாஜித் அன்சாரி குண்டை வெடிக்கச் செய்ய கடிகாரம் மற்றும் வேறு சில பொருட் களை கொண்டு வந்தாரென்று ATS கூறும் அதே வேளையில் எலெக்ட்ரிசியன் ஆரிப் ஷேக்தான் சீதாக்கேம்பில் (cheetah camp) உள்ள தனது வீட்டில்தான் வெடிகுண்டு சர்கியூட்டை தயாரித்து குண்டு வெடிப்புக்கு இரு தினங் களுக்கு முன் சவ்ரி (sewri) அடுக்குமாடி குடியிருப் புக்கு எடுத்துவந்தார் என்றும் கூறுகின்றது. இதுவும் முற்றிலும் முரண்பட்டத் தகவல். இவையெல்லாம் மும்பைக் குற்றப்பிரிவின் தகவல்கள்.

5. ATS - தாக்கல் செய்த குற்றப் பத்திரிக் கையில் பாக்கிஸ்தானிய தீவிரவாதிகள் கோவாண்டி என்னுமிடத்தில் உள்ள ஷேக் முஹம்மது அலீ வீட்டில் வெடி குண்டுகளைத் தயாரிக்க, அதனை ஆசிப்கான், பஷீர்கான், சாஜித் அன்சாரி மற்றும் இஹ்ஸான் சித்திக் ஒன்று இணைத்து வடிவமைக்க உதவி புரிந்தனர் என்று குறிப்பிட்டுள்ளனர். ஆனால் மும்பை குற்றப்பிரிவோ, வெடிக்குண்டுகளை சாதிக்ஷேக், முஹம்மது சயீஃப் மற்றும் இவரது சகோதரர் சாநவாஸ் கான் போன்றோர் ஒன்றிணைக்க (assemble) அதற்கு ஜீசான் ஷேக், ஆரிப்ஷேக், முஹம்மது சாஜித், அபுரஷீத் மற்றும் ஆதிஃப் அமீன் உதவினர் என்று சுட்டிக்காட்டி உள்ளனர்.

6. குண்டுகளைக் கொண்டு சென்றவர்களும் குண்டுகளை வைத்தவர்களும் முற்றிலும் வேறு வேறானவர்கள்.

7. சயீஃப், டெல்லி காவல்துறையிடம், "இந்த 13 பேரும் யார்? யார்? என்பது எனக்குத் தெரியாது என்று கூறியுள்ளார். (புனே மிரர் (THE TIMES OF INDIA 3 அக்டோபர் 2008. )

THE TIMES OF INDIA, MUMBAI, 15th Oct 2008)

பின்னர் வந்த செய்திகள் ஓர் உண்மையை ஊர்ஜிதம் செய்தன. அது இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்பிற்கும் குற்றம் சாட்டப்பெற்ற 13 பேருக்கும் இடையே உள்ள தொடர்பை நிரூபிக்க இயலாமற் போனது என்பதே. இது IB என்ற மத்திய உளவுத் துறைக்கு பயங்கர ஆதங்கத்தை ஏற்படுத்தியது.

இதில் ஐபி என்ற மத்திய உளவுத்துறை ஆதங்கப்படுவதற்கு எதுவுமில்லை. காரணம் இரண்டு புலனாய்வுகளுமே

அவர்களின் நாட்டப்படியும், திட்டபடியும் தான் நடத்தப்பட்டன. ஒன்றை ஏடிஎஸ் என்ற தீவிரவாத தடுப்புப் படை நடத்தியது. இதன் தலைவர் K.P. ரகுவான்ஷி ஐபி என்ற மத்திய உளவுத்துறைக்கு செஞ்சோற்றுக் கடனாற்றுபவர். இன்னொரு புலனாய்வை மும்பை குற்றப் பிரிவு செய்திருக்கின்றது. அதன் தலைவர் ரகேஷ்மாரியா ஐபி என்ற உளவு துறைக்கு தோட்டத்து தொழும்பர் அடிமை.

உண்மையிலேயே எது எல்லோரையும் ஆதங்கப்படுத்தி இருக்க வேண்டும் என்றால் ஐபி என்ற உளவுத்துறை புலனாய்வின் போக்கை மாற்றியதுதான் காரணம். இந்தப் புதிய வெளிப்பாடுகள் மோக்கா என்ற மாரட்டிய பொடா நீதிமன்றத்திலிருக்கும், மும்பைக் குண்டு வெடிப்பின் வழக்கை முற்றாகப் பாழ்படுத்திவிடும் என்பதே!

இதில் ஐபி என்ற மத்திய உளவுத்துறை நடந்து கொண்டது முற்றிலும் சந்தேகத்திற்குரியதே. ஐபி என்ற மத்திய உளவுத்துறை மும்பைக் குற்றப்பிரிவு கொண்டு வந்த இரண்டாவது கதையைத் தலையெடுக்க விட்டிருக்கக்கூடாது. காரணம் அது அரசை மிகப் பெரியதொரு நெருக்கடிக்கு உள்ளாக்கிவிட்டது. இந்தக் காரணத்தைச் சொல்லியே மத்திய உளவுத்துறை மும்பை குற்றப்பிரிவின் இரண்டாவது கதையை நிறுத்தி இருக்கலாம். ஏனெனில் (ஐபி) மத்திய உளவுத்துறை மும்பைக் குண்டு வெடிப்புகளில் ISI என்ற பாகிஸ்தானின் உளவுப்படைக்குப் பங்குண்டு எனக் கூறிவிட்டது. இப்படித்தான் ஷம்ஜவ்தா எக்ஸ்பிரஸ் ரயில் குண்டு வெடிப்பிலும் (ஐபி) மத்திய உளவுத்துறை பாகிஸ்தானிடம், அந்தக் குண்டு வெடிப்பிற்கும் பாகிஸ்தானின் உளவுத் துறைக்கும் பங்குண்டு எனக் கூறியது. பாகிஸ் தானுக்கு மட்டும் இந்த செய்தியை சொல்லிடவில்லை. உலகநாடுகள் அனைத்திற்கும் இந்த செய்தியைச் சொன்னது நமது அரசு. இதற்கு ஐபி என்ற மத்திய உளவுத் துறையின் தகவல்களையே நம்பியது நமது அரசு!

ஆனால் பின்னர் 2008இல் மாலேகானில் நடந்த குண்டுவெடிப்புகளை ஆய்வு செய்திடும் போது இந்துத்துவவாதிகளே ஷம்ஜவ்தா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்புகளையும் நடத்தினார்கள் என்பதை ஹேமந்த் கர்கரே கண்டுபிடித்தார்.

நிச்சயமாக ஹேமந்த் கர்கரே ஐபி என்ற மத்திய உளவுத்துறையின் அடாவடித் தனங்களுக்கு ஆட்படவில்லை. அவர் பிராமணர்களின் பேயாட் டங்களை வெளிப்படுத்தினார். உடனேயே ஐபி என்ற மத்திய உளவுத்துறை களமிறங்கி,



கர்கரேயின் கையைப்பிடித்தது. கர்கரேயின் போக்கில் அவரைவிட்டால், நம் நாட்டின் நம்பகத்தன்மை உலகநாடுகளில் கெட்டுப் போகும். ஆகவே நாம் அதற்கு வழிவிடக்கூடாது. தடுத்தாக வேண்டும் என்றார்கள். (THE TIMES OF INDIA JUNE 2008) ஆச்சரியப்படும் அளவில் ஐபி இதே வாதத்தை (வெளிநாடுகளில் நமது பெயர் கெட்டுப் போகும் என்ற வாதத்தை) மும்பைக் குண்டு வெடிப்பு விசாரணையில் முன் வைக்கவில்லை. மாறாக ஐபி என்ற மத்திய உளவுத்துறை புதியதாக கொண்டுவந்த கட்டுக் கதையை ஆதரித்தது.

இங்கே தான் ஐபி என்ற மத்திய உளவுத் துறையின் செயல்கள் நமக்கு வியப்பைத் தருகின்றன. மராட்டிய தீவிரவாத தடுப்புப் படை, ஷம்ஜவ்தா எக்ஸ்பிரஸ் ரெயில் குண்டு வெடிப்பு வழக்கை புலனாய்வு செய்த வகை, நம்பிடும் வகையில் இருந்தது. ஆனால் மும்பை ரெயில் பெட்டி குண்டு வெடிப்பு வழக்கில், நடந்த புலன் விசாரணை புதிர் புதர்களால் நிரம்பியனவாக் இருக்கின்றன. எதுவும் நம்பும் வகையில் இல்லை. அதனால் அதனை விசாலமாக ஆய்ந்தாக வேண்டும்.

அஹ்மதாபாத் குண்டு வெடிப்புகளுக்குப் பின்னால் மும்பையின் குற்றப்பிரிவு தலைவர் ராகேஷ் மாரியா பிரிந்திட முடியாத அளவில் ஐபி என்ற உளவுத்துறையின் முழுமையான கட்டுப்பாட்டில் இயங்கினார். அந்த முழு புலனாய்வையும் அவர் ஐபியின் விரல் அசைப் பிலேயே நடத்தினார். ஆகவே புதிதாக மும்பை குற்றப்பிரிவு கொண்டுவந்த கதை ஐ.பி.க்குத் தெரியாது என்பதை ஒத்துக்கொள்ள முடியாது. மாறாக அவர்கள் கொண்டுவந்த கதையை புனைந்ததே (ஐபி) என்ற மத்திய உளவுத் துறைதான். இது உண்மை என்றாகும் பட்சத்தில் எழும் வினா? ஐபி உளவுத்துறை ஏன் ஒரு புதுக்கதையைக் கொண்டுவந்திட வேண்டும்? இந்தப் புதுக்கதையால் முதலில் பதிவு செய்த வழக்கு கெட்டுப்போகும். சர்வேதேச அளவில் இந்தியாவின் நம்பகத்தன்மையும் கெடும். இதையெல்லாம் நன்றாகத் தெரிந்திருந்தும் ஐபி உளவுத்துறை ஏன் இந்தப் புதுக்கதையை புனைந்திட வேண்டும்.

ஆர்.டி.எக்ஸ் வகை வெடிபொருட்களை மும்பை குண்டு வெடிப்பில் பயன்படுத்திட வில்லை எனக் கூறிட வேண்டிய கட்டாயம் ஏன் வந்தது ஐபி என்ற மத்திய உளவுத்துறைக்கு? ஆர்.டி.எக்ஸ் வகை வெடி பொருள்கள் பயன் படுத்தப் பட்டிருக்கின்றன என்பது தெளிவானால் பல பிராமிணர்கள் கைது செய்யப்படலாம் என ஐபி அஞ்சியது. சில வேளைகளில் ஐபி என்ற மத்திய உளவுத்துறையே இதற்குத் துணைபோயிருக்கலாம். இதனால் மும்பைக் குண்டுவெடிப்பில் மத்திய உளவுத்துறையும் சிக்கலாம் என்ற நிலை உருவானது. இதற்கான சாட்சியங்களும் கிடைக்கவே செய்தன.

மராட்டிய மாநில தீவிரவாத தடுப்புக்காவல் துறை மாலேகான் 2008 குண்டுவெடிப்புகளை ஆய்வு செய்தபோது பல உண்மைகள் வெளியே வந்தன. அவற்றுள் முக்கியமானது புரோகித் என்ற இராணுவ அதிகாரி இராணுவத்தில் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி ஆர்.டி.எக்ஸ் வகை வெடிபொருள்களை கடத்தி இருக்கின்றார். இராணுவத்திலிருந்து கடத்தப் பட்ட இந்த வெடிப்பொருள்களைப் பயன்படுத் தியே 2003க்குப் பின் நடந்த பல குண்டு வெடிப்புகள் அரங்கேற்றப்பட்டுள்ளன.

## தி) புலனாய்வு புதிர்கள் - மாச்சர்யங்கள் ஐபி வழி!

இந்த இரண்டு புலனாய்வுகளிலும் பல புதிர்கள். காரணம் குற்றம் சாட்டப்பட்ட வர்களுக்கு எதிராக எந்த சாட்சியங்களுமில்லை. மொத்த வழக்கும் ஜோடிக்கப்பட்டவை.

## தீவிரவாத எதிர்ப்புப் படையின் முதல் புலனாய்வு:

1. புலனாய்வு முற்றிலும் தவறான ஒரு கோணத்திலிருந்தே தொடங்கப்பெற்றது. அதில் முஸ்லிம்களுக்கெதிரான மாச்சர்யங்களே முன்னணியில் நின்றன. அதுவும் நாட்டில் முக்கிய உளவுத்துறையாகிய ஐபி என்ற மத்திய உளவுத்துறையின் மனதை மருளச் செய்த மாச்சர்யங்கள். முதல் நாளிலேயே SIMI என்ற இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கமே (After noon Mumbai 12 July 2006) உடனேயே மும்பை காவல்துறையினர் லஷ்கரே தய்பா என்ற அமைப்பிற்கும் இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்திற்கும் (SIMIக்கும்) தொடர்பிருப்பதாக அறிவித்தார்கள். (Midday Mumbai 12 July 2006)


vaigarai velicham official

*2.* அதே நேரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்சிஸ்ட்) செயற்குழு உறுப்பினர் (polit beareu member) பிமன் போஸ் இந்தக் குண்டுவெடிப்புகள் இந்துத்துவ அடிப்படை வாதிகளின் கைவண்ணம் என்றார். அவர் செயற்குழு உறுப்பினர் மட்டுமல்ல, மேற்கு வங்கத்தில் ஆட்சி செய்து கொண்டிக்கும் இடது சாரி அரசின் அவைத் தலைவர். ஆனால் இந்த அறிக்கையை யாரும் கண்டுக்கொள்ளவில்லை. (Rediff 15 July 2006.)

*3.* புலனாய்வில் பல முக்கிய விஷயங்களைக் கருத்தில் எடுத்துக்கொள்ளவில்லை.


அவை

அ) அந்தக் குண்டுவெடிப்புகள் நிச்சயமாக் குஜராத்தில் நடந்த இனப்படுகொலைகளுக்குப் பதிலாக அமைந்திட இயலாது. காரணம் குஜராத் இனப்படுகொலைகள் நடந்து நான்காண்டுகள் கடந்துவிட்டன.

ஆ) ஒரு வாதத்திற்கு இதை ஏற்றுக்கொண்டால் கூட குண்டு வெடிப்புகள் இந்துக்களும் குஜராத்திக்களும் அதிகமாக வாழுமிடத்தில் தான் நடந்திருக்க வேண்டும் அதாவது சர்ச்கேட் என்ற ரெயில் நிலையத்திலிருந்து தாதர்வரைக்கும் அல்லது பேயண்டர் முதல் விகார் வரைக்குமுள்ள ரெயில் நிலையங்களுள் ஒன்றில் நடத்திருக்க வேண்டும்.

இ. ஆனால் பெரும்பாலான குண்டு வெடிப் புகள் முஸ்லிம்கள் அதிகமாக வாழுமிடங்களில் அல்லது அவற்றிற்குப் பக்கத்தில் நடந்திருக் கின்றன. அவை மாஹிம் ரெயில் நிலையத்தி லிருந்து மீரா ரோடு வரையுமுள்ள ரெயில் நிலையங்கள் வரை நடந்தன.

*4.* குண்டு வெடிப்புகள் தாதர் ரெயில் நிலையத்திற்கு பின்தான் நடக்கவேண்டும் என்ற அளவிலேயே ஏற்பாடு செய்திருந்தார்கள். தாதர் ரெயில் நிலையம் மராட்டிய பிராமிணர்கள் அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்குமிடம். அதேபோல் அது ஆர்.எஸ்.எஸ் என்ற இந்துத்துவ தீவிரவாத அமைப்பு வலுவாக இருக்கும் இடம். அதேபோல் குண்டுகள் இரண்டு ரெயில் நிலையங்களில் நிற்காத விரைவு வண்டி களிலேயே வைக்கப்பட்டிருந்தன. இந்த இரண்டு ரெயில் நிலையங்களும் விலே பார்லி



Vile Parle மாலாட் malad என்பவையாகும்.

*5.* நந்தேத் குண்டுவெடிப்பில் மராட்டிய மாநிலம் சம்மந்தப்பட்ட ஆர்.எஸ்.எஸ் விஷ்வ ஹிந்து பரீஷத் பஜ்ரங்தள் போன்ற தீவிரவாத அமைப்புகளின் தொண்டர்கள் விசாரணைக்கு உட்படுத்தப் படவில்லை.

*6.* முஸ்லிம்களல்லாத நான்கு இளைஞர்கள் சில வெடிக்காத குண்டுகளை பயேன்டர் என்ற இடத்திற்கு பக்கத்தில் வைத்துக் கடலில் வீசினார்கள். அவர்களைப் பற்றிய விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை.

*7.* அவுரங்காபாத் என்னுமிடத்தில் வாழும் பெண் கல்லூரி ஆசிரியர், விரிவுரையாளர் மத்திய உள்துறை அமைச்சரை அழைத்து மும்பை ரெயில் குண்டுகளை வைத்தவர்களை எனக்குத் தெரியும்., அவனுடைய பெயர் கணேஷ் கந்தராவ். அவன் ஔரங்காபாத்தில் உள்ள ஆஷா நகர் பகுதியில் இருக்கின்றான் என்றும் கூறினார். ஆனால் தொலைபேசியில் அவனுடையப் பெயரை பதிவு செய்தவர் தவறாகப் பதிவு செய்துவிட்டார். அதனால் பிடிக்க முடியவில்லை எனக் காவல்துறையினர் கூறிவிட்டார்கள்.

அந்தப் பெண்மணி மீண்டும் காவல்துறையை அழைத்துச் அவுரங்காபாத் சரியான பெயரைக் கொடுத்தார். அத்தோடு அவனைப் பற்றிய அதிக விவரங்களைத் தந்து ஓர் கடிதத்தையும் எழுதினார் ஆனாலும் காவல் துறையினர் அவனை விசாரிக்கவில்லை,

காவல்துறையினர் அவனுடைய சகோதர னையும், தந்தையையுமே விசாரித்தார்கள். விசாரணை முடிவில், அவன் குற்றவாளி அல்ல என்றும், அந்தக் கல்லூரி விரிவுரையாளரை அவன் மணந்து கொள்வேன் என வாக்களித்து மணந்து கொள்ளாததாலும் அவனை அவர் காட்டிக் கொடுத்தார் என முடித்துவிட்டார்கள்.

சம்பந்தப்பட்டவனை விசாரிக்கவே இல்லை. (The Times of India, Pune 18, August 2006)

ஒரு வாரத்திற்காக அந்தக் கல்லூரி விரிவுரையாளர் காதல் தோல்வியால் உந்தப்பட்டிருக்கலாம் என எடுத்துக் கொண்டாலும், அவர் சொன்னது பொய்யாகத் தானிருக்க வேண்டும் என்றில்லை. அந்தப் பெண் ஒரு கல்லூரி விரிவுரையாளர். ஒரு முக்கியமான தீவிர தாக்குதலில் மத்திய அமைச்சருக்கும் உள்ளூர் காவல்துறைக்கும் தவறான தகவல்களைத் தருவதால் ஏற்படும் விளைவுகளை நன்றாக அறிவார். அடுத்து தொலைபேசி பதிவாளர் தவறான பெயரைப் பதிவு செய்துவிட்டார் என்பதை அறிந்ததும், மீண்டும் சரியானப் பெயரைத் தந்தார். அத்தோடு ஓர் கடிதத்தையும் எழுதினார். இதனால் காவல்துறை ஓர் முழுமையான, ஆழமான விசாரணையை மேற்கொண்டிருக்க வேண்டும். அவர்கள் கடிதத்தில் இருக்கின்றார் என்பதைக் கண்டுபிடித்திருக்க வேண்டும். கூறப்பட்ட கணேஷ் கண்தராவ் என்பவர் எங்கே அவனைப் பற்றி அந்தப் பெண் சொன்னதெல்லாம் தீர விசாரித்திருக்க வேண்டும். பின்னர் அந்தப் பெண் விரிவுரையாளரோடு அவனை நேருக்கு நேர் வைத்து விசாரித்திருக்க வேண்டும். ஆனால் காவல்துறை எதையுமே செய்யவில்லை.

ஆனால், இதற்கு முற்றிலும் மாறாக, ஹைதராபாத் மக்க பள்ளிவாசலில் நடந்த குண்டு வெடிப்பில், இதேபோல் ஓர் புகாரை ஒரு முஸ்லிமின் இரண்டாவது மனைவி கொடுத்தார். காவல்துறையினர் உடனேயே அந்த முஸ்லிமின் வீட்டை சோதனை இட்டார்கள். அவருடைய நாட்டுத்துப்பாக்கி ஒன்றைக் கண்டெடுத்தார்கள். அவரை வீட்டிலிருந்து வெடிபொருள்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்தார்கள். சிறையிலடைத்தார்கள். பல மாதங்கள் அவர் சிறையிலேயே இருந்தார். பின்னர் அந்தக் குண்டு வெடிப்புகளுக்கும் தனக்கும் சம்மந்தமில்லை என்பதை நிரூபித்து வெளியே வந்து விட்டார். (THE TIMES OF INDIA: PUNE: 28 MAY 2007) இது காவல்துறையினர் எந்த அளவுக்கு மாச்சரீயமான போக்குடையவர்கள் என்பதை எடுத்துக் காட்டும்.

*8.* மும்பை ரெயில் குண்டுவெடிப்புகளின் கண்டுபிடிப்புகள் மராட்டிய மாநில பிராமணர்களின் பக்கம் திரும்பிற்று. அத்தோடு சங்கப் பரிவாரமும் அதில் சிக்கிக் கொள்ளும் நிலை வந்தது. உடனேயே IB என்ற மத்திய உளவுத் துறை களத்தில் குதித்தது. ISI-என்ற பாகிஸ்தான் உளவுத்துறை சம்மந்தப் பட்டிருப்பதாக அறிவித்தது. வழக்கில் எல்லா விசாரணைகளும் முடிந்ததாக அறிவித்தது. ஆகையால் பாகிஸ்தான் உளவுத் துறைக்கு எதிராக எந்தத் தடயமும் அதனிடமில்லை.

*9.* ஏ.டி.எஸ். (ATS) ANTI TERRORISM SQUAD: என்ற தீவிரவாத எதிர்ப்புப் படையினர் தாம் இதில் குற்றப் பத்திரிக்கையை தாக்கல் செய்தார்கள். அது தன் குற்றப்பத்திரிகையை மிகவும் நீட்டி முழக்கி இருந்தது. அவர்கள் செய்த குற்றங்களாக தீவிரவாத செயல்களுக்கான முழுப் பயிற்சி எடுப்பதற்காக பயணம் செய்தது, சதி செய்தது, பணம் வசூல் செய்தது, வெடிபொருள்களுக்கு ஏற்பாடு செய்தது, குண்டுகளைத் தயார் செய்தது, அவற்றை ரெயில் நிலையங்களுக்கு எடுத்துச் சென்றது, ரெயில்களில் வைத்தது போன்றவற்றை கூறியது. இந்தக் குற்றப் பத்திரிக்கையில் ஒரே ஒரு பிரச்னைதான் இருந்தது. அது, அத்தனை குற்றங்களுக்கும் ஒரே சாட்சியம் கைது செய்யப்பட்ட அப்பாவி முஸ்லிம்கள் தந்த ஒப்புதல் வாக்கு மூலமே!

*10.* இவர்களால் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் காவல்துறையினரை விசாரணையின் போது, டாஹிஸர் என்ற ரெயில் நிலையத்திற்குப் பக்கம் வரை அழைத்துச் சென்றாராம். அப்போது மும்பை குண்டு வெடிப்புகள் நடந்து மூன்று மாதங்கள் ஆகி இருந்தன. ஆனால் - மூன்று மாதங்கள் கழிந்த பின்பும், அங்கே சில வெடிபொருள்கள் கிடந்தனவாம். என்னே புருடா?

*11.* பல சாட்சியங்களைக் காவல்துறையினர் வரிசைப்படுத்தினர். ஆனால் அவர்கள் யார்? யார்? என்பதைச் சொல்லிட மறுத்து விட்டனர்.

*12.* சுக்கு நூறாய் சிதறிப்போன பாகிஸ்தான் உளவாளி ஒருவன் எனக் காவல்துறையினரால் கூறப்பட்ட ஒருவனின் முகத்தை குற்றம் சுமத்தப்பட்ட ஒருவன் அடையாளம் காட்டினானாம். இப்படியொரு கதையைச் சொன்னார் மும்பைக் காவல்துறை ஆணையர். எப்படி மண்டை ஓடுகளை மட்டுமே கொண்டு தீவிரவாதிகளை அடையாளம் காணுகின்றார். நேருக்கு நேர் நின்று அவர்களைப் புகைப்படம் எடுத்திருந்தால் கூட, இது முடியாது.


vaigarai velicham official

*13.* குற்றம் சாட்டப்பட்டவர்களை கண்ணால் கண்ட சாட்சியங்கள் உண்டா இல்லையா? என்பது தெரியவில்லை. ஆனால், அவர்கள் கண்டதாகச் சொல்லப்பட்டவற்றைக் கொண்டு அவர்களின் வரைபடங்களைத் தயார் செய்து, பிரசுரித்தும் விட்டார்கள்.

## மும்பை கிரைம் பிராஞ்சு - குற்றப்பிரிவின் இரண்டாம் புலனாய்வு

*1,* இரண்டாவது கோட்பாட்டின் அடிப்படையே பித்தலாட்டமானது. நம்பிட இயலாதது. ஒரு குற்றத்தில் திணிக்கப்பட்ட குற்றவாளிகள், தாங்களாகவே முன் வந்து இன்னொரு குற்றத்தை ஒப்புக் கொள்வார்கள் என்பது நம்ப தங்களை இணைத்துக் கொண்டு, காவல் துறையினரிடம் முடியாத ஒன்று. அதிலும் குண்டு வெடித்த வழக்கில் அனைத்தையும் சொல்வார்கள் என்பது நம்பிட முடியாத ஒன்று.

*2.* ATS என்ற தீவிரவாத தடுப்புப் படையினர் கைது செய்த 13 பேர், தந்த வாக்குமூலத்திற்கும், மும்பை கிரைம் பிராஞ்ச் கைது செய்த மூன்று பேர் தந்த வாக்கு மூலத்திற்குமிடையே எந்த ஒற்றுமையுமில்லை. அவை முற்றாக மாறுபடுகின்றன. இந்நிலையில் தீவிரவாத தடுப்புப் படையினர் கைது செய்தவர்கள், மற்றவர்களுடைய இரகசிய உதவியாளர்களாக இருந்தார்கள் என்பதை ஏற்றுக் கொள்ளவியலாது.

அதேபோல், கிரைம் பிராஞ்சுகாரரர்கள் கைது செய்தவர்கள், தீவிரவாத தடுப்புப்படையினர் கைது செய்தவர்களுக்கு இரகசிய உதவியாளர்களாக இருந்தார்கள் என்பதோ நம்ப முடியாதவை.

*3.* குண்டு வெடிப்புகளில் RDX ஆர்டிஎக்ஸ் வெடிபொருள்களைப் பயன்படுத்தினார்கள் என்பதை அறுதியிட்டுச் சொன்னவர்கள் தடயவியல் நிபுணர்கள். அவர்கள் “RDX” வகை வெடிபொருள்களை உபயோகப்படுத்தவில்லை என்பதைக் கூறுவது, கிரைம் பிராஞ்சால் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர். இதை வைத்துக் கொண்டு, ஆர்.டி.எக்ஸ் வகை வெடிபொருள்கள் பயன்படுத்தப் படவில்லை எனக் கூறிட இயலாது.

*4.* இந்த மொத்தப் பிரச்சனையும் 17 பெப்ரவரி 2009இல் ஒரு பெரும் குழப்பத்திற்கு ஆளானது. அன்றுதான், அன்றுதான் மும்பை (கிரைம் பிராஞ்சு) குற்றப்பிரிவு, இந்தியன் முஜாஹிதீன் என்ற புதிய அமைப்பின் மீது அதனைச் சார்ந்த ஐந்து பேரின் மீது, குற்றப்பத்திரிக்கை ஒன்றை தாக்கல் செய்தது. இவர்கள் தீவிரவாதிகள் என்றும், இவர்கள் அக்டோபர் 2008இல் கைது செய்யப்பட்டவர்கள் என்றும் கூறியது குற்றப் பத்திரிக்கை. இந்தக் குற்றப்பத்திரிக்கை உண்மையாக இருக்க முடியாது,

ஏனெனில்:-

(i). இந்தக் குற்றப்பத்திரிக்கை முதலில் இந்த ஐந்து பேர் மும்பை குண்டு வெடிப்புகளுக்கு, முதுகெலும்பாக இருந்தார்கள் எனக் கூறியது. இப்போது அக்டோபர் 2008-இல் தாக்கல் செய்த, குற்றப்பத்திரிக்கையில், இதுபற்றி "அவர்கள் முதுகெலும்பாக இருந்தார்கள்" என்பது பற்றி எதுவும் சொல்லிடவில்லை.

இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்பைப் பொறுத்தவரை அது பற்றி பெரிதாக ஒன்றும் குற்றப்பத்திரிக்கையில் இல்லை. குற்றப் பத்திரிக்கையில் இருப்பதெல்லாம். இந்தியன் முஜாஹித்தீன் என்ற அமைப்பு அனுப்பிய மின்னஞ்சல் பற்றி மட்டுமே!

இந்தியன் முஜாஹிதீன்கள் பற்றி இதற்குமேல் சொல்லிடுவதற்கு எதுவுமில்லை, காரணம் எங்களுக்கு - அதாவது - மராட்டிய தீவிரவாத தடுப்புப் படைக்கு அதிகார பூர்வமான தகவல் “Official Communication” எதுவும் வரவில்லை. இதனால் ஒரு துணை குற்ற பத்திரிக்கையைக் கூட எங்களால் பதிவு செய்ய இயலாது எனக் கூறி விட்டார்கள். (THE INDIAN EXPRESS, PUNE: 17, FEBRUARY. 2009)

(ii) குற்றப்பத்திரிக்கை, இந்தியன் முஜாஹிதீன்கள் 2005 முதலே நடந்த குண்டு வெடிப்புகளுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறுகின்றது. மொட்டையன் குட்டையில் வீழ்ந்தான் என்பது போன்ற இந்த ஒருவரிக்குப் பின் குற்றப்பத்திரிகையின் வேறு எந்தப் பகுதியிலும், இந்தியன் முஜாஹிதீன்களையும் குண்டுவெடிப்புகளையும் சம்மந்தப்படுத்தும் செய்தி எதுவுமில்லை. இனி 2005க்குப் பின் மும்பையில் எத்தனை குண்டு வெடிப்புகள் நடந்தன. அதில் இந்தியன் முஜாஹித்களுக்கு என்ன தொடர்பு என்பதையெல்லாம் ஆராய்ந்

தால் 2005க்குப் பின் மும்பையில் இரண்டு

அ) 2006 ஜூலையில் நடந்த அவை மும்பை ரெயில் பெட்டிக் குண்டு வெடிப்பு (அதைப் பற்றியது தான் இந்த ஆய்வு) இதில் தீவிரவாத தடுப்புப்படை, இந்திய முஜாஹிதீன்களுக்கும் குண்டுகளை வைத்ததற்கும் எந்த சம்மந்தமும் இல்லை எனக் கூறிவிட்டது. (email இ.மெயில் அளவோடு விட்டு விட்டது.

ஆ) அடுத்து 26.11.2008 என்ற மும்பைத் தாக்குதல்கள், இதில் ஆய்வுகள் நடந்துக் கொண்டிருக்கின்றன.

(iii) குற்றப்பத்திரிகை, அஹ்மதாபாத் - டெல்லி குண்டு வெடிப்புகளில் (2008) இந்தியன் முஜாஹிதீன்கள் என்ற IM பாதுகாப்பற்ற வயர் லெஸ் இணைப்புகளை (WIFI) பயன்படுத்தி மின்னஞ்சல்களை அனுப்பியுள்ளது. இவை

இந்தக் குண்டு வெடிப்புகள் நடப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன்னால் அனுப்பப்பட்டவை என்று கூறுகிறது. (THE TIMES OF INDIA, PUNE, 18, FEBRUARY 2009)

5. மும்பை குற்றப்பிரிவுக்கும், தீவிரவாதத் தடுப்புப் படைக்கும் இடையே நடந்த தகவல் பரிமாற்றக் குளறுபடிகள், மும்பை ரெயில் பெட்டி குண்டு வெடிப்பு விசாரணையின் நம்பகத்தன்மையை இன்னும் சீரழித்து விட்டது. இதில் இவர்களுடைய சர்க்கஸ் எஜமானர் 'IB' என்ற மத்திய உளவுத்துறை ஏன் இவர்களை இப்படியெல்லாம் "பல்டி" அடிக்க வைக்கின்றது என்பது அடிக்கடி புரியவில்லை. இதனால் இந்த இரண்டு காவல்துறை பிரிவுகளுமே (க்ரைம் பிராஞ்சு, என்ற குற்றப்பிரிவு, தீவிரவாத தடுப்புப்படை) கேலிக்குரியனவாக மாறி விட்டன. இதற்கு இந்த இரண்டு அமைப்பு களுமே காரணம். பின்வரும் இரண்டு மட்டுமே இதற்கு காரணமாக அமைந்திட இயலும்.

அ) இந்தத் தாக்குதலோடு சம்மந்தப்பட்ட பிராமணர்களைக் காப்பாற்றுவது. இதற்கு ஆர்.டி.எக்ஸ் வகை வெடிபொருள்கள் பயன்படுத்தப்படவில்லை என்றொரு பொய்/ பல்டி. இதில் வேறு ஹேம்மந் கர்கரே மாலேகான் 2008 குண்டு வெடிப்புகளை ஆய்வு செய்யும் போது பிராமண சக்திகளுக்கும் மும்பை குண்டு வெடிப்புகளுக்கும் தொடர்பிருப்பதை கண்டு பிடித்துவிட்டார்.

ஆ) கென் ஹேவூட் என்ற அமெரிக்கனை காப்பாற்றுவது. காரணம், இவரது கம்ப்யூட்டரில் இருந்து தான் இந்தியன் முஜாஹிதீன் பெயரில் ஈமெயில்கள் என்ற மின்னஞ்சல்கள் பறந்தன. (அவனுக்கும் மும்பைக் குண்டு வெடிப்புக்கும் உள்ள தொடர்பிலிருந்து அவனைக் காப்பாற்றிட வேண்டும்.)




vaigarai velicham official

இந்திய பிராமிணர்களையும், அமெரிக்க... ஹேவுட்களையும் காப்பாற்றிடுவதில் IB என்ற இந்திய உளவுத்துறை இந்தியாவை உலக அரங்கில் மிகவும் தாழ்வாகக் காட்டிக் கொண்டிருக்கின்றது.

ஆகவே இந்த மொத்தப் பிரச்னையும் மிகவும் சிக்கலானது.

பிராமண சதிகாரர்கள், உளவுத்துறை இவற்றின் சூழ்ச்சி மிகப் பெரியது. உண்மையைச் சொன்னால் மும்பைக் குண்டு வெடிப்புகளைப் பற்றிய இரண்டு புலனாய்வு களையுமே IB என்ற உளவுத்துறை தான் நடத்தியது.

## இந்தக் குழப்பத்தில், இரண்டு விஷயங்களுக்கு நாம் விடை கண்டாக வேண்டும்

*1.* IB என்ற மத்திய உளவுத்துறை ஏன் ஓர் தலைகீழ் பல்டி அடித்தது (மும்பை குண்டு வெடிப்பு விவகாரத்தில்)

*2.* உண்மையான குற்றவாளிகள் யார்?

இந்த இரண்டாவது கேள்விக்கான பதில் கிடைக்க IB என்ற உளவுத்துறை இல்லாத ஒரு தனி குழுமம் அதை ஆய்வு செய்திட வேண்டும்.

## பின்னால் நிகழ்ந்த சில நிகழ்வுகள்

இப்போது, IB என்ற மத்திய உளவுத்துறை தனக்குத்தானே பின்னிக் கொண்ட வலையி லிருந்து எப்படி வெளியே வந்திடும், என்பதை விளக்கிடுவது கடினம்.

ஆனால் அதற்குப் பின்னால் பத்திரிகைகளில் வந்த சில நிகழ்வுகள் மிகவும் முக்கியமானவை.

*1.* மராட்டிய மாநில முதலமைச்சர், துணை முதலமைச்சர், காவல் துறை ஆணையர், இவர்கள் தந்த அழுத்தங்களால் தீவிரவாத எதிர்ப்புப்படையின், துணை ஆணையர் சுப்போத் ஜேசுவால் தனக்கு கீழ் இருந்த அதிகாரிகளிடம் சில பொய்யான குற்றவாளிகளை கைது செய்திட பணித்தார். இதனால் பல அதிகாரிகள் (தீவிரவாத எதிர்ப்புப் படையைச் சார்ந்த அதிகாரிகள்) தங்களை கொண்டு சென்று விட்டார்கள். மிகவும் நேர்மையான அந்தப் படையிலிருந்து விடுவித்து - மாற்றல் வாங்கிச் வினோத் பாட் என்ற அதிகாரி தனக்குத் தந்த மன அழுத்தங்களைத் தாங்காமல் தற்கொலை கொண்டார். (ஆதாரம். மராத்தி மொழியில் வெளிவரும் ஷோதான் மும்பை *21-27* நவம்பர் *2008*, இது ஷிவசேனா என்ற இந்துத்துவ தீவிர வாதிகளால் நடத்தப்படும் சாம்னா என்ற பத்தி ரிக்கை செய்தியை மேற்கொள் காட்டி இருந்தது)

*2.* மாநில தீவிரவாத தடுப்புப்படை *18-2-2009*இல் முஹம்மத் சாதிக் இஸ்ரார் அஹ்மத் ஷேக் என்ற இந்திய முஜாஹிதீன் அமைப்பைச் சார்ந்தவரை போலீஸ் காவலுக்குத் தந்திட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப் போகின் றேன், என அறிக்கை விட்டார். அதன் மூலம் மும்பை குண்டு வெடிப்புகளுக்கும் அவர் களுக்கும் தொடர்புகள் உண்டா என்பதைத் தெரிந்திடப் போகின்றேன் என்றார்.

*3.* இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்பைச் சார்ந்தவர்களாகக் கருதப்படும், சாதிக் ஷேக்-இன் மும்பை குண்டு வெடிப்பு(7/11) பற்றிய ஒப்புதல் வாக்கு மூலம் மராட்டிய மாநில தீவிரவாத தடுப்புப் படைக்கு ஓர் அதிரடியாக அமைந்தது. காரணம், இரண்டாண்டுகளுக்கு முன் மராட்டிய தீவிரவாத தடுப்புப்படை *13* பேர் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்திருந்தது. ஆனால் சாதிக்-ஐயும் இதர இந்திய முஜாஹி தீன்களையும் அதில் சதிகாரர்களாக சேர்க்க வில்லை.

*27* பெப்ரவரி *2009*இல் சில தொலைக்காட்சி ஒளி சைகள் சாதிக் ஓர் ஒப்புதல் வாக்கு மூலம் கொடுப்பதாகக் காட்டின. அதில் அவன் தானும் தன்னை சார்ந்தவர்களுந்தான், பிரஷர் குக்கர் களை வாங்கினோம். அவற்றில் குண்டுகளை வைத்தோம். அவற்றை ரெயிலில் வைத்தோம் எனக் கூறினான். இப்போது ATS என்ற தீவிரவாத தடுப்புப்படை ஒரு இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக் கொண்டது. அது இப்போது சாதிக், புலனாய்வை திசை திருப்பிட சதி செய்கின்றான் எனக் கூறிற்று. (TIMES OF INDIA 28.2.2009)

*4.* மராட்டிய தீவிரவாத தடுப்புப்படை இந்தியன் முஜாஹிதின்களின் இணை தாளாளர் என கருதப்படும் சாதிக் ஷேக் என்பவனை **7.11.2006** மும்பைக் குண்டு வெடிப்பிலிருந்து விடுவிக்க உள்ளது. காரணம் எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை. இதனால் மராட்டிய மாநில கிரைம் பிராஞ்சு மானமிழந்து நிற்கின்றது. (TIMES OF IN DIA, PUNE, 17, MARCH, 2009)

இந்தத் தகவல்களிலிருந்து கிடைக்கும் படிப் பினை இரண்டு பொய்கள் ஓர் உண்மை ஆகிடா

# காமராஜர்-123. நினைவுக் கட்டுரை



## காந்தியாரைக் கொன்ற கூட்டம் பற்றி "பிளிட்ஸ்" காந்தியாரைக் கொன்ற 'கோட்சே' கூட்டமே காமராஜரையும் கூறி வைத்தது

### புதுடில்லிக் கலவரம் பற்றி பிளிட்ஸ் தரும் திடுக்கிடும் தகவல்கள்

ரத்தக்கறை தோய்ந்தது கடந்த திங்களன்று தலை நகரத்தில் காவி உடை அணிந்தும், உடை அற்ற அப்பட்டமான நிர்வாணக் கோலத்துடனும் வந்த சாதுக்கள், "திரிசூலம், பகவத் ஜெண்டாக்கள், பெட்ரோலில் நனைக்கப்பட்ட கந்தல் துணிகள் இவைகளைப் போர்க் கருவிகளாகப் பயன்படுத்தி தீ வைத்தும், ரத்த பெருக்கெடுத்தோடும்படி செய்த கடுங்காட்டு மிராண்டித்தனம் 'தாந்தே'யின் காவியமான புகழ்பெற்ற இங்கிலீஷ் (எழுத்தாளர்) இன்ஃபனோ கதையை நினைவுபடுத்துவதாகவே இருந்தது.

('தாந்தே' எழுதிய அந்நூலில் நரகம் பற்றி கற்பனையாக வர்ணிக்கப்பட்டுள்ளது.)

டில்லியில் சாதுக்கள் நடத்திய போர்க் களத்தை விரைந்து சென்று பார்த்த பத்திரிகையாளர்களுக்கு "நரகத்தின் வேட்டை நாய்கள்" கட்டவிழ்த்து விடப்பட்டனவோ என்று எண்ணும் வகையில் வளைந்து, உடைந்த திரிசூலங்களுக்கும், தீ ஜ்வாலைகளும் ஏராளமான 'மலைப் பிஞ்சு'களும், எரிந்த கட்டடங்களையும், கார்களையும், ஏன் மனிதர்களையும் கூட கொளுத்திய காட்சிகளுமே பார்லிமெண்ட்டிற்கு முன்பும் அதன் அருகாமையிலும் தென்பட்டன.

ஆட்சியைக் கைப்பற்றும் சூழ்ச்சியே நாட்டின் அதிகாரப் பீடத்தை வெறிகொண்ட மிருகத்தனமான கூட்டம் கைப்பற்றவே இதை நடத்தியது என்று எண்ணும் வகையில் அக்காட்சிகள் இருந்தன. சாதுக்கள் என்று இந்தப் புனித மனிதர்கள் கடவுள், மதம், புனிதமான பசு இவைகளின்

பெயரால் சற்றும் விரும்பத்தகாத, மிகவும் அருவருப்புக்குரிய இந்தப் பேய்த்தன நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்பது அந்நிகழ்ச்சிகள் நடைபெற்ற பிறகுதான் பலரும் உணரும் நிலையில் ஏற்பட்டது. கடவுள், மதம், பசு என்ற இவைகளை எல்லாம் ஜனசங்கம், ஆர்.எஸ்.எஸ். கும்பலின் வன்முறை ஈட்டிகள் மறைக்க உதவிய போர்வைகளே யாகும்!


vaigarai velicham official

இந்த இரத்தக் கறையேறிய திங்கட் கிழமை சம்பவங்கள் நமது மதச்சார்ப்பற்ற அரசியல் நாகரிகக் கோட்பாடுகள் மீது - ரத்தக்கறை படியும்படிச் செய்துவிட்டன. பசுவதையை எதிர்த்து சாதுக்கள் நடத்திய இந்தக் கிளர்ச்சியாலும் அதன் பின்னால் ஒளிந்துள்ள அதன் அமைப்பாளர்களாலும் அவர்களுக்குக் கூலி கொடுக்கும் எஜமானார்களாலும் தலைநகரம் வெட்கித் தலைகுனிந்து அதிர்ச்சியால் தாக்குண்டு, சின்னாபின்னப்பட்டிருக்கிறது.

அரசின் மதச்சார்பின்மை ஜனநாயகம் என்ற அரண்களைத்தாக்கி ஏதுமறியாதவர்களின் ரத்தத்தைக் குடித்ததோடு அடங்காமல் அதே நாளில் கோட்சேக்களும், அம்பேத்கர்களும், காங்கிரஸ் தலைவர் காமராசர் அவர்களது வீடு நோக்கி, தடிகள், கடப்பாறைகள், தீப்பந்தம் சகிதமாகச் சென்று, காந்தியைப் போலவே அவரைக் (காமராஜரை) கொலை செய்ய அவர் வீட்டிற்குத் தீ வைத்தனர்.

காமசராசர் தப்பித்தது மிகவும் அதிசய மானது. “புனிதமான” சங்கராச்சாரிகள், அவர்களது ‘புனித சீடர்கள்’ ஆகியவர்கள் ஒலி பெருக்கிகள் முழங்கிய காட்சியைக் கண்ட நான் அவர் ‘தப்பித்தது தெய்வாதீனமானது’ என்று சொல்வதற்கே வெட்கப்படுகிறேன். ஏனெனில் போலி மதத்தின் இந்தப் புனித மனிதர்கள் தெய்வத்தையே அவர்களது பெட்ரோல் டப்பாவிற்குள் அடைத்து விட்டனரே!

ரத்தமும், தீயும் நிறைந்த இந்தப் பின்னணியில் நடைபெற்ற ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் திரு ஏ.என்.ஜா, திங்களன்று வன்முறைச் சம்பவங்கள் தலைநகரைப் பிடித்து உலுக்கும் வரையில் ரகசிய போலீசார் மூலம் தனக்கு ஏதும் தகவல் வரவே இல்லையென்று குறிப்பிட்டார்.

ஊர்வலம் நடத்தியவர்களால் நான் ஏமாற்றப் பட்டதாகவும், தவறாகத் திசை திருப்பிவிடப் பட்டதாகவும் அவர் பேட்டியில் கூறியது, அவரது திறமையின்மையை அப்படியே ஒப்புக் கொண்டதாகும்.

### கலவரத்துக்கு அதிகாரிகளும் உடந்தையா?

எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல் அக்டோபர் சம்பளத்தை முதல் தேதி பெற மறுத்த போலீஸ்காரர்களின் வெறுப்பு



இதோடு சேர்ந்து கொண்டு.

ஒரு மாதகாலமாக டெல்லித் திருநகரில் ஜனசங்கம், ஆர் எஸ்.எஸ் ஆகியவைகளாலும் அவர்களுக்குத் தாராளமாகப் பணம் உதவும் இந்திய ஏகபோகப் பெரு முதலாளிகளாலும் வன்முறைகளைக் கட்டவிழ்த்து பசுவதையை அடியோடு தடுக்க வற்புறுத்தவும் செய்யப்பட்டு வந்த ஏற்பாடுகள் ஆயத்தங்கள் பற்றி தமக்கு ஏதும் தெரியாது என்று டில்லி அதிகார வட்டாரங்கள் மறுத்தபோதிலும் பொதுமக்களுக்கு இது தெளிவாகத் தெரிந்ததே!

காரணம், கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு செத்ததை வைத்து ஒரு பசு கண்டன கூட்டங்கள் நடத்தக்கோரும் போஸ்டர்கள் ஏராளமாக டில்லியில் ஒட்டப்பட்டன.

அந்தப் பசு கொல்லப்பட்டது என்று அதில் விளம்பரப்படுத்தப்பட்டது. சுவரொட்டிகளை ஒட்டியவர்களை அதிகாரிகள் கைது செய்ததோடு அந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்க இருந்த பானை வயிறுள்ள லாலா ஒருவரையும் கைது செய்தனர்.

15 நாட்களுக்கு முன் டில்லி முனிசிபல் கார்ப்பரேசன் பிரபல ஜனசங்கி ஒருவர், பசுவுக்கு இழைக்கப்படும் வன்முறை கொலைக்கெதிராக இன்னும் சில நாட்களில் தலைநகர் ஆர்த் தெழுந்து கிளம்பும் என்று மார்தட்டினார்.

இப்படிப்பட்ட எந்த முன்னோடிச் சம்பவங் களும் நமது அதிகார வர்க்கத்தினரால் கவனிக்கப்படவுமில்லை. எனவே, டில்லி லெஃப் கவர்னர் திரு. ஜா காலந்தாழ்ந்த நிலையில் இனிமேல் உள் எதிரிக்கு இடம் தரமாட்டோம் என்று கூற வேண்டியதாயிற்று.

எல்லாவற்றையும்விட வேடிக்கை லாகா என்னவென்றால் உள்துறை காரியதரிசியான திரு. எச்.பி. சிங், விடுத்த அறிக்கையில் யூனியன்

அரசாங்க அதிகாரிகட்கு என்ன நடைபெற போகின்றது என்பது முன்கூட்டியே நன்கு தெரியும் என்றும், எனவேதான் அவர்கள் போதுமான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தனர் என்றும் குறிப்பிட்டதுதான்! இதற்கு ஆதாரமாக இவர் பார்லிமென்ட் சதுக்கத்தில் மாத்திரம் 1900 போலீஸ்காரர்களை நிறுத்தினோம் என்று கூறி போலீசாரால் வன்முறை ஏற்பட்டது என்ற குற்றச்சாட்டுக்கு ஆதரவு தேடியுள்ளார்.

தமக்கு முன்கூட்டி எதுவும் ரகசிய உளவுத் துறையினரால் தகவல் தரப்படவில்லை என்று லெஃப் கவர்னர் கூறியதை மறுக்கும் வகையில் திரு சிங் நிறைய பிரயாசை யெடுத்துக் கொண்டார். எனினும், ஹால் நிறையக் கூடிய நிருபர்கள் கூடிய நிருபர்கள் முன் இது செல்லுபடியாகவில்லை.

## காந்தியைக் கொன்ற ஆர்.எஸ்.எஸூம் கலந்துகொண்டது

ஜில்லா மாஜிஸ்திரேட் திரு தாண்டன் நிலையோ பத்திரிகையாளர் பேட்டியின்போது மிகவும் பரிதாபமாக இருந்தது. “கோமாதா”வின் பெயரால் பார்லிமென்டின் முன்பு ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர்கள் யார், யார்? என்ற கேள்வியை அவரிடம் பத்திரிகையாளர்களால் கேட்கப் பட்டபோது அமைப்பாளர்களில் ஒன்று ஜனசங்கம், மற்றொன்று ஆரிய சமாஜ் என்று கூறினார். ஆனால் அவருக்கு ஆர்.எஸ்.எஸ்சை ஞாபகம் வைத்திருக்க முடியவில்லை. பாவம் சங்கராச்சாரிகளின் நிர்வாணச் சாதுக்களும் மந்திர உச்சாடனம் ஏறிய முனிகளுக்கும் பின்னால் முன்பு காந்திஜியையும், அண்மை யில் கிரந்திக் குமாரையும் கொலை செய்த கொலை பாதகர்களான ஜனசங்கத்தினரும் ஆர்.எஸ்.எஸ். காரர்களும் இருந்தனர் என்பதே அப்பட்டமான கல்லைப் போன்ற உண்மையாகும்.

கிரந்திகுமாரும் மற்றவரும் உயிருடன் எரிக்கப்பட்டனரே! கிரந்தி குமாரும், இன்னும் இரண்டு பேரும் சோனிப்பட்டில் சில மாதங்களுக்கு முன் பஞ்சாபி சபாவுக்கு எதிராக, ஜனசங்கத்தினரும் ஆர்.எஸ்.எஸ். காரர்களும் ரத்த வெறிகொண்ட கிளர்ச்சி நடத்தியபோது உயிருடன் எரிக்கப்பட்டவர்கள் என்பது நினைவு கூரத்தக்கதாகும்.

ஜனசங்கத்தைச் சேர்ந்த சுவாமி ராமேஸ்வ னாந்த என்பவர்தான் பெட்ரோல் டின்களும் வைத்திருந்த சாதுக்களை (?) பார்லிமென்ட் கட்டடத்தை நோக்கி படையெடுக்கும்படி ஏவியவர், காவி உடைச் சாமியார் பேச்சுத்தான் ரத்தக் களறியைத் தொடங்கி வைத்தது.

காந்தி கொலை நாட்களைப் போலவே ஆர்.எஸ்.எஸ். காரர்கள் அவர்களது யூனிஃபாரத்துடனேயே “மார்ச்” செய்து சென்றனர். அவர்கள் பிரதான ஊர்வலத்திலிருந்து பிரிந்து சென்று அருவருக்கத்தக்க பல செயல்களைச் செய்துவிட்டு மீண்டும் அவர்கள் வந்து சேர்ந்து கொண்டனர்.

## ஆர்.எஸ்.எஸ்.ஸின் அருவருக்கத்தக்க வெறியாட்டம்

மிகவும் கேவலமான முறையில், சூறைகளை நடத்தியவர்கள் அவர்களே! ஒரு சாதுவின் தலைமையில் சென்று அகில இந்திய ரேடியோ நிலையம் முன் சென்று தீ வைத்துக் கொளுத்தியவர்களும் அவர்களே. ஆனால் அங்கிருந்த பணியாட்களால் அவர்கள் ஸ்டூடியோவிற்குத் தீ வைக்க முனைந்தபோது நையப்புடைக்கப் பட்டார்கள்.

டிரான்ஸ்போர்ட் பவனம், ஆகாச வாணி பவனம், பத்திரிகையாளர் பவனம் ஆகியவை களுக்கருகில் இருந்த கார்களை நொறுக்கியும் தீ வைத்ததுமான செயல்கள் அத்தனையும் நடத்திய அனைவரும் ஆர்.எஸ்.எஸ். கட்சியில் பயிற்சி பெற்ற தொண்டர்களே.

அதே ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள்தான் பார்லி மென்ட் தெருவின் நடுவில் உள்ள பட்டேல் சிலைக்கு அருகில் பிரிந்து சென்று அங்கு அசோகா ரோட்டிலிருந்து சில கட்டடங்களைத் தாண்டி குதித்து ஐந்தர் மந்தர் ரோட்டிலுள்ள காமராசர் இல்லத்தைச் சுற்றிவளைத்து முற்றுகை-யிட்டவர்கள் நாசவேலை நடத்தியவர்களாவர்.

லெஃப் கவர்னர் ஜா-வும், உள்துறை காரிய தரிசி சிங்-கும் கலந்துகொண்ட பத்திரிகை யாளர்கள் கூட்டத்தில் விநியோகிக்கப்பட்ட பிரஸ் இன்ஃபர்மேஷன் பீரோவினால் சற்று நேரத்திற்குப் பிறகு வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில்


vaigarai velicham official

## FIR 59 விசாரணை – குற்றப்பத்திரிகை – சாட்சிகள்

FIR 59ல் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிக்கை வடகிழக்கு டெல்லியில் நடந்த வன்முறை தன்னிச்சையாக ஏற்பட்டது அல்ல, முறையாக திட்டமிடப்பட்ட சதி மூலமாகவே நடைபெற்றது என்று டெல்லி காவல்துறை வாதிப்பதற்கான அடிப்படை ஆவணமாக அமைந்துள்ளது. இந்த FIR விசாரணையை ஆரம்பித்த சில வாரங்களுக்குள் காவல்துறை UAPA சட்டத்தை பயன்படுத்தியது. இது குற்றச் சாட்டுகளின் தன்மையை முற்றிலும் மாற்றியது.

UAPA விசாரணையை ஆய்வு செய்யும்போது, இந்த குழு 2020 செப்டம்பர் 16 அன்று தாக்கல் செய்யப்பட்ட முதலாவது குற்றப் பத்திரிக்கையையே மட்டுமே ஆராய்ந்தது. ஒரு வழக்கில் UAPA குற்றச்சாட்டை சேர்ப்பதால் ஏற்படும் விளைவுகள் மற்றும் தாக்கங்கள் அடுத்த அத்தியாயத்தில் விவரிக்கப்படும். குற்றவியல் சட்டத்தின் பரிணாம சட்டக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு குற்றப் பத்திரிக்கையில் உள்ள ஆவணங்களைமட்டுமே நாங்கள் மதிப்பாய்வு செய்கிறோம்.

இது உண்மையை தோண்டிப் பார்க்கும் முயற்சி அல்ல என்பதைக் தெளிவுபடுத்துவது முக்கியம். காவல்துறைக்கு சாட்சி அளித்த நபர்களையோ, பாதிக்கப்பட்டவர்களையோ அணுகி அவர்கள் கூற்றுகளை சரிபார்க்க எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. எந்த ஒருவருக்கெதிரான ஆதாரங்களை முழுமையாக நாம் பரிசீலிக்கவில்லை என்பதோடு, அந்த நபர் குற்றவாளியா அல்லது குற்றமற்றவரா என்ற சாராம்சத்தில் கருத்திடுவதில்லை. குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் தேவையான இடங்களில் மறைக்கப்பட்டுள்ளன.

### FIR 59: பதிவு மற்றும் ஆரம்ப விசாரணை

FIR 59, 2020 மார்ச் 6 அன்று லோதி ரோடு காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது. சிறப்பு பிரிவு காவல் ஆய்வாளர் அரவிந்த் குமார் அளித்த புகாரின் அடிப்படையில் உமர் காளித் மற்றும் தனிஷ் ஆகியோருக்கு எதிராக ஆபத்தான ஆயுதங்களுடன் கலவரம் ஏற்படுத்த சதி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது. அவரது புகாரில் அரவிந்த் குமார் கூறுவதாவது,

“ஒரு ரகசிய தகவலாளரிடமிருந்து கிடைத்த தகவலின் பேரில் பிப்ரவரி மாதத்தில் டெல்லியில் நடந்த வன்முறை முன்கூட்டியே திட்டமிடப்பட்டதாகவும் அதை உமர் காளித் மற்றும் அவரது கூட்டாளிகள் நடத்தினதாகவும் தெரிகிறது.”

**புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:**

உமர் காளித் மற்றும் அவரது கூட்டாளிகள் போராட்டக்காரர்களை கலவரத்திற்கு தூண்டினர்;

மரக் கோல்கள், பெட்ரோல் குண்டுகள், ஆசிட் பாட்டில்கள், கற்கள் போன்ற ஆயுதங்



களை ஏற்பாடு செய்து வழங்கினர்;

ஜாப்ராபாத் மெட்ரோ நிலையத்திற்கு வெளியே பெண்கள் கூடுமாறு ஏற்பாடு செய்து வன்முறையைத் தொடக்கி வைத்தனர்.

தொடக்கத்தில் இந்த FIR-ல் சட்டவிரோத கூடுகை, கலவரம் மற்றும் குற்ற சதி ஆகிய பிணையளிக்கக்கூடிய குற்றச்சாட்டுகள் மட்டுமே சேர்க்கப்பட்டிருந்தன. குறிப்பிடத்தக்கது என்னவென்றால், இந்த FIR தாக்கல் செய்யப் பட்டபோது உமர் காளித் கைது செய்யப்பட வில்லை. FIR 59ல் ஆரம்ப கைது 2020 மார்ச் 9 அன்று தனிஷ் கைது செய்யப்பட்டார்; மார்ச் 11 அன்று முகம்மது இலியாஸ் மற்றும் பர்வேஸ் ஆலம் (FIR-ல் பெயர் குறிப்பிடப்படாதவர்கள்) கைது செய்யப்பட்டனர்.

2020 மார்ச் 13 அன்று அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர், ஏனெனில் அந்த குற்றங்கள் அனைத்தும் பிணையளிக்கக்கூடியவை. இங்கே கவனிக்க வேண்டியது என்னவென்றால், தனிஷ், முகம்மது இலியாஸ் மற்றும் ஆலத்துக்கு எதிராக எந்தவொரு விசாரணையும் மேற்கொள் ளப்படவில்லை. மேலும் அவர்களுக்கெதிராக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படவில்லை.

2020 மார்ச் 15 அன்று, தனிஷ் மற்றும் மற்றவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்ட இரண்டு நாட்களில், கொலை சதி (பிரிவு 302 உடன் 120B), கொலை முயற்சி (பிரிவு 307), தேசத் துரோகம் (பிரிவு 124A), சமூகக் குழுக்களுக்கு இடையில் பகைமை ஊக்குவித்தல் (பிரிவு 153A) போன்ற இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் பிணையளிக்க முடியாத குற்றங்கள் FIR-ல் சேர்க்கப்பட்டன.

### UAPA குற்றச்சாட்டைச் சேர்த்தல்

2020 மார்ச் 21 முதல் ஏப்ரல் 13 வரை, இஷ்ரத் ஜஹான், காளித் செய்ஃபி, மீரான் ஹைதர், தாஹிர் ஹுசைன், குல்ஃபிஷா கத்தூன் மற்றும் சபூரா ஸர்கார் ஆகியோர் கைது செய்யப் பட்டனர். இதே காலப்பகுதியில், இந்தக் குற்றச்சாட்டாளர்களில் சிலர் தனிப்பட்ட வன்முறைச் சம்பவங்களுக்கு உரிய IPC FIRகளில் பிணை பெற முடிந்தது. ஏனெனில் அவர்கள் மீது கலவரம் அல்லது தாக்குதல் குற்றச்சாட்டுகளை ஆதரிக்க ஏதுவான ஆதாரம் நீதிமன்றத்தில் காணப்படவில்லை.

ஆனால், FIR 59இல் விசாரணை நடத்திய போது, சிறப்பு பிரிவு (Special Cell) தீவிரவாதச் செயல்கள் மேற்கொள்ள சதி நடந்துள்ளது என்ற ஆதாரத்தை கண்டுபிடித்ததாக கூறப்பட்டது. இதையடுத்து, 2020 ஏப்ரல் 19 அன்று, UAPA சட்டத்தின் பிரிவு 13 (சட்டவிரோத செயல் களுக்கு தண்டனை), பிரிவு 16 (தீவிரவாதச் செயலுக்கு தண்டனை), பிரிவு 17 (தீவிரவாதச் செயலுக்கு நிதி திரட்டியதற்கான தண்டனை) மற்றும் பிரிவு 18 (சதி குற்றத்திற்கான தண்டனை) ஆகியவை FIR 59இல் சேர்க்கப்பட்டன.

UAPA பிரகாரம் தீவிரவாதச் செயலுக்கு பிணை வழங்கும் முறை, IPC குற்றங்களுக்கு பிணை வழங்கும் அளவுகோலுடன் ஒப்பிடு கையில் மிகவும் கடுமையானதாகும். இதுவரை, 21 பேர் கைது செய்யப்பட்டு, நான்கு குற்றப் பத்திரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.



கைது செய்யப்பட்ட 21 பேரில் 18 பேருக்கு குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அவர்கள் அனைவருக்கும் UAPA நடைமுறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவர்களில் ஆறு பேருக்கு பிணை வழங்கப்பட்டாலும், ஆகஸ்ட் 2022 நிலவரப்படி 12 பேர் காவலில்தான் இருக்கின்றனர்.

### UAPA பயன்படுத்துவதற்கான அடிப்படை ஆதாரங்களின் சரிபார்ப்பு

குற்றப்பத்திரிக்கை வெளிப்படுத்துவதைப் பார்த்தால், 2020 ஏப்ரல் 19க்கு முன்பு சிறப்பு பிரிவினர், கைது செய்யப்பட்டவர்களிடம், ஒப்புதல் வாக்குமூலங்களையும், எட்டு பாதுகாக்கப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலங் களையும் பதிவு செய்துள்ளது. ஆனால், காவல் நிலையத்தில் காவல்துறையிடம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் சாட்சியாக நீதிமன் றத்தில் ஏற்கப்படாது என்பது குறிப்பிடத்தக்கது.


vaigarai velicham official




இப்படி ஏற்க முடியாததற்கான அரசியலமைப்பு தடை உள்ளது. ஏனெனில், காவல் நிலையத்தில் குற்றம் சட்டப்பட்டவர்களிடம், வலுக்கட்டாயமாக அல்லது அழுத்தம் கொடுத்து வாக்குமூலம் பெற்றிருக்க வாய்ப்பு உள்ளது என்பதே இதற்கான காரணம்.

சிறப்பு பிரிவு ஏன் UAPAஐ பயன்படுத்த முனைந்தது என்பதை புரிந்துகொள்வதற்காக அவை எங்கள் குழுவால் பரிசீலிக்கப்பட்டுள்ளன. அவற்றை கவனித்தபோது, காவல்துறை அளித்த குற்றப்பத்திரிக்கை எந்தவொரு புதிய குற்றத்தையும் காட்டவில்லை என்றும் சப் இன்ஸ்பெக்டர் அரவிந்த் குமார் அளித்த புகாரில் கூறியதைவிட மேலதிக ஆதாரம் இல்லை என்றும் தெரிய வருகிறது.

*2020* ஏப்ரல் *21* அன்று சிறப்பு பிரிவினர், மத்திய அரசுக்கு அனுப்பிய கடிதத்தில் கூட UAPA சேர்த்ததைப் பற்றி, ஏற்கனவே FIRல் இருந்த ஆதாரங்களை மட்டுமே மறுபடியும் தெரிவித்திருக்கிறார்கள். அதனால், சிறப்பு பிரிவினரின் பக்கமும் பார்த்தால் கூட, *2020* ஏப்ரல் *19* அன்று UAPA சேர்க்கப்படுவதற்கான புதிய ஆதாரங்கள் எதுவும் வெளிப்பட்டதாக தெரியவில்லை.

விசாரணை அதிகாரி நீதிமன்றத்தில் விளக்கம் அளிக்க வாய்ப்பு இருந்தாலும், FIR பதிவு செய்யப்பட்ட ஒரு மாதத்திற்கு பிறகு UAPA திடீரென சேர்க்கப்பட்டதற்கான புதிய ஆதாரங்கள் குற்றப்பத்திரிக்கையில் எதுவும் இல்லை என்றே தெரிகிறது. அதே நேரத்தில், கலவரத்திற்கான பிரதான சதி சூழ்ச்சியாளர் மற்றும் அமைப்பாளராக பெயர் குறிப்பிடப்பட்ட உமர் காளித் மீது கூட சிறப்பு பிரிவு UAPA சேர்த்த பிறகும் உடனடியாக கைது செய்யவில்லை என்பதும் கவலையளிக்கிறது.

அவர் ஆறு மாதங்கள் கழித்து செப்டம்பர் *2020*ல் கைது செய்யப்பட்டார். UAPA குற்றச்சாட்டை பயன்படுத்திய பிறகும் ஆறு மாதங்கள் உமர் காளித் கைது செய்யப்படாமை என்பது, தீவிரவாத குற்றம் நடந்துள்ளது என்ற சிறப்பு பிரிவினரின் கூற்றை தாங்களே நம்பவில்லை என்றுதான் காட்டுகிறது.

### FIR 59இல் முதலாவது குற்றப்பத்திரிக்கையின் பகுப்பாய்வு

FIR 59 வழக்கில், *2020* செப்டம்பர் *16* அன்று தாக்கல் செய்யப்பட்ட முதலாவது குற்றப்பத்திரிக்கையானது, ஆரம்பக் குற்றச்சாட்டாளர்கள் எண் *1* முதல் *16* வரை, எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த விசாரணை தொடர்ந்து நடைபெற்று கொண்டிருக்கும் நிலையிலும், இக்குழு அதன் பகுப்பாய்வை முதலாவது குற்றப்பத்திரிக்கையிலே மட்டுப்படுத்த வேண்டியிருந்தது.

### பெரிதான தீவிரவாத சதி குறித்த ஆதாரம்

இந்த குற்றப்பத்திரிக்கையில், குற்றச்சாட்டாளர்கள் கலவரங்களை ஏற்படுத்தி அரசாங்கத்தை CAAவை திரும்ப பெற வைக்கும் நோக்குடன் சதி செய்தனர் என சிறப்பு பிரிவு வாதிக்கிறது. இந்த முழுமையான சதி *2019* டிசம்பர் முதல் *2020* பிப்ரவரி வரை சதி திட்டமிட்டவர்கள் நடத்திய சுமார் இருபது முக்கிய சந்திப்புகள் மூலம் திட்டமிடப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்புகளில் நடந்த விவாதங்களை நெருங்கிக் கேட்டவர்கள் அல்லது நேரில் இருந்தவர்கள் அதை காவல்துறைக்கு தெரிவித்ததாக குற்றப்பத்திரிக்கை கூறுகிறது. பட்டியலிடப்பட்ட சந்திப்புகளில் சில தனிப்பட்ட முறையில் பார்ப்பதற்கு சாதாரணமானவையாகவும், எந்தக் குற்றப்புரிதலும் இல்லாதவையாகவும் இருக்கின்றன. அவை வெறும் போராட்டங்களை ஏற்பாடு செய்வது மற்றும் அவற்றுக்கு ஒருங்கிணைப்புக் குழுவை அமைப்பது போன்ற விடயங்களை மட்டுமே விவாதிக்கின்றன.

போராட்டங்களை ஒருங்கிணைக்க கூட்டங்கள் நடத்துவது மட்டுமே, குற்றச்சதி என்ற சட்டப்பாதையை எட்டாது. இந்திய அரசியலமைப்பின் பிரிவு *19*ன் கீழ் அமைதியான

போராட்டம் நடத்தும் உரிமை அடிப்படை உரிமையாக உறுதிசெய்யப்பட்டுள்ளது என்பது நிறுவப்பட்ட சட்டக் கோட்பாடாகும்.

சில சந்திப்புகளில் குற்றச்செயல்களைப் பற்றி விவாதிக்கப்பட்டதாக கூறப்படும் இடங்களில், அந்த விவாதங்களுக்கான ஆதாரம் காவல்துறையிடம் குற்றம் சாட்டாப்பட்டவர்கள் அளித்த ஒப்புதல் வாக்குமூலங்கள் அல்லது அந்த சந்திப்புகளில் கலந்து கொண்ட அல்லது அதை அருகே கேட்ட சாட்சிகளின் வாக்குமூலங்கள் ஆகும்.

மேலே குறிப்பிடப்பட்டபடி, காவல்துறையிடம் குற்றம் சாட்டாப்பட்டவர்கள் அளித்த ஒப்புதல் வாக்குமூலங்கள் சட்டப்படி ஏற்றுக் கொள்ள முடியாதவை. அதேசமயம், குற்றச் செயலின் விவரங்களை வழங்கும் சாட்சிகள் சம்பவத்திற்குப் பிறகு உடனடியாக அளித்த வாக்குமூலங்கள் மட்டுமே, குற்றச்செயலுக்கு வலுவான ஆதாரமாக கருதப்படும்.

ஆனால் சிறப்பு பிரிவு பதிவு செய்த பொதுச் சாட்சிகள் அளித்த வாக்குமூலங்கள் கோர்ட்டில் சோதிக்கப்படும் என்பதில் சந்தேகம் இல்லை. குறிப்பிடத்தக்கது என்னவென்றால், கலவரத்திற்கான ஆயத்தங்கள், ஆயுதங்கள் விநியோகம் போன்ற குறிப்பிட்ட விவரங்களை கேட்டதாக கூறும் அனைத்து பொதுச் சாட்சிகளும் அந்த விவரங்களை காவல்துறைக்கு தெரிவிக்க இரண்டு மாதங்களுக்கு மேலாக காலம் எடுத்துள்ளனர்; FIR 59இல் நடந்த ஆரம்பக் கைது நடவடிக்கைகளையும் பல மாதங்கள் கடந்த பிறகே செய்துள்ளனர்.

உதாரணமாக, பாதுகாக்கப்பட்ட சாட்சி JUPITER, 2020 ஜனவரி 2 அன்று நடைபெற்ற சந்திப்பில் போராட்டங்களை, அரசாங்கத்தை நிலைமையை மாற்ற வைக்கும் வகையில் பயன்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாகக் கூறுகிறார். ஆனால் அவர் அதை முதன்முறையாக 2020 ஆகஸ்ட் 3 அன்று தெரிவித்தார். அதாவது கலவரத்திற்குப் பிறகு ஆறு மாதங்கள் கடந்தும், ஆரம்பக் குற்றச்சாட்டாளர்கள் எண் 1-16 வரை கைது செய்யப்பட்ட பிறகு அவர் அதை கூறியுள்ளார்.

பாதுகாக்கப்பட்ட சாட்சிகள் SMITH மற்றும் SIERRA, 2020 ஜனவரி 23 அன்று உமர் காளித் தனது கூட்டாளிகளுடன் கலவரத்தைத் தூண்டும் திட்டத்தை விவரித்ததாகக் கூறுகிறார்கள்.

பாதுகாக்கப்பட்ட சாட்சிகள் ECHO மற்றும் YANKEE ஆகியோரும் ஜனவரி இறுதியில் நடந்த மற்றொரு சந்திப்பில் உமர் காளித் தனது திட்டத்தை வெளிப்படுத்தியதாகக் குறிப்பிடு கிறார்கள். இதில் ECHO இதைப் பற்றி காவல் துறைக்கு 2020 ஏப்ரல் 16 அன்று தெரிவித்தார்; SIERRA மற்றும் YANKEE ஜூன் மாதம் (2020 ஜூன் 23 மற்றும் ஜூன் 24 அன்று முறையே) தெரிவித்துள்ளனர்; SMITH கூட சுமார் 2020 செப்டம்பர் 2 வரை காலம் எடுத்தார்.

மேற்கூறிய சாட்சிகள் அனைவரும் கலவரத் துக்கு சில மாதங்களுக்குப் பிறகு தான் அந்த சதியைப் பற்றி முதன்முறையாக தெரிவித்துள்ள நிலையிலும், PW BRAVO எனப்படும் சாட்சி ஒருவர் மட்டும் 2020 பிப்ரவரி 22 அன்று ஒரு வாட்ஸ்அப் குழுவில் சில சாலை அடைப்புகள் மற்றும் மிளகாய் தூள் விநியோகத்தின் மூலம் வன்முறையைத் தூண்ட சதி செய்கிறார்கள் என்று குற்றம் சாட்டும் செய்தியை அனுப்பியிருந் தார். இந்த செய்தி PW BRAVOவின் கூற்றுக்கு ஓரளவு நம்பகத்தன்மை அளிப்பதாக இருந் தாலும், அவர் அதே நேரத்தில் அல்லது உடனடி யாக காவல்துறையை அணுகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அதற்குப் பதிலாக, அவர் காவல்துறையிடம் 2020 ஜூன் 8 அன்று, குற்றச் சம்பவம் நடந்த நான்கு மாதங்களுக்கு பிறகு மட்டுமே புகார் அளித்துள்ளார்.

அதேபோல், ஆயுதங்கள் மற்றும் கலவரக் காரர்களை ஏற்பாடு செய்ய basement-இல் நடந்ததாக கூறப்படும் மற்றொரு சதி சந்திப்பை PW PLUTO (ஒரு டெலிவரி பாய்) பணம் பெற காத்திருந்தபோது கேட்டதாக கூறுகிறார். ஆனால் PLUTO கூட அந்த உரையாடலை 2020 ஆகஸ்ட் 13 அன்று மட்டுமே காவல்துறையிடம் தெரிவித் தார். அதுவும் கலவரத்துக்கு ஐந்து மாதங்களுக்கு பிறகு. இதனால், இந்த சாட்சிகள் வன்முறைக்கு சில மாதங்கள் கழித்தும் குற்றச்சாட்டாளர்கள் கைது செய்யப்பட்ட பிறகும் தான் போலீசுக்கு தகவல் அளித்திருக்கின்றனர் என்பது தெளி வாகிறது.

நீதிமன்றங்கள் ஏற்கனவே சுட்டிக்காட்டி யுள்ளன: சாட்சிகள், நீண்ட காலம் கழித்து சொல்ல முன்வந்தால் அவர்களை தூண்டிவிடும் அல்லது போலியாக உருவாக்கும் வாய்ப்பு இருப்பதாக சந்தேகம் எழுகிறது. ஒரு சாட்சி குற்றச்செயலை நேரில் பார்த்தபோதோ, கலவரம் நடந்த பிறகோ, குற்றச்சாட்டப்பட்டவ்ர்கள்


vaigarai velicham official

கைது செய்யப்பட்ட பிறகோ காவல்துறையை அணுகாமல், பல மாதங்கள் கழித்து திடீரென முன்வருவது இயல்பற்றதாகவே கருதப்படுகிறது. இந்த வகைச் சூழ்நிலையில், யாரோ தூண்டுவதோ அல்லது உருவாக்குவதோ மூலமாக போலி சாட்சிகள் முன்வரக்கூடும் என்பதில் சந்தேகம் இல்லை. எனவே, சட்டப்படி, தாமதமாக முன்வரும் சாட்சிகள் தங்கள் தாமதத்திற்கான தெளிவான காரணம் கூற முடியாவிட்டால், அவர்கள் நம்பகமற்றவர்களாகக் கருதப்படுவர்.

அதேவேளை, Sessions நீதிமன்றம் PW SATURN குறித்த வழக்கில் fabrication ஏற்பட வாய்ப்பு இருப்பதாகத் தெளிவாகக் கூறியுள்ளது. அவர் 2020 ஜனவரி 8 அன்று காளித் செய்ஃபி, உமர் காளித் மற்றும் தாஹிர் ஹுசைன் இடையே நடந்த முக்கியமான சதி சந்திப்பு குறித்து தெரிவித்தார். PW SATURN இதே சந்திப்பை மற்றொரு வழக்கான FIR 101/2020 (கஜூரி காஸ் போலீஸ் ஸ்டேஷன்) வழக்கிலும் குறிப்பிடுகிறார். அந்த வழக்கில், காளித் செய்ஃபிக்கு பிணை வழங்கிய போது Sessions நீதிபதி கூறிய observations:

“PW ராகுல் காசனா 161 CrPC பிரிவின் கீழ் பதிவு செய்த வாக்குமூலம் விண்ணப்பதாரர் மற்றும் மற்றவர்களிடம் சந்திப்பு நடந்ததாக மட்டுமே குறிப்பிடுகிறது. ஆனால் அந்த சந்திப்பின் உள்ளடக்கம் குறித்து எதுவும் சொல்லவில்லை. மேலும் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், ராகுல் காசனா FIR 59 வழக்கிலும் சாட்சியாக இருக்கிறார். அந்த வழக்கிலும் அவர் 2020 மே 21 அன்று பதிவு செய்த வாக்குமூலத்தில் எந்தக் குற்றச்சதி குறித்தும் எதுவும் கூறவில்லை. ஆனால் அதன்பிறகு திடீரென 2020 செப்டம்பர் 27 அன்று ‘குற்றச்சதி’ என்று கூறுகிறார். இது நன்பகத்தன்மை அற்றது.”

இதுபோன்ற தாமதமாக வந்த வாக்குமூலங்கள் தவிர, குற்றப்பத்திரிக்கையில் முன்கூட்டியே திட்டமிட்ட சதிக்கு வேறு எந்த வலுவான ஆதாரமும் இல்லை. FIR 59 வழக்கில் குற்றச்சாட்டாளர்கள் கைது செய்யப்பட்டதும், விசாரணை நடைபெற்றதும் தேசிய மற்றும் மாநில ஊடகங்களில் பரவலாக வெளியிடப்பட்டன. எனவே, இந்த சாட்சிகள் உடனடியாக முன்வர தேவையான தகவல் வாய்ப்பு அவர்களுக்கு இருந்தே இருந்தது. இப்படி இருக்க, தாமதமான சாட்சிகள் fabrication அல்லது tutoring மூலம் உருவாக்கப்பட்டிருக்கலாம் என்பதையும், அதனால் இவை தனிப்பட்ட முறையில் பெரிதாக நம்பிக்கை அளிப்பவை அல்ல என்பதையும் நீதிமன்றம் வலியுறுத்துகின்றன.

Asif Iqbal Tanha v. State of NCT of Delhi வழக்கில் (FIR 59இல் பிணை உத்தரவு), டெல்லி உயர்நீதிமன்றம் CAA எதிர்ப்பு போராட்டங்கள் ஒரு பெரிய தீவிரவாதச் சதியின் ஓர் அங்கமாக இருந்தன என்ற குற்றச்சாட்டை உறுதிப்படுத்துவதற்கான பொருத்தமான ஆதாரம் குற்றப் பத்திரிக்கைகளில் இல்லை என்று தெளிவாகக் குறிப்பிட்டது:

“அரசு தொடர்ந்து வாதிக்கிறதே, இது சாதாரண போராட்டமல்ல, சமூக வாழ்க்கையை குலைக்கும் அளவுக்கு தீவிரமான போராட்டம் என்று. ஆனால் இவ்வாதம் எந்த ஒரு நடைமுறை சார்ந்த சம்பவ விவரத்திலும் அடிப்படை ஆதாரமில்லை என்பதால் நாங்கள் எந்த வகையிலும் நம்ப முடியவில்லை. அலாரம் எழுப்பும் வார்த்தைகள் மட்டும் போதாது; அதற்குப் பின்னணியில் சரியான ஆதாரம் இருக்க வேண்டும்.”

இதையே Natasha Narwal v. State வழக்கிலும் (FIR 59 பிணை உத்தரவு), 2021 ஜூன் 15 அன்று உயர்நீதிமன்றம் கூறியது:

“தூண்டுதல் பேச்சுகள், சாக்கா ஜாம் ஏற்பாடு, பெண்களை போராட்டத்தில் ஈடுபட தூண்டுதல் மற்றும் பொருட்களை குவிப்பது போன்ற குற்றச்சாட்டுகள் இருக்கலாம். ஆனால் இவை மேம்பட்ட ஆய்வில் பார்த்தால், குற்றம் சாட்டப்பட்டவர்கள் வன்முறையை தூண்டியதாகவும் அல்லது தீவிரவாதச் செயலுக்கு திட்டமிட்டதாகவும் எந்தச் சிறப்பான ஆதாரமும் இல்லை.”

மேலும், “முஸ்லீம் பகுதிகளில் முஸ்லீம் மக்கள் கலவரம் செய்து, முஸ்லீம் மக்களை அடித்துக் கொன்று, பள்ளிவாசல்கள் எரிக்க வேண்டும்” என்ற கோட்பாடு, முஸ்லீம்களுக்கு எதிரான சட்டத்துக்கு (CAA) எதிராக போராடும் போராட்டத்தின் நோக்குக்கு எதிரானது என்பது மட்டுமல்லாமல் நீதிமன்றங்களும் வியப்புடன் கருத்து தெரிவித்துள்ளன.


இன்ஷா அல்லாஹ் தொடரும்.....!

Source: UNCERTAIN JUSTICE
a Citizens Committee Report
on the North East Delhi Violence 2020

**தமிழில்:** Adv. Jasmine Fathima.

- அல்லாமா அபுல் ஹசன் அலி நத்வி (ரஹ்)

- தமிழில் மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி



# இஸ்லாமிய சமூக ஆளுமையின் அடிப்படையும் செழுமையும்

(இந்த கட்டுரை, ஹிஜ்ரி 1395 ஆம் ஆண்டு ஷவ்வால் பிறை 25ஆம் நாள் (நவம்பர் மாதம், 1975) நத்வதுல் உலமா சார்பாக நடை பெற்ற கல்வி விழாவின் துவக்க நிகழ்வில் நூலாசிரியர் ஆற்றிய வரவேற்புரை.

இந்தக் கட்டுரை, இந்திய இஸ்லாமிய வரலாற்றின் மிக முக்கியமான நிகழ்வுகள், கல்வி மற்றும் கலாச்சாரத்துறைகளில் முஸ்லிம் களின் பங்கு பற்றிய சுருக்கமான கண் ணோட்டத்தை முன்வைக்கிறது. இது கிட்டத் தட்ட புத்தகத்தின் கருப்பொருளின் சுருக்கம்.)

பல்வேறு மதங்கள்,நாகரிகங்கள் மற்றும் கலாச்சாரங்களின் வரலாற்றில் தனித்துவமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட பூமிக்கு உங்களை வரவேற்கிறேன். இந்த முயற்சிகள் மகத்தான வெற்றிகளை கண்டது.

இந்த முயற்சிகள் என்பவை மொழி, இலக்கியம், நாகரிகம், தேசம், இனம், மரபு ஆகியவையோடு எந்த தொடர்புகளும் இல்லாமல் அறிவு, நாகரீகம் மற்றும் தனித்துவமான வாழ்வியல் முறை, ஆகியவற்றுடன் இந்த நாட்டில் நுழைந்த ஒரு மார்க்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்.

இந்த முயற்சிகள் இஸ்லாமிய மார்க்கத்தின் இயல்பான சக்தியை, படைப்பாற்றலை,அதில் மறைந்துள்ள திறன்களை வெளிக்கொணர்ந்து மனித ஆற்றல்களை, மனிதகுலத்தின் நன்மைக் காக பயன்படுத்தும் திறனை வெளிப்படுத்தியது. பரஸ்பர புரிதலுடன், ஆவலுடன் ஏக்கத்தோடு காத்திருந்த மனித குலத்திற்கு விடையாக அமைந்தது.

மேலும் இந்த முயற்சிகளை மேற்கொள்வதற்கு இது வளமான செழிப்பான பூமி என்பதையும் இஸ்லாமிய கல்வி எந்த சூழலிலும் எந்தக் காலநிலையிலும் வளர்ந்து செழித்து பலன் தரும் என்பதையும் உறுதி செய்தது. வளமிகுந்த மண்ணில் தேவையான உரங்களும், சரியான பராமரிப்பும் இருந்தால் இன்னும் இது அதிக அளவில் பலன்களை வழங்கியிருக்கும்.

நேர்வழியின் பிறப்பிடத்திலிருந்தும் இந்த நேர்வழியை சுமந்து வந்த மக்களின் பிறப்பிடத்தி லிருந்தும் இது தொலைதூர பயணம், எந்தவொரு ஆதரவும் உதவியும் பெற முடியாது என்ற விரக்தி, அல்லாஹ் ஒருவனின் உதவி மீது கொண்ட நம்பிக்கை மற்றும் துன்பமடைந்த மனித குலத்திற்கு பயனளிக்க கூடிய, நிலைத்தன்மை கொண்ட, சன்மார்க்க செய்தியின் மீதுள்ள முழுமையாக நம்பிக்கை, இஸ்லாத்தின் மையத்தி லிருந்து தொலைதூர எல்லையில் இருக்கிறோம் என்ற உணர்வு, இவை அனைத்தையும் தாண்டி அல்லாஹ் இந்த மார்க்கத்தை பாதுகாக்கும் பொறுப்பை ஏற்று உள்ளான் என்பதை இந்த முயற்சிகள் நிரூபணம் செய்தன.

இந்த உணர்வுகளே இந்த முஸ்லிம் சமூகத் திடம் ஆச்சரியங்கள் மற்றும் அற்புதங்களை நிகழ்த்தும் ஆற்றலை உருவாக்கியது, அனைத்து எதிர்ப்புகளையும் சதித்திட்டங்களையும் முறியடிக்க செய்தது, முன் சென்ற சமூகங்களின் அனுபவங்களை பொய்யாக்கியது, வெறும் எண்ணிக்கையின் அளவுகளை மட்டுமே நம்பும் பொருள் முதல்வாத தத்துவங்களை தவிடுபொடி யாக்கியது.

இத்தகைய முஸ்லிம் குழு ஒரு அந்நிய நாட்டினுள் நுழைந்தது. விரைவிலேயே அந்த நாட்டு மக்கள் இவர்களையும் இவர்கள் அந்நாட்டு மக்களையும் நேசிப்பவர்களாக மாறினர். இவர்களிடம் இந்த நாட்டு மக்கள் இரக்கமுள்ள தந்தையை, பெருந்தன்மையான சகோதரனை, அக்கறை மிகுந்த ஆசிரியரை, மென்மையான ஆட்சியாளரை, திறமையான உற்பத்தியாளரை, தீர்க்கமான நிர்வாகியை கண்டனர்.

இந்த முஸ்லிம் குழு தங்களது திறமை, ஆற்றல், அறிவு, அனுபவம், புதிய கண்டு பிடிப்புகள், உற்சாகம், ஆர்வம், மன உறுதி, ஆக்கப்பூர்வமான பணிகள், சிறந்த அமைப்பு முறை மற்றும் திறமையான மேலாண்மை என அனைத்தையும் இந்த வளமிகுந்த நாட்டிற்கு வழங்கினர். இவைகளோடு துருக்கியர்களின் வீரம், மங்கோலியர்களின் மன உறுதி, ஆஃப்கானி யர்களின் ரோஷம், ஈரானியர்களின் செயல் திறன், மேலும் அவர்களிடம் கொட்டிக்கிடக்கின்ற கற்பனை மற்றும் அழகு, பாரசீகர்களின் மென்மை மற்றும் சகிப்புத்தன்மை, அரபுகளின் விடாமுயற்சி மற்றும் இரசனை, இந்த குணங்கள் அனைத்தும் தத்துவம் மற்றும் ஆன்மீகத்தை விரும்பும் மென்மையான இயல்பை கொண்ட இந்திய நாட்டு மக்களின் இயல்போடு ஒன்றிணைந்தது.

இருப்பினும் இந்த அனைத்து கூறுகளின் மீது தூய்மையான ஓர் இறை கோட்பாடும், இஸ்லாமிய ஷரீஆ போதனைகளுமே ஆதிக்கம் செலுத்தியது. மேலும் இவை அனைத்தும் இஸ்லாமிய அச்சில் வார்த்தெடுக்கப்பட்டது.

இந்த தனித்துவமான கலவையிலிருந்து ஒரு புதிய நாகரீகம் பிறந்தது, இது "இந்திய இஸ்லாமிய நாகரீகம்" என்று அழைக்கப்படு வதற்கு உண்மையிலேயே தகுதி வாய்ந்தது.

பிறகு இந்தியாவில் தனித்துவமான அடையாளங்களை கொண்ட அறிவுசார் கலாச்சார பள்ளி உருவானது. இந்தப் பள்ளி ஏராளமான புகழ்பெற்ற அறிஞர்களை உருவாக்கியது. இஸ்லாமியக் கலைகளின் இமாம்களை, படைப்பாற்றல் கொண்ட படைப்பாளிகளை, இஸ்லாமிய அறிவின் முன்னோடிகளை உருவாக்கியது. இவர்கள் சிறப்பம்சம் கொண்ட கல்வியாளர்களாக திகழ்ந்தார்கள்

இவர்கள் திருக்குர்ஆன் விளக்கவுரை,ஹதீஸ், ஃபிக்ஹ், அகாயித் போன்ற இஸ்லாமிய கலைகள் மட்டுமல்லாமல் மொழி மற்றும் இலக்கியத் திலும் புதிய எல்லைகளை திறந்தார்கள்.

இவர்களது அசாத்திய திறமைகளால் இந்தக் கலைகளுக்கு அளித்த பங்களிப்புகளை கொண்டு இந்தக் கலைகளில் இவர்களது தலைமைத் துவத்தை அரபு அறிஞர்களே ஒப்புக்கொள் கின்றார்கள். மேலும் இவர்களது நூல்கள் இந்த கலைகளின் மூல நூல்களாகவே கருதப்படுகின்றன. அவற்றுள் சில நூல்கள் உலகளாவிய இஸ்லாமிய நூலகத்தில் எந்தவொரு நூலோடும் ஒப்பிட முடியாத அளவு தன்னிகரற்ற படைப்புகளாக விளங்குகின்றன.

இந்தியாவில் துவங்கப்பட்ட இந்த அறிவு சார் இயக்கம், ஹிஜ்ரி எட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு இஸ்லாமிய உலகில் மிகப்பெரிய அளவில் ஏற்பட்டிருந்த சிந்தனை தேக்கத்தை தகர்த்து தனது ஆக்கப்பூர்வமான எழுத்துப் பணிகளால் புதிய இரத்தத்தை பாய்ச்சியது புத்துணர்வை ஊட்டியது.

எந்த அளவிற்கு என்றால் தாத்தாரியர்களது படையெடுப்பிற்குப் பிறகு சில இஸ்லாமிய கலைகளுக்கு பாதுகாப்பு அரணாக, இந்த அறிவு சார் இயக்கம் உருமாறியது என்று கூறினால் அது மிகையல்ல.

கடைசி காலகட்டத்தில் ஹதீஸ் கலையின்

மிகப்பெரிய தலைமையகமாக இந்த இயக்கம் விளங்கியது. ஹதீஸ்களை கற்பித்து கொண்டிருந்த மையங்கள், ஹதீஸ் நூல்களை வெளியிடும் பதிப்பகங்களாக உருமாறின. இந்த மையங்களிலிருந்து ஹதீஸ் கலையில் சிறந்து விளங்கிய மிகச்சிறந்த ஆளுமைகள் உருவாகினார்கள். ஹதீஸ் கலை சார்ந்து மிகச்சிறந்த நூல்களை எழுதினர்.

இன்னும் சிலர் வெவ்வேறு காலகட்டங்களில் மறுமலர்ச்சி இயக்கங்களை வழி நடத்தினர். இதன் உரத்த எதிரொலி எங்கும் கேட்கப்பட்டது. இதன் மிகச் சிறந்த தாக்கங்கள் இஸ்லாமிய உலகின் தொலைதூர பகுதிகளில் கூட தென்பட்டன.

பிறகு இந்த இந்திய நாட்டில், நாகரிகம் கலாச்சாரம்,சிந்தனை சார்ந்த மாபெரும் போர் நடந்தாக வேண்டும் என்பது அல்லாஹ்வின் நாட்டம். தற்கால வரலாறும் இதற்கு சான்று பகரும்.

இந்தப் போர் என்பது மேற்கத்திய நாகரிகம் மற்றும் அதன் தத்துவத்திற்கும், இஸ்லாமிய நாகரீகம் மற்றும் அதன் தத்துவத்திற்கும் மத்தியில் நடந்த போர், இஸ்லாமிய சிந்தனைக்கும் மேற்கத்திய சிந்தனைக்கும் மத்தியில் நிகழ்ந்த யுத்தம்.விசாலமான மற்றும் நுணுக்கமான

கருதியிலின் அடிப்படையில் அரங்கேறிய யுத்தம். இந்த போர் என்பது இரத்தக்களரிப் போராக, கடுமையான வன்முறை போராகவே இருந்தது.

ஆழமாக காயமடைந்த, எதிரிகளது வெற்றியின் அதிர்ச்சியில் இருந்து இன்னும் மீளாமல் இருந்த முஸ்லிம்கள் ஆற்றல் மிக்க இளமைத் துடிப்பை கொண்ட மேற்கத்திய நாகரிகத்தை நேரடியாக சந்தித்தார்கள். இரு அணிகளுக்கு மத்தியில் எந்தவொரு தடைகளோ, இடைவெளிகளோ இல்லை.

எந்த சமூகத்திடமிருந்து இந்த நாட்டினுடைய வெற்றி சாவிகளை பறித்துக்கொண்டார்களோ, அந்த முஸ்லிம்களின் மீது கடுமையான பகைமையை, குரோதத்தை, வெறுப்பை உமிழ்ந்தனர். இதன் காரணத்தினால் முஸ்லிம் சமூகம் ஒரு நூற்றாண்டு காலம் வெறித்தனமான போர்களை, குரூரமான கிளர்ச்சிகளையும் சந்தித்தது

சிலுவை வெறி மற்றும் காலணித்துவ இலட்சியத்தின் கலவையால் உந்தப்பட்ட இந்த ஆங்கிலேயர்கள், எல்லா காலங்களிலும் இடங்களிலும் தங்களது நிரந்தரப் போட்டியாளர்களாக முஸ்லிம் சமூகத்தையே கண்டனர். தங்களுக்கு சமமான இணையான எதிரணியாக கருதினர்.

இந்த இரு அணிகளுமே வாழ்வை வழி நடத்தவும், சமுதாயத்தை உருவாக்கவும், சட்டங்களை இயற்றி அமல்படுத்துவதற்கான வெற்றிடம் தங்களால் தான் நிரப்பப்பட வேண்டுமென்று தங்களுக்கு மத்தியில் உரிமை கோருகின்றனர்.

தீக்கொழுந்து விட்டெறிந்த இந்த போர்க் களங்களில் அதிகமான இழப்புகளை, நஷ்டங்களை மற்ற சமூகங்களை காட்டிலும் முஸ்லிம் சமூகமே அதிகம் சந்தித்தது.

முஸ்லிம்கள் இயல்பாகவே இந்த போராட்டத்தில் மற்ற தரப்பினர்களைவிட அதிக அக்கறையுடன், உணர்ச்சி பூர்வமாக பங்கேற்றனர். தங்களது மிகப்பெரிய பொருளாதாரத்தை வாரி இறைத்தனர்.

மற்ற நாடுகளில் பரவியிருந்த இந்த காலனித்துவத்தின் நெருப்பில் சிக்கி அதற்கு இரையாகிய பிற முஸ்லிம் சமூகங்களை விட இந்திய முஸ்லிம்கள் மிகுந்த உறுதி கொண்டவர்களாக, தங்களது அடையாளங்களை பாதுகாத்தவர்களாக, மிகப்பெரிய பேரழிவை ஏற்படுத்திக் கொண்டிருந்த இந்த சக்திகளுக்கு கீழ்ப்படிய மறுத்து, அதனை கடுமையாக எதிர்த்தார்கள் என்பதை நீதமான, நேர்மையான வரலாறு நிச்சயம் பதிவு செய்யும்.

இவ்வனைத்திற்கும் மேலாக இந்திய முஸ்லிம்கள் எதிர்கொண்ட மற்றொரு பெரும் சோதனை, பிரிட்டிஷ் ஆட்சி நிறுவப்பட்டதற்கு பிறகு உருவாக்கப்பட்ட - மிஷனரி இயக்கம் - சுவிசேஷ பணி என்று அவர்களால் அழைக்கப்படும் கிறிஸ்தவமயமாக்கல் இயக்கம்.


vaigarai velicham official

இந்த இயக்கம் கிட்டத்தட்ட நாடுமுழுவதும் பரவியது. மிகவும் சக்திவாய்ந்த ஆயுதங்களை ஏந்தி அடிமைப்பட்ட மக்களின் மீது ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியது, இந்திய நாடு இயேசு கிறிஸ்து தங்களுக்கு வழங்கிய பரிசாக கருதும் அரசின் முழுமையான ஆதரவை பெற்றிருந்தது, இந்த நாட்டின் மீதான தனது அதிகாரத்தை, கிறிஸ்துவத்தை பரப்புவதற்கான சிறந்த வாய்ப்பாக கருதியது.

கிறிஸ்துவ மதத்தை பரப்பும் இந்த இயக்கத்தோடு, இஸ்லாமிய சட்டம், நாகரீகம், கலாச்சாரம், வரலாறு உள்ளிட்ட அனைத்து அம்சங்களிலும், சந்தேகங்களை ஏற்படுத்தும் கடுமையான பிரச்சாரங்களை மேற்கொள்ளும் மற்றொரு இயக்கமும் கைகோர்த்தது.

முஸ்லிம் அறிஞர்கள் இரண்டு இயக்கங் களையும் மிகுந்த வலிமையோடு, அபாரமான திறமைகளை கொண்டு கடுமையாக எதிர்த்தனர். மேலும் இந்த இயக்கங்களோடு தற்காத்து வாதாடும் வழிமுறைக்கு பதிலாக தாங்களாக முன் வந்து அதனை அறிவு பூர்வமாக தாக்கும் வழிமுறையை கையாண்டனர்.

இதன் விளைவாக ஆர்ப்பரித்த மிஷனரி நடவடிக்கைகள் மற்றும் சந்தேக பிரச்சாரங் களின் அலைகள் பின்வாங்கியது.

முஸ்லிம்கள் தங்களது மார்க்கத்தின் மீது கொண்டிருந்த நம்பிக்கை மேலும் வலுவானது. தங்களது நாகரீகம், கலாச்சாரம், வரலாறு, இன்னும் தங்களது தனித்துவம் ஆகியவற்றை கொண்டு பெருமிதம் கொண்டனர்.

பெரும் எண்ணிக்கையிலான முஸ்லிம் இளைஞர்கள் ஐரோப்பாவின் முக்கிய தலை நகரங்களில் உள்ள மேற்கத்திய கல்விக் கூடங் களுக்கு சென்று கல்வி கற்றனர். நவீன கல்வியில் நன்கு நிபுணத்துவம் பெற்றதோடு ஆங்கிலேயர் களைப் போலவே ஆங்கிலத்தை தங்களது தாய் மொழியைப் போல கற்று தேர்ச்சி பெற்றனர்.

இதன்மூலம் ஆங்கில மொழியின் எழுத் தாளர்களாக, நூலாசிரியர்களாக, கல்வியாளர் களாக இலக்கியவாதிகளாக, நிர்வாகிகளாக உருமாறினர். இவர்களது நிபுணத்துவம் மற்றும் மேன்மையை மேற்கத்திய அறிஞர்களே ஒப்புக் கொள்கின்றனர்.

இருப்பினும் அவர்களின் பலர் மேற்கத்திய பொருள் முதல்வாத தத்துவங்கள் மற்றும் கிறிஸ்தவ மதத்தின் தீவிரமான மேற்கத்திய பாசிச சிந்தனைகள், மதச்சார்பற்ற நாத்திக சிந்தனைகளின் தீவிர விமர்சர்களாகவும் கடுமையான எதிர்ப்பாளர்களாகவும் மாறினர்.

மேற்கத்திய நாகரீகத்தையும், நவீன தத்துவங் களையும் ஆழ்ந்த அறிவியல் விமர்சனங் களுடன், கூர்மையான பகுப்பாய்வு பார்வை யுடன், நகைச்சுவை கலந்த சாடலுடன் கடுமை யாக விமர்சித்தனர்.

இவையனைத்தையும் ஒவ்வொருவரும் தங்களது தனித்துவமான நடையில் அவரவர் சூழலிற்கேற்ப மேற்கொண்டனர்.

அவர்களிடமிருந்து வெளியாகிய எழுத்துக்கள் மிகவும் சக்தி வாய்ந்த ஆக்கங்களாக திகழ்ந்தன. அவர்களது படைப்புகள் இஸ்லாத்தை முழுமையான பரிபூரணமான மார்க்கமாக முன்வைத்தன. அதே நேரத்தில் மேற்கத்திய நாகரிகத்தை தைரியதோடு கடுமையாக தாக்கின. மேலும் அந்த விமர்சனங்கள் எந்தவொரு ஒளிவுமறைவின்றி நேரடியான தாக்குதலாக இருந்தன.

அவர்கள் மேற்கத்திய சிந்தனை மற்றும் கலாச்சார பரப்புரைக்கு எதிரான வலுவான அறிவார்ந்த அணியை நிறுவினர்.


மேற்கு உலகின் தலைமைத்துவத்தையும் நிராகரிப்பதோடு, அது தவறுகளற்றது, குறைபாடு களற்றது

என்ற மாயையையும் நிராகரிப்பது, அதேநேரத்தில் இஸ்லாத்தை மனித குலத்திற்கான நிரந்தரமான தூது செய்தி என்பதை, மேலும் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் இறுதி நபி, வழிகாட்டும் ஒளி, அனைவருக்குமான தலைவர் என பெருமிதம் கொள்வதுமே இந்த அணியின் கொள்கையாக விளங்கியது.

தொடரும்........

ஆங்கிலம் : JOHN FEFFER தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்






## இஸ்லாத்திற்கெதிரான மேலை நாடுகளின் மறு உயிர்பெற்ற போர்...

**"The Wests Resurgent War on Islam"**

**புகுமுன் -**

அன்பார்ந்த வாசகர்களே!

ஜான் பெஃபர் அவர்களின் ஆங்கில நூல்
வெகுவாகவே வாசகர்களை சென்றடைந்திருக்கின்றது.

அவருடைய நூல் இப்போது மீண்டும், மறுபதிப்பாக வந்துள்ளது. இந்த மறு பதிப்பிற்கு அவர் வைத்துள்ள பெயர் Crusade 2.0 The wests unending war on islam

அதாவது, மேலை நாடுகளின் இஸ்லாத்தின் மீதான முடிவற்ற போர்.

இப்போது மேலைல நாடுகள், எத்துணைதான் வேறு, 'வேறு முகங்களைக் காட்டினாலும்' அவற்றின் உண்மையான முகம், இஸ்லாத்தின் மீது முடிவற்ற போரை தொடருவதுதான். அதாவது அவர்கள் இஸ்லாத்திற்கெதிரானப் போரை எந்தக் காலத்திலும் நிறுத்த மாட்டார்கள் என்பதை பகிரங்கமாக அறிவிப்பு.

அல்லாஹ் காட்டிய வழிதான் இதற்கு ஒரே முடிவு. அது பின்வரும் வசனத்தில் தெளிவுபடுத்தப்படுகின்றது.

அவர் (நிராகரிப்பவர்)களை எதிர்ப்பதற்காக உங்களால் இயன்ற அளவு பலத்தையும், திறமையான போர்க் குதிரைகளையும் ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள்; இதனால் நீங்கள் அல்லாஹ்வின் எதிரியையும், உங்களுடைய எதிரியையும் அச்சமடையச் செய்யலாம்; அவர்கள் அல்லாத வேறு சிலரையும் (நீங்கள் அச்சமடையச் செய்யலாம்); அவர்களை நீங்கள் அறிய மாட்டீர்கள் - அல்லாஹ் அவர்களை அறிவான்; அல்லாஹ்வுடைய வழியில் நீங்கள் எதைச் செலவு செய்தாலும், (அதற்கான நற்கூலி) உங்களுக்கு பூரணமாகவே வழங்கப்படும்; (அதில்) உங்களுக்கு ஒரு சிறிதும் அநீதம் செய்யப்பட மாட்டாது.

அல்குர்ஆன்-8:60.

ஆக, நாம், உலக நகர்வுகளையும் நிகழ்வுகளையும் பார்க்கின்ற போதும், படிக்கின்ற போதும் இதனை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்த இஸ்லாத்திற்கெதிரான முடிவிலா போரில் மேலை நாடுகள் மட்டுந்தான் வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்றன என்றில்லை.

அரபுநாட்டு மன்னர்களும் நிரம்பவே எதிராக நிற்கின்றார்கள்.

சாதாரண கெதியில் முஸ்லிம்கள், அரபு நாடுகளை இஸ்லாத்தின் பிரதிநிதிகள் என்றே கருதுகின்றார்கள்.

உண்மை அதுவல்ல.

இந்த அரபுநாடுகள் மேலெழுந்த வாரியாக சில ஷரீஅத் சட்டங்களைப் பின்பற்றுகின்றன. ஆனால் கண்ணுங் கருத்துமாக ஓர் இஸ்லாமிய அரசை அமையவிடாமல் பார்த்து கொள்கின்றன.

காரணங்கள் பலப்பல,

இஸ்லாம் வந்தால் மன்னர் ஆட்சி பறிபோய் விடும். இதனால் ஆண்டாண்டு காலமாக அவர்கள் அனுபவித்து வரும் சுகபோகங்கள் ஓர் முடிவுக்கு வரும்.

இந்த சுகபோகங்கள், எந்த முதலீடுமில்லாமல், எந்த உழைப்புமில்லாமல் ஆண்டாண்டு காலமாக - தலைமுறை தலைமுறையாக அனுபவித்து வருபவை.

மட்டுமல்லாமல், அடுத்தத் தலைமுறையும் இதேபோல் வாழ்ந்திட அகிலத்தின் அனைத்து சுகங்களையும் அனுபவித்திட வகை ஏற்படுகின்றது. அரச குடும்பத்தில் வரும் முட்டாள்கள் கூட அனைத்து அரபு நிலத்து வளங்களுக்கும் அதிபதியாகலாம். நோகாத வாழ்க்கை, போகாத சுகம், இவற்றிற்கு ஆளாகாலாம்.

இஸ்லாம் வந்தால், அவர்களின் பரம்பரையினர் - இதுபோன்றதொரு வாழ்க்கையை பெற்றிடவே இயலாது.

"இஸ்லாமிய ஆட்சிமுறை" "கிலாபத்" என்றால் இவர்களுக்கு ஓர் ஒவ்வாமை. அதைத் தடுக்க என்னவேண்டுமானாலும் செய்யலாம், யாரையும் கொலை செய்யலாம் என மிக நுணுக்கமாக சதித் திட்டமிட்டு செயல்படுகின்றார்கள்.

அதேபோல்தான் இன்றைய நாள்களில் அதிகமாக அரற்றப்படும் "ஜனநாயகம்" அதையும் அவர்கள் பயங்கரமாக எதிர்கின்றார்கள்.

காரணம் ஜனநாயகத்திலும் மன்னராட்சிக்கு வழிஇல்லை.

இதனால் இவர்கள், இஸ்லாத்தின் எதிரிகளோடு கூட்டணி அமைத்துக்கொண்டார்கள். தங்கள் மன்னராட்சியைத் தக்கவைத்துக்கொள்ள இன்னும் ஒருபடி மேலே போய் இந்த இஸ்லாத்தின் எதிரிகளையே தங்கள் பாதுகாவலர்களாக ஆக்கிக் கொண்டார்கள்.

ஆக இஸ்லாத்திற்கு எதிராக சதாசர்வ காலமும் செயல்படும் ஐரோப்பா - அமெரிக்கா இவற்றோடு இவர்களும் சேர்ந்துகொள்கின்றார்கள்.

இந்த இஸ்லாத்தின் எதிரிகள் தீட்டும் திட்டங் களுக்கும் சாதிக்கும் சதிகளுக்கும் - இவர்கள் இந்த அரபு நாடுகள் - அள்ளிக் கொட்டும் பணத்திற்கு அளவே இல்லை.

இத்துணை பெரிய எதிரிகளுக்கிடையேதான் இஸ்லாத்தை இலட்சியமாகக் கொண்டவர்கள் உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இனி ஜான் பெஃபர் கூறுவதைக் கேட்போம்.

**ஜான் பெஃபர் கூறுகின்றார்**

*9/11 என்ற அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்டவுடன், முஸ்லிம் களுக்கெதிராக நடந்த தாக்குதல்கள், அதற்குப் பரிகாரமாக அதிபர் புஷ் அவர்கள் மேற் கொண்ட நடவடிக்கைகள் எல்லாம், வெறும் வேஷம் என்றால், அதுவே உண்மை.*

*அவருடைய மனதில் இருந்தது ஒரு சிலுவைப்போர்தான். உடனேயே ஆப்கானிஸ் தானையும் அங்கு நடந்துகொண்டிருந்த முல்லா உமர் அவர்களின் ஆட்சியையும் குற்றம் பிடிக்கத் தொடங்கினார்.*

*ஒசாமா பின்லேடன், ஒரு ரவுடி சட்ட விரோதமானாவர். அவருக்கு அடைக்கலம் தரும்*

ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய அரசு ஓர் ரவுடி ராஜ்ஜியம் என்றெல்லாம் பேசிடத் தொடங்கினார். இவர்களெல்லாம் கெட்ட முஸ்லிம்கள். அமெரிக்கா என்றும் நல்ல முஸ்லிம்களுக்கு எதிராக இருந்ததில்லை என்றும் பேசினார்.

மொத்தத்தில் - இஸ்லாமிய உலகின்மேல் ஒரு பெரும் போரைத் தொடங்கிட வேண்டும் என்பதே நோக்கம்.

தொடக்கத்தில் தொனித்த கெட்ட முஸ்லிம் - நல்ல முஸ்லிம் பாகுபாடு, பின்னர் மறையத் தொடங்கியது. அவருடைய உரைகளை எழுதியவர்கள் - எல்லா முஸ்லிம்களையும் ஒரே அணியில்தான் நிறுத்தினார்கள்.

அமெரிக்க நாடாளும் மன்றத்தில் பேசிய அதிபர் புஷ். இஸ்லாம் ஓர் அமைதியான மார்க்கம் என்றார். அதே நேரத்தில், "இந்த நாளில், ஒவ்வொரு சமுதாயமும், ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு மதமும் ஓர் முடிவை எடுக்க வேண்டும். அது அவர்கள் எங்களோடு இருக்க வேண்டும். அல்லது எங்கள் எதிரிகளோடு இருக்க வேண்டும். எங்களோடு இல்லாதவர்கள், தீவிரவாதிகளோடு (எங்கள் எதிரிகளோடு) இருக்கின்றார்கள் என்றே எடுத்துக்கொள்வோம்" என்றார். (இது பைபிள் என்ற கிறிஸ்தவ வேதத்தின் வசனங்களில் உள்ள வாசகங்கள் ஆகும்.)

ஜார்ஜ் புஷ்-இன் இந்த உரை உலகையே இரண்டாகப் பிளந்தது, உலகம் ஒன்று, அமெரிக்காவோடு இருப்பது, இன்னொன்று அமெரிக்காவோடு இல்லாதிருப்பது.

அதாவது ஒன்று இஸ்லாமிய உலகம். இன்னொன்று இஸ்லாம் அல்லாத, அதற்கு எதிரான உலகம். இந்த எதிரான உலகில் எல்லா மதங்களும், சமுதாயங்களும் ஒருங்கிணைக்கப் பட்டன.

இதன்பின் அங்கிங்கெனாதபடி எல்லா இடங்களிலும் முஸ்லிம்கள் அனைவரும், தீவிரவாதிகளாகச் சித்திரிக்கப்பட்டார்கள்.

புஷ் எடுத்த எடுப்பிலேயே இஸ்லாமிய உலகிற்கு எதிரான முழுத் திட்டத்தையும் அறிவித்துவிடவில்லை. முதலில் ஒசாமா பின்லேடன் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த தாலிபன் ஆட்சியைக் குறிவைத்துப் பேசினார். இடைஇடையே சதாம் ஹூசைன் அவர்களின் பெயரையும் குறிப்பிட்டார்.

தாலிபான்களும் அவர்களின் இஸ்லாமிய ஆட்சியும் முதல் குறி என்றால், சதாம் ஹூசைன் அடுத்தக் குறி என அறிவித்தார். ஆனால் யதார்த்தத்தில் சதாம் ஹூசைனுக்கும், 9/11 என்ற அமெரிக்காவின் இரட்டைக் கோபுர தாக்குதலுக்கும் எந்த சம்மந்தமுமில்லை. ஆனால், சதாம் ஹூசைனையும் ஆட்சியிலிருந்து அகற்றிட வேண்டும் என கர்ஜித்தார்.

புஷ்-இன் இந்த நீண்டநாள் திட்டம், அவருடைய அமைச்சரவையிலிருந்த அனைவரையும் உற்சாகமூட்டியது. துணை அதிபர் அல்லது அமெரிக்காவின் துணை குடியரசு தலைவர் டிக் சென்னி - Dick Chenny, இராணுவ தலைமையகத்தின் தலைவர் டோனால்ட்டு ரம்ஸ்ஃபீல்டு Donald Rumsfeld இன்னும் அங்கே இருந்த பழமைவாதிகள் இவர்கள் இன்னொரு திட்டத்தோடு வந்தார்கள். மத்திய கிழக்கு நாடுகளை முற்றாக மாற்றி அமைப்பது. முதலில் ஈராகிலுள்ள சர்வாதிகாரியை மாற்றி அமைப்பது. பின்னர் ஈரான், சிரியா ஆகிய நாடுகளுக்குச் செல்வது. இதுவெல்லாம் ஜனநாயகத்தை மத்திய கிழக்கு நாடுகளில் நிலைநாட்டிட எனப் பெயர் வைத்துக் கொண்டார்கள்.

ஆனால் உண்மையான நோக்கங்கள், அரபு நாட்டு வளங்கள், இஸ்ரேலையும் வலுப்படுத்துவது. குறிப்பாக இஸ்ரேலை சுற்றியுள்ள நாடுகளுக்கும் (அரபு நாடுகளுக்கும்) பக்கத்து நாடுகளுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்துவது.

இப்படி ஜனநாயகம், ஜனநாயகம் எனக் கூப்பாடு போடுவதிலுள்ள ஆபத்தை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

அது, 1991-இல் அல்ஜீரியாவில், இப்படித்தான் ஜனநாயகத்தை நிலைநாட்டிட சென்றார்கள். ஆனால், அங்கே நடந்த தேர்தலில், இவர்கள் படுதோல்வி அடைந்தார்கள். காரணம், அங்கே இருந்த (Islamist) என்ற இஸ்லாமியவாதிகள் பெருவாரியாக வென்றார்கள். இந்த இஸ்லாமிய வாதிகளைத்தான் இவர்கள், அதிகமாகப் பயந்தார்கள். (இந்த இஸ்லாமிய வாதிகளின் ஆட்சியை அகற்றிட பின்னர் இவர்கள் பிரான்ஸ் நாட்டு இராணுவத்தை ஏவினார்கள்)

இன்றைக்கு சிலுவைப் போர் 2 எனப்


vaigarai velicham official

பேசுகின்றவர்களுக்கும், சிலுவைப் போர் 1.0 எனப் பேசுகின்றவர்களுக்கும் இடையே நிரம்பவே ஒற்றுமைகள் உண்டு.

சிலுவைப் போர் ஒன்றுக்கு, பெரும்பாலான திட்டங்களை மெனிசியன் இறைக்கொள்கை தான் அடிப்படையாக அமைந்தது. அதில் முஸ்லிம்களும் - இஸ்லாமும்தான் எதிரிகளாகக் காட்டப்பட்டன. கிருஸ்தவர்களே அதைத் தொடங்கினார்கள். கிருஸ்தவ உலகை துணைக்கு அழைத்துக் கொண்டார்கள்.

இரண்டு சிலுவைப் போர்களுமே மததிய கிழக்கு நாடுகளை அதாவது முஸ்லிம் நாடுகளை மாற்றி அமைப்பதையே நோக்கமாகக் கொண்டவை. அவர்களது அணுகுமுறை இராணுவ நடவடிக்கைகள்.

ஆனால், முடிவில் அவர்களின் நோக்கம் நிறைவேறிடவில்லை. அதேநேரத்தில் இரண்டு சிலுவைப் போர்களிலும் மிகச்சிறந்த நாகரிகங்கள் அழிக்கப்பட இருந்தன. (அவற்றை இஸ்லாத்தை முன் வைத்துப் போராடியவர்கள் காப்பாற்றிவிட்டார்கள்)

இப்போதும் அதே வழிமுறைகளையே பின்பற்றுகின்றார்கள். இப்போது அதனை Global War on terror (Gowt) தீவிரவாதத்திற்கு எதிரான உலகளாவிய போர் எனப் பெயர் வைக்கின்றார்கள்.


தங்கள் எதிரிகளை முஸ்லிம்களை "Axis of Evil" தீமைடகளின் கூட்டணி என அழைகின்றார்கள்.

இதில் என்ன நடந்துகொண்டிருக்கின்றது என்பதை அடுத்த இதழில் பார்ப்போம்.

இன்ஷாஅல்லாஹ்.
தொடரும்.

பார்க்கு - (குறிப்பு ஆங்காங்கே
அடைப்புக்குள் வருபவை
மொழிபெயர்ப்பாளரின் குறிப்பு)



# சாதனை பெண்... ஷர்மிளா பேகம்.!



பெண்கள் படிக்கிறார்கள், வேலைக்குப் போகிறார்கள். கணவனே இருந்தாலும் அவனிடம் தன்னுடைய சொந்த செலவிற்கு எதிர்பார்க்கக் கூடாது என்று நினைக்கிறார்கள். அவர்கள் திருமணத்திற்குப் பிறகு கணவன், குழந்தை, குடும்பம் என்றும் மேலும் பொறுப்புகள் கூடினாலும், வேலையினை கைவிடக்கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருக்கிறார்கள். அதற்காக தங்களின் கல்வித் தகுதியை அதிகரிக்க மேலும் படிக்கிறார்கள். சில பெண்கள் போட்டித் தேர்வுகளுக்கு தங்களை தயாராக்கிக் கொள்கிறார்கள். குடும்பப் பொறுப்புகளுக்கு இடையில் மேலும் படிப்பது, வேலைக்குச் செல்வது என்று பார்க்கும் போது பெண்கள் மல்டிடாஸ்கர்கள் என்பதில் சந்தேகமில்லை. அந்த வரிசையில் இடம் பெற்றுள்ளார் 36 வயதான ஷர்மிளா பேகம்.

குமரி மாவட்டம், வடக்கு சூரங்குடியைச் சேர்ந்தவர். தமிழக அரசின் சென்னை தலைமைச் செயலகத்தின் சட்டப் பிரிவில் 'மொழிப் பெயர்ப்பாளர்' பணிக்கு தேர்வு செய்யப்பட் டுள்ளார். ஐந்து குழந்தைகளுக்குத் தாயான ஷர்மிளா பேகம் தன் குடும்பப் பொறுப்புகளுக்கு இடையே அரசு வேலைக்காக மிகவும் உழைத் துள்ளார்.

“திருமணத்தின் போதே நான் இளங்கலைப் பட்டம் மற்றும் ஆசிரியர் பணிக்கான பி.எட்டும் முடித்திருந்தேன். என்னுடைய கணவர் பாளை யங்கோட்டை மத்திய சிறைச்சாலையில் காவலராக வேலை பார்த்து வருகிறார். ஆனால், அவரின் வேலையில் அவ்வப்போது பணி மாற்றம் இருக்கும். திருமணத்தின்போது அவருக்கு வேலூரில் வேலை என்பதால், நான் அங்குதான் இருந்தேன். நான் நன்றாக படிப்பேன் என்பதால், என் கணவர் வீட்டில் சும்மா இருக்காமல், சட்டம் பட்டப்படிப்பு படிக்கச் சொல்லி ஊக்குவித்தார். வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் பி.எல் வகுப்பில் சேர்ந்தேன். நான் பட்டதாரி என்பதால் மூன்றாண்டுகள் சட்டம் படித்தால்போதும். இளங்கலை பட்டம் பெறாதவர்கள்தான் ஐந்தாண்டுகள் படிக்க வேண்டும். சட்டப் படிப்பிலும் நல்ல மதிப் பெண்கள் பெற்று தேர்வானேன்.

இதற்கிடையில் எனக்கு குழந்தைகளும் பிறந்தது. ஐந்து குழந்தைகள் என்பதால் நான் வேலைக்குச் செல்லாமல் அவர்களை பராமரிப் பதில் கவனம் செலுத்தினேன். என்னுடைய கடைசி மகனுக்கு ஒரு வயதானபோது என் கணவருக்கு கடலூர் சிறைக்கு மாறுதல் கிடைத் தது. நான் கும்பகோணத்தில் தங்கி இருந்தேன்.

மேலும், நான் போட்டித் தேர்வுகளுக்காக படித்துக் கொண்டிருந்ததால், என் அம்மா எனக்கு உடன் துணையாக இருந்தார். குழந்தைகள் அனைவருக்கும் சிறு வயது என்பதால், என்னுடைய பயிற்சி மற்றும் குழந்தைகளுக்கு என தனிப்பட்ட நேரம் ஒதுக்க ரொம்பவே சிரமமாக இருந்தது. இருந்தாலும் குழந்தைகளுக்கு தாயின் அரவணைப்பு அவசியம் என்பதால், பயிற்சி முடித்து எந்நேரம் வந்தாலும், அவர்களுடன் சில மணி நேரங்களை செலவிட தவறமாட்டேன்.

சட்டப் படிப்பு முடித்த சில மாதங்களில் கணவருக்கு பாளையங்கோட்டைக்கு மாறுதல் கிடைத்தது. அதனால் மீண்டும் நான் குழந்தை யுடன் சொந்த ஊருக்கே வந்துவிட்டேன். வீட்டில்


vaigarai velicham official

அம்மா குழந்தைகளை பார்த்துக்கொள்ள நான் சட்டப்படிப்பு முடித்துவிட்டு வீட்டில் சும்மா இருக்க விரும்பாமல், தமிழ்நாடு பார் கவுன்சிலில் பதிவு செய்து நாகர்கோவில் மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பயிற்சி பெற ஆரம்பித்தேன். அதே சமயம் தமிழக அரசின் போட்டித் தேர்வுகளுக்கும் என்னைத் தயார் படுத்திக்கொள்ள ஆரம்பித்தேன்.


ஆனால், என்னால் அதில் வெற்றி பெற முடியவில்லை. குடும்பப் பொறுப்புகள், வழக்கறிஞராகப் பயிற்சி, குழந்தைகள் பராமரிப்பு என்று பல வேலைகள் இருந்ததால், போட்டித் தேர்வுகளுக்கு அதிகக் கவனம் செலுத்த முடியவில்லை. ஒரு மதிப்பெண்ணில் வேலை கிடைக்காமல் போயிருக்கிறது. ஆனால், மனம் தளரவில்லை. அதற்கு என் கணவர்தான் காரணம். அவர்தான் நான் தளரும்போது எல்லாம் எனக்கு ஊக்கம் அளித்து வந்தார்.

சென்ற ஆண்டு அரசு சட்டத் துறையில் மூன்று மொழிப்பெயர்ப்பாளர்கள் வேலை இருப்பதாக அறிவிப்பு வந்தது. ஒரு பதவி பிற்படுத்தப்பட்டவருக்கு,

இன்னொரு பதவி மிகவும் பிற்படுத்தப் பட்டவருக்கும், மூன்றாவது முஸ்லிம்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த ஒரு வேலைக்கு நான் விண்ணப்பித்தேன். ஒரு பதவி ஆனால், போட்டி அதிகம். நான் மற்றவர்களை விட நல்ல மதிப்பெண் பெற்றிருந்ததால், அந்த வேலை எனக்கு கிடைத்தது. இம்மாதம் பணியிலும் சேர்ந்துவிட்டேன். குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள உடன் அம்மா இருக்கிறார்.

ஆனால், அவர் ஒருவரால் மட்டுமே ஐந்து குழந்தைகளையும் பார்த்துக்கொள்ள முடியாது என்பதால் அவருக்கு உதவியாக ஒருவரை வைத்திருக்கிறேன். குழந்தைகளை பள்ளியில் சேர்க்க வேண்டும். சென்னை எனக்கு புதுசு. புதிய இடம். பரந்து விரிந்த நகரம். பொறுப்பு களும் மேலும் கூடியிருக்கிறது. இதற்கிடையில் அரசு வழக்கறிஞர் பதவிக்கு முதல் சுற்று போட்டித் தேர்வில் தேர்வாகியுள்ளேன்.

இறுதிக்கட்ட போட்டித் தேர்வு இம்மாத கடைசியில் சென்னையில் நடக்க உள்ளது. அதற்கும் என்னைத் தயார் படுத்தி வருகிறேன். எனக்காக என் கணவர் விடுப்பு எடுத்து எனக்கு உறுதுணையாக இருந்து வருகிறார். வாழத் தானே வாழ்க்கை... வாழ்ந்து காட்டுவோம் என்ற உந்துதலில் தொடர்ந்து பயணிக்க தீர்மானித்துள்ளேன்" என்கிறார் ஷர்மிளா பேகம். ■


அமெரிக்காவின் நிறவெறி கொள்கையை இஸ்லாத்தை முன் வைத்து முறியடித்த மாவீரன் மால்கம் X என்ற மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீத். தான் இஸ்லாத்தை ஏற்றார், அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கறுப்பு நிறத்தைக் கொண்டவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். நிறவெறிக் கொடுமைகளிலிருந்து நிரந்திரமாக மீட்டார்.

"ஹஜ்" பயணம் என்ற புனித மக்கா மாநகரம் சென்று இஸ்லாம் தொடங்கிய பூமியில் தன் கடமையை முடித்தார். சவூதி அரேபியா அரசின், அரசு விருந்தினர் என்ற கண்ணியத்தோடு.

16 ஆப்ரிக்கா நாடுகளுக்குச் சென்று இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தார். லட்சக்கணக்கானவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யும் தனது பெரும் பயணத்தின் ஒரு பகுதியாக, "கேசியஸ் கிளே" என்ற உலக மகா குத்துச் சண்டை வீரனை முஹம்மத் அலீ கிளேயையும் இஸ்லாத்தில் இணைத்தார்.

ஆனால், அமெரிக்காவின் வெள்ளை நிறவெறியர்களால், இதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவர்கள் அதாவது, குமு கிளக்ஸ் கிளான் என்ற வெள்ளை நிற அமைப்பைச் சார்ந்தவர்கள் அமெரிக்காவின் உளவுத்துறையின் உதவியோடு மால்கம்-X அவர்களை பிப்ரவரி 21-1965 இல் கொலை செய்து விட்டார்கள்.

தொடர்புக்கு: 7401213394/7358278146/8148129887

# தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் சார்பில் 2025 ஜுன்-29 அன்று புதுச்சேரி ஆவூராணி கிராமத்தில்

# ஈத்மிலன் எனும் பெருநாள் சந்திப்பு (சமூக நல்லிணக்கக் கூட்டம்)

நபி (ஸல்) அவர்களின் தனது இருபத்தி மூன்று கால இஸ்லாமிய பயணத்தில் அவர்களின் பிரதானமான இஸ்லாமிய அழைப்புப் பணி கோத்திரங்களை நோக்கி இஸ்லாத்திற்கு அழைப்பு கொடுப்பது. அதாவது தனிநபர் தாவாவிற்கு பிறகு நபி (ஸல்)அவர்கள் குறிபிட்டு சில கோத்திரங்களை நோக்கியும் அதன் தலைவர்களை நோக்கியும் இஸ்லாத்தின்பால் அழைப்பு விடுத்தார்கள். ஏனென்றால் அவ்வகையான அழைப்பில் தான் அந்த மக்கள் முற்றிலுமாக ஒரு தனிப்பட்ட மனிதனுக்கு அடிமையாக வாழ்ந்து கொண்டிருந்த நிலைமை நீங்கி அல்லாஹ்விற்கு அடிபணிவதன் மூலம் சகோதரத்துவம், சமத்துவம், சமநீதி போன்றவற்றை பெற்று, மனிதர்களுக்கே உள்ள அடிப்படை உரிமைகளை பெற்று சந்தோஷமாக வாழ்தனர்.

கடந்த 45 வருட காலங்களுக்கு மேலாக தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் சார்பாக இதே போன்றதொரு அழைப்பு பணியை தான் ஈத்மிலன் எனும் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி மூலம் செய்து வருகின்றோம்.

ஒவ்வொரு ஆண்டு காலமும் சில கிராமங்களை தேர்ந்தெடுத்து அந்த கிராமத்தின் தலைவர் முதல், முக்கியஸ்தர்கள், இளைஞர்கள், பெண்கள், குழைந்தைகள் வரை அனைவருக்கும் இஸ்லாத்தை கொண்டு சேர்ப்பது தான் இதன் நோக்கம். இவ்வகையான நிகழ்ச்சிகள் மூலம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் எண்ணிக்கை ஏராளம்.

அதன் அடிப்படையில் தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் (நாகை திருவாரூர் கிளை) சார்பாக நாகப்பட்டினம் மாவட்டம் சிக்கல் ஊராட்சிக்கு அருகில் உள்ள ஆவுராணி புதுச்சேரி எனும் கிராமத்தில் ஈத்மிலன் எனும் பெருநாள் சந்திப்பு (சமூக நல்லிணக்க கூட்டம்) ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் இந்த கிராமத்தை சேர்ந்தவர்கள் மட்டும் அல்லாமல் சுற்றியுள்ள கிராமத்தினருக்கும் அழைப்பு கொடுக்கப்பட்டது. இதில் 150க்கும் மேற்பட்ட மக்களுக்கும், குடும்பங்களுக்கும் இஸ்லாத்தை நோக்கி நேரடி அழைப்பு விடுக்கப்பட்டது. இதில் இஸ்லாமிய அழைப்பு பணியில் உள்ள மூத்த அழைப்பாளர்களைக் கொண்டு இஸ்லாத்தை நோக்கி அழைக்கும் பணி செவ்வையாக நடந்து முடிந்தது.

நிகழ்வின் தொடக்கத்தில் அல்லாஹ்வின் வார்த்தையான குர்ஆனை கொண்டு நிகழ்ச்சி தொடங்கப்பட்டது.

### சகோதரர் திருப்பூர் காதர் முகைதீன் அவர்களின் உரை



முதற்கட்டமாக நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் சார்பாக சகோதரர் திருப்பூர் காதர் முகைதீன் அவர்கள் பேசினார்கள். அவர் பேசுகையில் இந்தியாவில் தற்கால சூழ்நிலையில் நிலவுகின்ற சமூக நல்லிணக்கத்திற்கு விளைவிக்கும் எதிரிகளையும், அவர்களின் திட்டங்களையும் அங்கிருந்து அவர்களுக்கு எளிதாக புரியும்படி விளக்கினார்.



vaigarai velicham official

மேலும், நமது தமிழ்நாட்டின் முதுகெலும்பான வெவ்வேறு மதத்தைச் சார்ந்தவர்களுக்கு இடையேயான சகோதரத்துவத்தையும், வேற்றுமையில் ஒற்றுமையை பேணி பாதுகாப்பதை உறுதிபடுத்தும் உரையாக தம்முடைய உரையை அழகாக அமைத்தார்.

## சகோதரர் சிராஜுதீன் அவர்களின் உரை

இறை வேதமான குர்ஆன் மூலமாக உயர்ந்தோனாகிய இறைவன் இவ்வுலக மானிடர்களுக்கு இடும் கட்டளைகளைக் கொண்டு அங்கு இருந்தோர்களை இஸ்லாத்தை நோக்கி சிறப்பாக அழைத்தார்.



அத்தியாயம் 6 வசனங்கள் 151, 152, 153 இல் கூறப்பட்டுள்ள கட்டளைகளை விரிவாக விளக்கினார்.

வாருங்கள்! உங்கள் இறைவன் உங்களுக்குத் தடை செய்ததைக் கூறுகிறேன்" என்று

(முஹம்மதே!) கூறுவீராக!

அது, "நீங்கள் அல்லாஹ்வுக்கு எதையும் இணையாக்கக் கூடாது" என்பதே. பெற்றோருக்கு உதவுங்கள்! வறுமையின் காரணமாக உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள்! உங்களுக்கும், அவர்களுக்கும் நாமே உணவளிக்கிறோம். வெட்கக்கேடான காரியங்களில் ஈடுபடாதீர்கள்! அல்லாஹ் தடை செய்துள்ளதால் எவரையும் (அதற்கான) உரிமை இருந்தால் தவிர கொல்லாதீர்கள்! நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக இதையே அவன் உங்களுக்கு வலியுறுத்துகிறான். (அல்குர்ஆன் 6:151)

அனாதையின் செல்வத்தை அவன் பருவமடையும் வரை அழகிய முறையில் தவிர நெருங்காதீர்கள்! அளவையும், நிறுவையையும் நேர்மையாக நிறைவேற்றுங்கள்! எவரையும் அவரது சக்திக்குமேல் சிரமப்படுத்த மாட்டோம். உறவினராகவே இருந்தாலும் பேசும்போது நீதியையே பேசுங்கள்! அல்லாஹ்வின் ஒப்பந்தத்தை நிறைவேற்றுங்கள்! நீங்கள் படிப்பினை பெறுவதற்காக அவன் இதையே உங்களுக்கு வலியுறுத்துகிறான். (அல்குர்ஆன் 6:152)

இதுவே எனது நேரான வழி. எனவே இதனையே பின்பற்றுங்கள்! பல வழிகளைப் பின்பற்றாதீர்கள்! அவை, அவனது (ஒரே) வழியை விட்டும் உங்களைப் பிரித்து விடும். நீங்கள் (இறைவனை) அஞ்சுவதற்காக இதையே அவன் உங்களுக்கு வலியுறுத்துகிறான். (அல்குர்ஆன் 6:153)

மேற்கண்ட வசனங்கள் மூலம் இஸ்லாத்தை குர்ஆனிலிருந்தே, அல்லாஹ்வின் அழகிய கட்டளைளை கொண்டே இஸ்லாத்தை நோக்கி அழைத்தார்கள். அல்லாஹ் அவர்களுக்கு அருள் புரிவானாக!!

## மூத்த இஸ்லாமிய அழைப்பாளர் சகோதரர் ஜக்கரிய்யா அவர்களின் உரை

மூன்றாவதாக பேசிய மூத்த இஸ்லாமிய அழைப்பாளர் சகோதரர் ஜக்கரிய்யா அவர்கள் தன்னுடைய வாழ்க்கை வரலாற்றையே இஸ்லாமிய அழைப்பாக மாற்றினார். தான் இஸ்லாத்தை தழுவுவதற்கு முன்பாக



என்னென்ன கொடுமைகளை அனுபவித்தார்கள் என்பதை கண் முன்னே கொண்டு நிறுத்தினார். பின்பு இஸ்லாத்தை ஏற்றதன் மூலம் இஸ்லாம் தன்னை எவ்வாறு கண்ணியப்படுத்தியது என்பதையும் அவர்களுக்கு முன்னே சமர்ப்பித்து அங்கிருந்தோர்களை ஆர்வமூட்டினார். ஒரு பக்கம் இஸ்லாத்தை ஏற்பதற்கு முன்பு இருந்த வலிகள், மற்றொரு புறம் இஸ்லாத்தை ஏற்றதற்கு பிறகு உள்ள இன்பமான வாழ்க்கை என மாறி மாறி கூறி இஸ்லாத்தை எதார்த்தமாக எத்தி வைத்தார்.

## ஜக்கரிய்யா அவர்கள் பேசுகையில்

"நான் இஸ்லாத்துக்கு போன நோக்கம் எனக்கானது அல்ல தம்பி! நான் பட்ட அவமானமும், வேதனையும் என் பிள்ளைகளும், பேரன்களும் படக்கூடாது என்பதற்காக தான். என் பரம்பரை மாறிவிட்டது. முன்னாடி என்னைதான் கண்ணையன், சக்கிலியன்னு சொல்லுவாங்க ஆனா என் பிளையையோ, பேரனையோ, சொல்ல முடியாது. தீண்டாமை ஒழிப்பதற்கு ஒரு உன்னதமான மார்க்கம் இஸ்லாம் மட்டுமே" இந்த இஸ்லாத்திற்கு நீங்களும் வர வேண்டும். நான் பெற்ற விடுதலை சுதந்திரம் நீங்களும் பெற வேண்டும் என பேசினார்.

"இதுக்கு பஸ்ஸ மறிக்க வேண்டியது இல்ல, ரத்தம் சிந்த வேண்டியதில்ல, ஆயுதம் தூக்க வேண்டிய அவசியம் இல்ல, லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (வணக்கதிற்குரிய இறைவன் அல்லாஹ் ஒருவனே, முஹம்மது (ஸல்) இறைவனின் தூதர்) என்று கூறினாலே போதும், 'ஒரே நொடியில் தீண்டாமை ஒழிந்துவிடும்'. என்று கூறி இஸ்லாத்தின்பால் அழைப்பு விடுத்தார்"

## சகோதரர் வாஞ்சை கரிகாலன் அவர்களின் உரை

இந்த பெருநாள் சந்திப்பில் பொதுவான மக்கள் மட்டும் அல்லாமல், கட்சியின் முக்கிய பொருப்பில் உள்ள முக்கிய நிர்வாகிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. அவ்வழைப்பை ஏற்று நிகழ்ச்சி நடக்கும் இடத்திற்கு, நிகழ்ச்சி நடப்பதற்கு முன்பாக வருகை தந்து நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களை கண்ணியப்படுத்தினார்



சகோதரர் வாஞ்சை கரிகாலன்.

நிகழ்ச்சியின் இறுதியில் வாய்ப்பு வழங்கவே ஒலிவாங்கியை பெற்ற சகோதரர் கரிகாலன் கம்பீரமாக பேச தொடங்கினார்.

அம்பேத்கரின் தொலை நோக்கு பார்வை, பெரியாரின் பகுத்தறிவு, சமூகத்தின் ஏற்றத் தாழ்வுகள், என அனைத்தயும் அவர் பேச பேச மக்களுக்கு ஆர்வம் கூடவே செய்தது. குறிப்பாக அங்கு குழுமியிருந்த இளைஞர்களுக்கு விருப்ப மான நட்சத்திர பேச்சாளராகவே மாறினார்.

இந்த சமூகத்தின் விடுதலையை மிக சிறப்பாக தெளிவாக எல்லோருக்கும் தெளிவாக விளக்கினார்.

## சகோதரர் வாஞ்சை கரிகாலன் அவர்கள் பேசுகையில்

அன்பு தோழர்களே!


நான் மனிதனாக பிறந்தேன். நான் மனித னாகவே வாழ்ந்து வருகிறேன். ஆனால் இந்த சமூக கட்டமைப்பில் நான் ஒரு தாழ்த்தப் பட்ட சமூகத்தில் இருப்பதாகவும், நான் ஒரு தாழ்த்தப்பட்டவனாகவும், தீண்டதகாதவ னாகவும், நான் மனிதனாக வாழ்வதற்கு தகுதி இல்லாதவனாகவும் மாற்றப்பட்டுள்ளேன். நான் அறிவிலும், ஆற்றலிலும் எதில் உங்களை விட தகுதி குறைச்சல்?. அந்த கோயிலை உருவாக் கியது நான்! அந்த கோவில் கட்டுவதற்கு இடத்தை கொடுத்தது நான்! என்னுடைய தாத்தன், முப்பாட்டனுடைய உழைப்பு அந்த கோயிலில் இருக்கிறது, ஆனால் என்னுடைய உழைப் பையும் எடுத்துக்கொண்டு, என்னுடைய ஆற்றலையும் எடுத்துக்கொண்டு, என்னுடைய பொருளாதாரத்தையும் எடுத்துகொண்டு, நான் உள்ளே வந்தால் தீட்டு என்று சொல்கிறது இந்த இந்து மதம். ஆகையால் தான் புரட்சி


vaigarai velicham official

யாளர் அம்பேத்கர் சொன்னார் நான் இந்துவாக பிறந்திருக்கலாம் ஆனால் இறக்கும் பொழுது கண்டிப்பாக நான் இந்துவாக மரணிக்க மாட்டேன் என்று, சொன்னது மட்டும் அல்லாமல் அதன்படி வாழ்ந்து மறைந்தார் புரட்சியாளர் அம்பேத்கர். எத்தனை அவமானங்களை சுமந்திருப்பார்? அதன் காரணமாக எத்தனை ஆய்வுகளை அவர் செய்திருப்பார்?. கல்வியில் பல்வேறு பட்டங்களை பெற்ற அவருக்கு, படிக்கிற காலங்களில் அவருக்கு கல்வி மறுக்கப்பட்டது, பெண்களுக்கு கல்வி இல்லை, பெண்கள் என் முன்பு அமர்ந்திருக்கின்றீர்கள் செவி கொடுத்து கேட்கின்றீர்கள், ஆனால் முற்காலத்தில் பெண்கள் வெளியே வர முடியாமல், கல்வி கற்க முடியாமல் கணவனுக்கு ஒரு இயந்திரமாகவே பழக்கப்பட்டாள். இப்படி மனிதனுக்கு தர வேண்டிய அடிப்படை உரிமைகளை கூட தர மறுத்தது தான் இந்த இந்து மதம். என் தாத்தன், அப்பன் வேஷ்டி கட்டி இருந்தாங்க இப்ப நான் பேண்ட் போட்டு இருக்கேன், அவ்வளவுதான் வித்தியாசம் தீண்டாமை ஒழிந்துவிட்டதா..? இல்லை! நான் நின்னால் தீட்டு, உட்கார்ந்தால் தீட்டு, குடித்தால் தீட்டு, பேசினால் தீட்டு, என இன்றளவும் தீண்டாமை வளர்ந்து கொண்டே தான் செல்கின்றது.

ஆனால் நாமெல்லாம் இந்துக்கள் எனக் கூறுகிறார்கள் எவ்வளவு வெட்கப்பட வேண்டிய விடயம் இது. மனிதனா பிறந்த என்னைய, சக மனிதனா பார்க்க வேண்டிய என்னைய, நீ ஒரம் கட்டப்பட்டவன், ஒதுக்கப்பட்டவன், தீண்ட தகாதவன், என ஒதுக்குனது இந்த இந்து மதம் . இந்த மதத்தில் இருப்பது முட்டாள்தனமானது,. புரட்சியாளர் அம்பேத்கர் சொன்னதுபோல நானும் நான் இந்த மேடையில் சொல்கிறேன் நான் இந்துவாக பிறந்தேன் ஆனால் இந்துவாக இறக்க மாட்டேன். கண்டிப்பாக இந்த மதத்தை விட்டு வேறொரு மதத்துக்கு செல்வதாக இருந்தால் அதற்கு நான் தேர்ந்தெடுக்க வேண்டிய மதம் கண்டிப்பாக அது இஸ்லாமாகத்தான் இருக்கும். ஏனென்றால் நான் பசியில் கிடக்கும்போது என்னுடைய ஆத்தா இஸ்லாமியர் வீட்டிற்கு சென்று வேலை செய்து வந்த உணவே எனது பசியை ஆற்றியது, இந்த உலக மானுடர்கள் என்னை ஒதுக்கும் பொழுது என்னை சகோதர னாக கட்டி தழுவியது இஸ்லாம். கண்டிப்பாக ஒருநாள் நான் இஸ்லாமியனாக மாறுவேன் என கர்ஜித்தார். இவரின் இந்த உணர்ச்சியூட்டும் உரையை அங்கு இருந்தோர்கள் கண் சிமிட்டாமல் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சகோதரர் வாஞ்சை கரிகாலன் அவர்களுக்கு நேர் வழியை கொடுக்க இக்கட்டுரையை வாசிக்கும் அனைவரும் எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்தனைச் செய்யவும்.





## இறுதியாக மூத்த இஸ்லாமிய அழைப்பாளர் ஜக்கரியா அவர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு

இஸ்லாத்தை வாழ்வியலாக ஏற்றுக்கொண்டு சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து இஸ்லாமிய அழைப்பு பணி செய்து வரும் மூத்த இஸ்லாமிய அழைப்பாளர் சகோதரர் ஜக்கரியா அவர்களுக்கு ஷஹீத் சையது அஹமது அவர்களின் பெயரால் இதையங்களால் இணைக்கப்பட்டவர் எனும் விருதை தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் சார்பாக வழங்கப்பட்டது. இவ்விருதை சகோதரர் வாஞ்சை கரிகாலனுடன் சேர்ந்து நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் சகோதரர் முஹமது மொய்தீன் வழங்க மூத்த இஸ்லாமிய அழைப்பாளர் ஜக்கரியா அவர்கள் பெற்று கொண்டார்கள்.


# ரேபிஸ் எனும் வெறிநாய்க் கடி நோய்!



**எஸ். ஆதித்யா,** இரண்டாம் ஆண்டு மருத்துவக் கல்லூரி மாணவர், ஜிப்மர் மருத்துவக்கல்லூரி, புதுச்சேரி.

**ச**மீப காலமாகத் தெருக்களில் நாய்கள் அதிகமாக இருப்பதைக் காணமுடிகிறது. அதில் எது நல்ல நாய், எது வெறிநாய் என்று கண்டறிய முடியாது. முதியோர் பலர் காலையில் பூங்காவுக்கோ, வெளியிடங்களுக்கோ செல்லும்போது நிறைய நாய்களைப் பார்க்க முடிகிறது. ஆகையால் ரேபிஸ் நோய் பற்றித் தெரிந்து கொள்வது அவசியம்.

ரேபிஸ் என்பது மூளையையும் நரம்பு மண்டலத்தையும் பாதிக்கக்கூடிய உயிர்கொல்லி நோய். இது லிசா வைரஸ் டைப் ஒன் என்ற வைரஸினால் பரவுகிறது. இந்த வைரஸ் மனிதர்களுக்கு விலங்கினங்கள் மூலமாக, முக்கியமாக நாய், பூனை மற்றும் வவ்வால் போன்றவை கடிப்பதனால் அல்லது அதனுடைய நகம் படுவதால் அல்லது உமிழ்நீர் படுவதனால் பரவுகிறது. இந்த வைரஸ், பாதிக்கப்பட்ட விலங்கினத்தின் உமிழ்நீரில் இருக்கிறது. வைரஸ் கிருமித்தொற்று ஏற்பட்டு அதனுடைய அறிகுறிகள் தெரிவதற்கு ஒரு வாரம் முதல் பல வருடங்கள் வரை சராசரியாக ஒன்றிலிருந்து மூன்று மாதங்கள் ஆகும். இந்த வைரஸ் மிகவும் மோசமான உயிர்க்கொல்லி நோய். அதனால் இதற்கான சிகிச்சையை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.




### இந்த வைரஸ் மனிதர்களுக்கு எவ்வாறு பரவுகிறது?

மனித உடலில் சென்றடவுடன் இந்த ரேபிஸ் வைரஸ் ஆனது மனிதர்களில் திசுக்களில் பெருகி, நரம்பு மண்டலத்தைப் பாதிக்கிறது. அதன்மூலம் மூளையைச் சென்றடைந்து மற்ற தசைகள், உமிழ்நீர்ச் சுரப்பிகளுக்குப் பரவுகிறது.

### இந்த ரேபிஸ் கிருமியின் அறிகுறிகள்

முதலாவதாகக் கடிபட்ட இடத்தில் ஒரு வகையான வலி, சோர்வு நிலை, தலைவலி, தொண்டை எரிச்சல் மற்றும் காய்ச்சல் போன்றவை மூன்றிலிருந்து நான்கு நாட்கள் இருக்கும். அவர்களால் அதிகப்படியான ஒலி, ஒளி மற்றும் மிதமான காற்றைக்கூடத் தாங்க முடியாது. இந்த வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மன ரீதியாகப் பயம், கோபம், அசாதாரண நிலை ஏற்படும். அவர்களால் தண்ணீரை விழுங்க முடியாது. சிறிய சத்தத்தை கூடத் தாங்க முடியாது. தண்ணீர் விழும் சத்தத்

தினால்கூட அவர்களுக்கு தொண்டைச் சதைகள் எல்லாம் இறுக்கமடையும்.

இந்த நிலை தொடரும்போது நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இறப்புகூட நேரிடலாம். இந்த வைரஸினால் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து அவர்களுடைய உமிழ்நீர், வாந்தி மற்றும் உடல் திரவத்தின் மூலம் பரவுகிறது.

**ரேபிஸ் நோயை எவ்வாறு தடுப்பது?**
**வைரஸ் தொற்று ஏற்பட்ட பின்**

மேலே குறிப்பிட்ட விலங்கினங்களின் நகம் படுவதாலோ, கடி படுவதாலோ (ரத்தம் வராமலும்) அல்லது காயத்தின் மேல் நாக்கின் உமிழ்நீர் படுவதாலோ வைரஸ் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது.

மேலே குறிப்பிட்ட எந்த வகையான தொடர்பும் வவ்வால்கள் மூலம் ஏற்பட்டால் தொற்றுவர வாய்ப்பு மிக அதிகம்.

மேலே கூறிய ஏதாவது ஒருவகையான தொடர்பு ஏற்பட்டால் அந்த இடத்தை நன்றாக சோப்பு போட்டு ஓடும் நீரில் 15 நிமிடங்கள் கழுவ வேண்டும். இவ்வாறு கழுவினால் தொற்று ஏற்படும் வாய்ப்புக் குறையும்.


அன்றே உடனடியாக மருத்துவமனையை அணுகித் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். ARV தடுப்பூசி ஐந்து முறை போட வேண்டும். முதல் தவணை போடும்பொழுது ARV தடுப்பூசியுடன் ரேபிஸ் Immunoglobulin என்ற ஊசியையும் போட வேண்டும். மற்றும் 3,7,14 மற்றும் 28 தேதிகளில் மீதமுள்ள தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள வேண்டும்.

**தொற்று ஏற்படும் முன்?**

நாய், பூனை மற்றும் விலங்குகளின் தொடர்பு உடையவர்களுக்கு நோய் தொற்று ஏற்படாமல் இருக்க இந்த ARV தடுப்பூசியினை மூன்று முறை 0,7 மற்றும் 21 நாட்களில் போட்டுக்கொள்ள வேண்டும்.

**– நன்றி, முதுமை எனும் பூங்காற்று.**

# தூக்கமின்மையே துன்பப் பிரச்சனை!



- இந்தியாவில் 50% பேர் இரவு 11 மணிக்கு மேல்தான் உறங்கச் செல்கிறார்கள்.
- தூக்கத்தைக் கெடுக்கும் வகையில் 84% பேர் தூங்கப் போவதற்கு முன்புவரை செல்போனில் மூழ்கியிருக்கிறார்கள்.
- பணிச்சுமை காரணமாக 33% பேருக்கு உறக்கம் குறைகிறது. இரவில் நெடுநேரம் சமூக ஊடகங்களில் மேய்வதால் 51% பேருக்கு உறக்கம் தொலைகிறது. மன உளைச்சல் காரணமாக 35% பேருக்கு இரவில் சரியாகத் தூக்கம் வருவதில்லை.
- பெண்களுக்குத்தான் உறக்கமின்மை பாதிப்பு அதிகம். 49% பேர் 6-8 மணிநேரம் உறங்குகிறார்கள். 44% பேர் 4-6 மணிநேரம் உறங்குகிறார்கள்.
- இரவில் செல்போன் பார்ப்பதைக் குறைத்தால் தூக்கம் மேம்படுவதாக 38% பேர் சொல்கின்றனர். உழைப்பும், உடற்பயிற்சியும் இருந்தால் ஆழ்ந்த உறக்கம் சாத்தியமாவதாக 31% பேர் கூறுகிறார்கள்.

**– நன்றி ஆனந்த விகடன்**

# அநாதைகளைப் பற்றி இஸ்லாம்

மனித சமூகம் எதிர்கொள்கின்ற எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வை தரக்கூடிய ஒரே மார்க்கம் இஸ்லாம் மட்டுமே. அந்த வரிசையில் அநாதைகளை பராமரிக்கும் விஷயத்தில் இஸ்லாம் வழிகாட்டுவதுபோல் வலியுறுத்துவது போல் வேறு எந்த கொள்கையும் வழிகாட்ட வில்லை. மனித சமூகத்தில் அநாதைகள் படுகின்ற கஷ்டங்கள் பல இருக்கின்றன. அவர்களுக்கு அந்தஸ்து, மரியாதை மறுக்கப்படுகின்றது. அவர்களுக்கு சரியான உணவு, உடை, கல்வி கிடைப்பதில்லை. அவர்கள் பலஹீனத்தோடும், மனச் சோர்வோடும், பாதுகாப்பின்றியும்தான் வளர்ந்து வருகின்றார்கள். இன்று கஷ்மீர், பாலஸ்தீன் போன்ற இடங்களில் அநாதைகளின் எண்ணிக்கை கூடி வருகின்றது.

உலகில் இன்று 14.4 கோடி அநாதைகள் உள்ளனர். இவர்களுக்கும் ஆசியக் கண்டத்தில் மட்டும் 8.76 கோடி அநாதைகள் வாழ்கின்றனர். அதேநேரம் ஒவ்வொரு 14வது நொடியிலும் புதிதாக ஒரு அநாதைக் குழந்தை உருவாவ தாகவும், 2 நிமிடத்திற்கு ஒரு அநாதை வீதம் பராமரிப்பின்றியும் போதிய ஊட்டச்சத்து இன்றியும் இறப்பதாகவும் ஐ.நா. சபையின் கீழ் இயங்கும் சிறுவர் பாதுகாப்பு பிரிவான யுனிசெப் அறிவித்துள்ளது. ஐந்து வயதுக்கு குறைவான 50 லட்சம் அநாதைக் குழந்தைகள் இவ்வகையில் இறப்பதாகவும் மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாய் - தந்தை இழந்து எந்தவித உதவியும் கிடைக்காமல் கஷ்டப்படும் அநாதைகளை பராமரிப்பது முஸ்லிம்களின் கடமையாகும்.

“அநாதைகளைப் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள், நீர் கூறுவீராக.. அவர்களுக்குரிய சீர்த்திருத்தத்தைச் செய்தல் மிகவும் நல்லது. நீங்கள் அவர்களுடன் கலந்து (வாழ்வதாக) இருந்தால் அவர்கள் உங்கள் சகோதரர்களே” யாவார்கள். (அல்பகரா-220)

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

“அநாதைகளை ஆதரிப்பவர்கள் நாளை சொர்க்கத்தில் என்னோடு இரு விரல்கள் இணைந்தது போல மிக நெருக்கமாக இருப் பார்கள் என்று கூறிவிட்டு தனது இரு விரல் களையும் இணைத்து தூக்கிக் காண்பித்தார்கள்.” (புகாரி)

“தாம் எதைச் செலவிட வேண்டும் என்று உம்மிடம் கேட்கின்றனர். நல்லவற்றிலிருந்து நீங்கள் எதைச் செலவிட்டாலும், பெற்றோருக் காகவும், உறவினருக்காகவும், அநாதைகளுக் காகவும், நாடோடிகளுக்காகவும் (செலவிட வேண்டும்) நீங்கள் எந்த நன்மையைச் செய்தாலும் அல்லாஹ் அதை அறிந்தவன் எனக் கூறுவீராக” (அல்பகரா-215)

அநாதைகளை பராமரித்து வருகையில் அவர்களிடம் சொத்து இருந்தால் அதையும் நல்ல முறையில் பராமரித்து அவர்கள் பருவ வயது அடைந்ததும் அவர்களின் சொத்துக்களை நல்லமுறையில் திருப்பி கொடுக்க வேண்டும். இதில் எந்தவிதமான மோசடியும் செய்யக்கூடாது.

எவர் அநாதைகளின் சொத்துக்களை அநியாய மாக சாப்பிடுகிறாரோ அவர் வயிறுகளில் நெருப்பைத்தான் சாப்பிடுகிறார். மேலும் அவர் நரகத்தில் நுழைவிக்கப்படுவார். (அன்னிஸா-10)

“நீங்கள் அநாதைகளின் சொத்துக்களை (பருவ வயதை அடைந்தபின் குறைவின்றி) கொடுத்து விடுங்கள். (அதிலுள்ள) நல்லவற்றிற்கு பகரமாக கெட்டதை மாற்றி விடாதீர்கள். அவர்களுடைய பொருட்களுடன் சேர்த்து சாப்பிட்டு விடாதீர்கள். நிச்சயமாக அது பெரும் பாவமாகும்.” (அன்னிஸா-2)

“அநாதைகளை பராமரிப்பவர் செல்வந்த ராக இருந்தால் (அநாதையின் சொத்துக்களை சாப்பிடும் விஷயத்தில்) தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏழையாக இருந்தால் நியாயமான அளவு புசிக்கலாம். அநாதைகளின் பொருட்கள் அவர்களிடம் ஒப்படைக்கும்போது அதற்கான சாட்சிகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். கணக் கெடுப்பவற்றில் அல்லாஹ் போதுமானவன்.” (அன்னிஸா-6)

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் காலத்திலும் ஸஹாபாக்கள் காலத்திலும் அநாதைகளை கண்டு எடுத்து தன் குடும்பதில் ஒருத்தராக சேர்த்து அவர்களை பராமரித்து வந்தார்கள். ஆனால் இன்று அநாதைகளுக்கு என்று தனி ஆசிரமத்தை உருவாக்கி குடும்ப, சகோதர உறவுகளிலிருந்து பிரித்து, தனித்து வளர்த்து வருகிறோம். இப்படிப் பட்ட வளர்ப்புமுறை அநாதைகள் எதிர்பார்க்கும் எல்லாவிதமான தேவைகளும் நிறைவேறுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்




# வேர்கள்

## பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | **சிறையில் எனது நாட்கள்**<br>ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் | - ரூ.350.00 |
| 2. | **ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு**<br>மு. குலாம் முஹம்மது | - ரூ.140.00 |
| 3. | **சாதி ஒழிந்தது** - டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 4. | **End of Casteism** T.M. Mani | - ரூ.50.00 |
| 5. | **அஹமதாபாத் குண்டுவெடிப்புகள்**, மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 6. | **டெல்லி குண்டுவெடிப்புகள்**, மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 7. | **நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் விரிவாக்கப்பட்ட பதிப்பு** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 8. | **மால்கம்**-X, மு.குலாம் முஹம்மது | - ரூ.120.00 |
| 9. | **தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம்** டி.எம்.மணி | - ரூ.20.00 |
| 10. | **செந்தமிழ்நாட்டுச் சேரிகள்**, டி.எம்.மணி | - ரூ.40.00 |
| 11. | **கர்கரேயை கொலை செய்தது யார்?** | - ரூ.250.00 |
| 12. | **சிந்திப்பீர் செயல்படுவீர்**, நா.கோதண்டபாணி | - ரூ.15.00 |
| 13. | **ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்**, ப.கோபால கிருஷ்ணன் | - ரூ.40.00 |
| 14. | **சாதி ஒழிந்தது** (ஹிந்தி) டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 15. | **நாம் பிரிந்து விடவேண்டாம்**, பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.175.00 |
| 16. | **தாலிபானின் பிடியில்**, மு. குலாம் முஹம்மத் | - ரூ.150.00 |
| 17. | **தீண்டாமைக்குத் தீர்வு** | - ரூ.30.00 |
| 18. | **பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு**<br>மு. குலாம் முஹம்மத் | - ரூ.110.00 |
| 19. | **பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள்**, மு. குலாம் மஹம்மத், | - ரூ.90.00 |
| 20. | **இஸ்லாமிய நாகரிகம்**,<br>முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.130.00 |
| 21. | **கஷ்மீரின் பாதி விதவைகள்**, மு. குலாம் முஹம்மத், | - ரூ.70.00 |

| | | |
|---|---|---|
| 22. | **எது முதலில்?**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.450.00 |
| 23. | **சாதி ஒழிந்தது** (கன்னடம்) | - ரூ.50.00 |
| 24. | **அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன?**<br>டி.எம். உமர் ஃபாரூக் | - ரூ.20.00 |
| 25. | **கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்?** மு. குலாம் முஹம்மத் | - ரூ.30.00 |
| 26. | **முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம்**<br>செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.15.00 |
| 27. | **இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும்** | - ரூ.50.00 |
| 28. | **இஸ்லாம் வழங்கும் தண்டனைகள்** | - ரூ.40.00 |
| 29. | **இஸ்லாமும் விஞ்ஞானமும்** | - ரூ.30.00 |
| 30. | **இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா?** | - ரூ.50.00 |
| 31. | **இஸ்லாமும் பெண்களும்** | - ரூ.60.00 |
| 32. | **இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா?** | - ரூ.70.00 |
| 33. | **தேசப்பிரிவினைக்கு யார் காரணம்?**<br>விரிவாக்கப்பட்ட பதிப்பு, மு. குலாம் முஹம்மத் | - ரூ.100.00 |
| 34. | **திருக்குர்ஆன் கூறும் பொறுமை**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.80.00 |
| 35. | 26/11- **விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்?** | - ரூ.220.00 |
| 36. | **ஒரு தலித் போராளியின் வாழ்வும்,**<br>**அவர் காட்டிய வழியும்** - அ.மார்க்ஸ் | - ரூ.20.00 |
| 37. | **முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்**<br>வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.10.00 |
| 38. | **நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்?**<br>தி.லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் | - ரூ.10.00 |
| 39. | **குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்?**<br>சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - அபூ. அஃப்ரஹ் | - ரூ.25.00 |
| 40. | **இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன்**<br>**லேப்டாப்பில் இருந்ததென்ன?** | - ரூ.20.00 |
| 41. | **கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான்**<br>கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் | - ரூ.25.00 |
| 42. | **கூரியூர் ஜின்னா ஷஹீத்** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 43. | **முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும்** | - ரூ.20.00 |
| 44. | **இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு,** எஸ்.எம். முஷ்ரிப், | - ரூ.30.00 |
| 45. | **சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம்,**<br>**காந்திஜி கொலை ஏன்? எப்படி?** | - ரூ.30.00 |



vaigarai velicham official

46. **பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்** - ரூ.400.00
எஸ்.எம். முஷ்ரிப், IPS, தமிழில் : மு. குலாம் முஹம்மத்

47. **குஜராத் : 2002 பெண்கள் குழந்தைகளுக்கெதிரான கொடூரங்கள்,** தமிழில்: வளர்மதி - ரூ.150.00

48. **இஸ்லாம் ஒன்றே வழி!** - ரூ.120.00
அனிசுத்தீன் அஹமத், தமிழில் : மு. குலாம் முஹம்மத்

49. **இஸ்லாம் உங்கள் பார்வைக்கு** - ரூ.400.00
ஹமுத அப்த் அல் அத்தி, தமிழில் : மு. குலாம் முஹம்மத்

50. **முஸ்லிம்கள் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?** - ரூ.300.00
ஹள்ரத் அபுல்ஹஸன் நத்வி (ரஹ்), தமிழில் : மௌலவி அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ

51. **சீனாவின் பிடியில் உய்கூர் முஸ்லிம்கள்** - ரூ.20.00

52. **இஸ்லாம் நாங்கள் தேர்தெடுத்த மார்க்கம்** - ரூ.100.00

53. **முஹம்மது (ஸல்) நமது காலத்திற்கு அனுப்பப்பட்ட நபி** - ரூ.20.00
கரன் ஆம்ஸ்ட்ராங்

54. **நானொரு RSS முழுநேர ஊழியன் எனது வாழ்க்கைப் பயணம்** - ரூ.50.00

55. **பொதுசிவில் சட்டம் முழு வரலாற்று பின்னணி** - ரூ.50.00

56. **அலாவுத்தீன் கில்ஜியும் பத்மாவதியும்** - ரூ.40.00

57. **எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர்** - ரூ.60.00

58. **சிக்கல் நாயக்கன்பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை** - ரூ.60.00

59. **பா.ரஞ்சித் அவர்களின் உரையும் ஜி.வி.உமர் ஃபாரூக் அவர்களின் கவலையும்** - ரூ.25.00

60. **முஸ்லிம்களை வகுப்புவாதத்தின் பக்கம் இழுத்துக் கொண்டிருப்பது யார்** - ரூ.20.00

61. **அயா சோபியா உருவான வரலாறு** - ரூ.50.00

## எமது விற்பனையில்...

01. **கோவை கலவரத்தில் எனது சாட்சியம்** - ரூ.100.00
A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான்

02. **மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்** - ரூ.100.00
ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு

03. **குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள்** - ரூ.170.00
ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி,

04. **நாடார்கள் வரலாறு கருப்பா? காவியா?** - ரூ.140.00
தி.லஜபதி ராய், மூத்த வழக்கறிஞர்

05. **பலி கடாக்கள்** - ரூ.300.00

## BOOKS IN ENGLISH

| | | | |
|---|---|---|---|
| 1. | **END OF CASTEISM** - T.M. Umar Farooq,<br>English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam | | - Rs.50.00 |
| 2. | **THE GREAT BETRAYAL** - Elyass Davidson, By Pharos Media | | - Rs.695.00 |
| 3. | **MUHAMMED THE PROPHET FOR OUR TIME**<br>Karen Armstrong | | - Rs.325.00 |
| 4. | **KAFKA LAND - PREJUDICE LAW AND COUNTER TERRORISM** - Manisha Sethi | | - Rs.350.00 |
| 5. | **WHO KILLED KARKARE**<br>The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, | | - Rs.300.00 |
| 6. | **26/11 PROBE WAY JUDICIARY ALSO FAILED** - S.M. Mushrif | | - Rs.275.00 |
| 7. | **ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION**<br>Kamaluddin Ahamed | | - Rs.60.00 |
| 8. | **MUSLIMS AGAINST PARTITION OF INDIA**<br>Shamsul Islam, Pharos Media | | - Rs.280.00 |
| 9. | **PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN**<br>(EPITOMS OF HINDU MUSLIM UNITY) - Syed Naseer Ahamed | | - Rs.25.00 |
| 10. | **IMAGE AND SUBSTANCE-MODI'S FIRST YEAR OF OFFICE**<br>Nilofar Suhrawardy | | - Rs.150.00 |
| 11. | **Innocent Prisoners** | | - Rs.495.00 |
| 12. | **Brahminists Bombed Muslims Hanged** | | - Rs.350.00 |
| 13. | **Kodikkal- TheLiving Witness of Social Justice** | | - Rs.300.00 |

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. **ஜாதி ஒழிந்தது**

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. **ஜாதி ஒழிந்தது** - டி.எம். உமர் பாரூக் - ரூ.60.00
02. **நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி** - ரூ.30.00
கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்

# வேர்கள் பதிப்பகம்

52/1, கோனிக்கா பில்டிங், மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

G Pay **8148129887**
**Vaigarai Velicham Official**

தொடர்புக்கு : **8148129887, 7401213394**
வழியாக புத்தகம் ஆர்டர் செய்ய **9786214186**

**Vaigarai Velicham Official** **vaigarai velicham official**

**darultrust@yahoo.com** **Website : Darulislam.in**



Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002